# 5TH ANNUAL RESEARCH SESSION 2023

# PROCEEDINGS
## Abstracts

பன்மைத்துவச் சமூகங்களில்
கல்வியின் ஊடாக சமத்துவம், ஒப்புரவு, சமூகநீதி

**Equality, Equity, and Social Justice through Education in Pluralistic Societies**

Faculty of Arts and Culture
Eastern University, Sri Lanka

பன்மைத்துவச் சமூகங்களில் கல்வியின்
ஊடாக சமத்துவம், ஒப்புரவு, சமூகநீதி

Equality, Equity, and Social Justice through Education in Pluralistic Societies

# 5th Annual Research Session-2023

Faculty of Arts & Culture
Eastern University, Sri Lanka

**Title** : Equality, Equity, and Social Justice through Education in Pluralistic Societies


**Editorial Board**

**Chief Editor** : Dr. N. Pushparajah

**Co-editors** : Dr. K. Shrikarunakaran

Mrs. G. Luxmykanthan

Mrs. T. Sathiyajith

Dr. S. Mathanraj

Mrs. Chrisdina Nirojini Mosasrupan

Mr. M. L. Mohamed Helfan

Dr. T. Meharajah



**Edition** : 2023

**Published by**: Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka

**ISBN** : 978-624-5731-36-7

# $5^{th}$ Annual Research Session-2023

**(ARS – 2023)**

## Organizing committee

| | | |
|---|---|---|
| **Chairman** | : | Dr.V.Gunapalasingam |
| **Coordinator** | : | Mr. S. Chandrakumar |
| **Secretary** | : | Mrs. Florida Simeon |
| **Treasurer** | : | Mr. A. Kanneraj |
| **Advisory Board** | : | Prof.V.Gunaretnam<br>Prof.T.Krishnamohan<br>Prof.V.Inpamohan<br>Prof.S.Santhirasegaram<br>Prof. J. Kennedy<br>Prof.K. Rajendram<br>Prof.S.Jeysankar<br>Prof.K.Suresh |

## Message from the Vice Chancellor, Eastern University, Sri Lanka



**Prof. Vallipuram Kanagasingam**
**Vice-Chancellor**
**Eastern University, Sri Lanka**

It is with great pleasure that I extend my warm greetings to all participants of the 5th Annual Research Session - 2023 on "Equality, Equity, and Social Justice through Education in Pluralistic Societies" hosted by the Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka. This Conference is a platform to our shared commitment to fostering positive change through education and addressing the pressing social challenges that confront our multicultural societies.

Education, the cornerstone of progress, stands as a beacon of hope in our quest for a more just and equitable world. This conference serves as a platform where brilliant minds from around the globe converge to exchange ideas, share insights, and chart the course towards a more inclusive society. Your participation, dedication, and expertise are invaluable in this noble endeavour.

The theme of this conference, "Equality, Equity, and Social Justice through Education," underscores the pivotal role that education plays in shaping our world. In our increasingly diverse and interconnected global community, education is not just a privilege but a fundamental human right. It is the key to dismantling barriers, dispelling prejudices, and cultivating a society where every individual, regardless of their background, has an equal opportunity to flourish.

As we navigate the intricate landscape of multicultural societies, we must embrace diversity and strive to create educational environments that are inclusive, respectful, and empowering. The knowledge you will impart and the discussions you will foster during this conference are essential in building bridges between cultures and dismantling walls of ignorance and discrimination.

The mission of Eastern University, Sri Lanka has always been to foster a sense of belonging, and our commitment to excellence in education is unwavering. We are proud to host this event that brings together brilliant minds and passionate advocates for change. Together, we can pave the way for a more just and equitable world.

I encourage you to engage wholeheartedly in the sessions, share your knowledge, and open your hearts and minds to the rich tapestry of ideas that will emerge from this conference. Let us work collectively to ensure that the impact of our discussions extends far beyond these proceedings and resonates in the actions we take to create a brighter future for all.

I extend my gratitude to the Dean, organizing committee, presenters, participants, and sponsors who have made this event possible. Your dedication and hard work are appreciated.

Thank you for joining us in this noble pursuit of equality, equity, and justice through education. I am confident that the insights and connections you gain during this conference will have a profound and lasting impact on the world.

Wishing you a successful and transformative conference.

# பீடாதிபதியின் செய்தி, கலை கலாசாரப்பீடம்



**கலாநிதி வ.குணபாலசிங்கம்**
**பீடாதிபதி, கலை கலாசார பீடம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் ஆய்வறிவுச் செயற்பாடுகளில் வருடாந்த ஆய்வு மாநாடும் ஒன்று. 2023ஆம் ஆண்டுக்கான ஆய்வு மாநாடு பல உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்களின் ஆய்வுக் கட்டுரைகளை இணைத்துக் கொண்டு **"பன்மைத்துவச் சமூகங்களில் கல்வியின் ஊடாக சமத்துவம், ஒப்புரவு, சமூகநீதி"** எனும் தொனிப் பொருளில் நடைபெறுவது மகிழ்ச்சியளிக்கின்றது. ஆராய்ச்சியினூடாக கற்பிப்பதும் கற்பதும் அதனைச் சமூகத்தில் பிரயோகிப்பதும் இன்றைய தேவையாகும். எமது பீடத்தின் விரிவுரையாளர்கள், மாணவர்கள் இவ்வாறான செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். பல்கலைக்கழகத்திலே கற்றல் - கற்பித்தல் முறைமை ஆராய்ச்சியினை அடித்தளமாகக் கொண்டு அமையப் பெறுவது வரவேற்கத்தக்கது. இவ்வாய்வு மாநாடு இதனையே முதன்மைப்படுத்தி முன்னெடுக்கப்படுகின்றது. இவ்வாய்வு மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகள் சமகாலத்தில் எதிர்கொள்ளும் சவால்களில் இருந்து மீள்வதற்குத் துணை நிற்பதுடன், மனிதத்துவ, சூழலியல் சார்ந்த பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைக் கூறுவனவாகவும் அமைந்துள்ளன. அவற்றிலும், இலங்கையில் வாழ்கின்ற பன்மைத்துவச் சமூகங்கள் கல்வியை மையப்படுத்தி சமத்துவமாக, ஒப்புரவாக, சமூக நீதியுடன் வாழ்வதற்கான கருப்பொருளைக் கொண்டு கட்டுரைகள் கோரப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. கலை கலாசார பீடம் எப்பொழுதும் ஆராய்ச்சியினூடாகவும் ஆற்றுகைகளின் ஊடாகவும் சமூகம் சார்ந்த பங்களிப்பினை வழங்கி வருகின்றது. இவ்வாய்வு மாநாடும் இவ்வாறான பங்களிப்பினை, அறிவுப் பகிர்வை, சமூக மேம்பாட்டை விரிவாக்கும் என நம்புகின்றேன்.

இவ்வாய்வு மாநாட்டின் இணைப்பாளர், உள்ளிட்ட குழுவினர் மிகவும் திறன்படவும், உற்சாகமாகவும் அர்ப்பணிப்புடனும் சரியான முறையில் திட்டமிட்டும் இந்நிகழ்வைச் செய்து முடித்தமைக்கு எமது நன்றியும் பாராட்டுக்களும் உரித்தானவை.

அத்துடன், கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர், பதிவாளர், நிதியாளர், பராமரிப்புப் பிரிவினர், கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியமைக்கு நன்றிகள். அதுமட்டுமன்றி, உள்நாட்டு வெளிநாட்டு ஆய்வாளர்கள் அனைவரும் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து, மதிப்பீட்டாளர்களின் திருத்தங்களைச் செய்து மீளவும் சிறப்பான முறையில் சமர்ப்பித்தமைக்கும் எனது நன்றியினை உரித்தாக்குகின்றேன். அவ்வாறே, மதிப்பீட்டாளர்கள் மிகத் திறமையாகச் சரியான நேரத்திற்கு அதனை முடித்துத் தந்து உதவியமைக்கும் எனது நன்றிகள். அத்துடன் அனைத்து வழிகளிலும் உதவிய கலை கலாசார பீடத்தின் உதவிப் பதிவாளர், ஏனைய கல்விசாரா உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## ஆய்வு மாநாட்டு இணைப்பாளரின் செய்தி



திரு. சு. சந்திரகுமார்
இணைப்பாளர் ஐந்தாவது ஆய்வு மாநாடு
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

---

ஆராய்ச்சி என்பது எப்பொழுதும் உரையாடலுக்கும், கற்றல் - கற்பித்தலுக்கும், மானிட வாழ்வியலுக்கும், சுற்றுச் சூழல் நேயத்திற்கும் புதிய புதிய கண்டுபிடிப்புக்களை மதிப்பீடு செய்து முன்மொழிவதாகும். ஆராய்ச்சியானது ஆய்வாளருக்கும், ஆய்வுப் பொருளுக்கும், குறித்த சமூகத்திற்கும் பயனுடையதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதே அது பிரயோகத்தைத் தரும். வெறுமனே ஆய்வறிக்கைகளைப் பூட்டிப் பாதுகாத்து வைப்பதால் எவ்வித பயனும் இல்லை. இதனாலேயே கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடம் வருடந்தோறும் 'வருடாந்த ஆய்வு மாநாட்டை' (Annual Research Session) நடத்தி வருகின்றது. இதன் தொடர்ச்சியாக இவ்வாய்வு மாநாடு இவ்வருடம் ஐந்தாவது தடவையாக கல்வி நிலை சார்ந்து நடைபெறுகின்றது. இவ்வருடம் சமகால மனித சமூகத்திற்கு அவசியமானதும், நெருக்கடிச் சூழலில் இருந்து விடுபடுவதற்கும், மனித நேயத்தை மதிப்பதற்கும் ஏற்றவகையில், **'பன்மைத்துவச் சமூகங்களில் கல்வியின் ஊடாக சமத்துவம், ஒப்புரவு, சமூகநீதி'** எனும் பொருண்மையில் ஆராய்ச்சி மாநாடு நடத்தப்படுவது சிறப்பம்சமாகும். ஆராய்சியினூடாக இன்றைய உலக நெருக்கடியை – பொருளாதார வீழ்ச்சியை - சூழலியல் நெருக்கடியை – முரண்பாடுகளை – மனித அழிவை – ஆதிக்க அதிகாரத்தை வீழ்த்த முடியும். ஆராய்ச்சி மகிழ்ச்சிகரமான தொடர் வாழ்வியல் செயற்பாட்டைத் தரவல்லது. ஆராய்ச்சியாளர் ஆய்வுப் பிரச்சினையை முன்வைத்து குறித்த கருதுகோளுடன் குறித்த முறையியலை மையப்படுத்திப் பகுத்து, வியாக்கியானித்துத் தகுந்த நெறிமுறையுடன் முன்வைக்கும் பொழுது, அதில் சமுதாய உள ஆறுதலும் ஆற்றுப்படுத்தலும் மேம்படும்.

கலை கலாசார பீடத்தின் ஐந்தாவது வருடாந்த ஆய்வு மாநாட்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகள் இளம் ஆய்வாளர்களாலும் மூத்த ஆய்வாளர்களாலும் விரிவான - ஆழமான - முழுமையான தேடலுடன் விவாதித்து, வியாக்கியானித்து, பகுத்து அதற்கான தராதரத்துடன் ஆய்வுக் கோவையாக வெளிவருகின்றது. இவர்கள் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பது மட்டுமல்ல, குறித்த நேரத்திற்குள் கருத்துரைத்து பங்குகொண்டோரின் வினாக்கள், ஐயங்கள் ஆகியவற்றிற்குப் பதிலளித்து விவாதங்கள் வரும் பொழுது ஆரோக்கியமான பதிற்குறியைக் காட்டவேண்டும். மீண்டும் அவர்கள் தமக்கான ஆய்வுச் செயற்பாட்டைச் சரியாகவும் பொருத்தமாகவும் முன்நகர்த்த வேண்டும். இவ்வனுபவம் ஓர் இதழில் ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்து வெளியிடுவதற்கும் ஆய்வுக் கருத்தரங்கில் கட்டுரை சமர்ப்பிப்பதற்கும் இடையிலான வித்தியாசத்தை வெளிப்படுத்தும். ஆராய்ச்சியாளர் கட்புல, செவிப்புல ஆற்றுகையைத் தனது எடுத்துரைப்பு நேரத்தில் பிரயோகிக்க வேண்டும்.

இவ்வருடம் 61 ஆய்வுக் கட்டுரைகள் எமக்குக் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் 51 ஆய்வுக்கட்டுரைகளே மதிப்பீட்டாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை. மதிப்பீட்டாளர்களின் கருத்துக்கள், மதிப்பீடுகள், அபிப்பிராயங்கள், வழிகாட்டல்கள் உள்வாங்கப்பட்டு மீண்டும் ஆய்வாளர்களால் திருத்தப்பட்டு சமர்ப்பித்ததும் அதனை ஆசிரியர் குழு உறுப்பினர்கள் மீண்டும் அதன் உள்ளடக்கத்தையும் ஆய்வு நெறிமுறையையும் நுட்பத்தையும் சரிபார்த்து முழுமைப்படுத்துவது முக்கிய தொடர் செயற்பாடுகளாக அமைந்தன.

அத்துடன், மதிப்பீட்டாளர்கள் மதிப்பீட்டின் பொழுது வெளிப்படுத்திய குறிப்புக்களும் கொடுத்த வழிப்படுத்தல்களும் திருத்தப்பட்டுள்ளனவா என்றும் பதிப்பாளர்கள் ஆழமாகச் சரிபார்த்தனர். இவ்வாறான தொடர் செயற்பாட்டுடனே ஆய்வுக் கட்டுரைகள் செம்மைப்படுத்தப்பட்டு, சரிபார்க்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. இத்தொடர் செயற்பாட்டினூடாக ஆய்வாளர்களும் ஒழுங்கமைப்புக் குழுவும் பரஸ்பரம் ஆய்வு முறையியலையும், அதன் நுட்பமுறையையும், ஆய்வுக் கட்டமைப்பையும், உசாத்துணை நூல் பட்டியலையும் ஒழுங்கமைக்கும் புதிய அணுகுமுறையையும் கற்றுக்கொண்டனர். ஏனெனில், ஒழுங்கமைப்பாளர்களும் தொடர் ஆய்வாளர்களே. அவர்களுக்கு இவ்வாறான ஆய்வுச் செயற்பாடு மூலமான கற்றல் அனுபவம் அவசியமானது. இதனால் அவர்களுக்குள்ளும் மாற்றங்கள் மேலெழுந்தன.

அவ்வாறே, ஆய்வுக் கட்டுரைகளை மதிப்பீடு செய்துதந்த மதிப்பீட்டாளர்களுக்கும்கூட மதிப்பீட்டுப் படிவத்தின் நுட்பமும், அதன் வடிவமைப்பும், ஆய்வாளர்களின் ஆய்வுக் கட்டுரைகளின் உள்ளடக்கமும் புதிய அனுபவத்தைக் கொடுத்திருக்கும். ஏனெனில், மதிப்பீட்டாளர்களும் ஒரு வகையான தொடர் ஆராச்சியாளர்கள் ஆவர். நான் இவ்வாறான அணுகுமுறைகளையும் நிலைமாறும் தன்மைகளையும் இவ்வாய்வு மாநாட்டை இணைப்பாக்கம் செய்யும் பொழுது அவதானித்தேன்; உணர்ந்துகொண்டேன். ஓர் ஆராய்ச்சிக் கருத்தரங்க ஒழுங்கமைப்பு என்பது வெறுமனே இயந்திரத்தனமானது அல்ல அதனுள் உயிர்த்துடிப்பான காத்திரமான வாழ்வியல் அனுபவம் நிறைந்திருக்கும் என்பதை உணர்ந்துகொள்ள முடிந்தது. ஆராய்ச்சி மூலமாகப் பல்கலைக்கழகக் கல்விச் சமூகம் தமது கற்றல் - கற்பித்தலை வலுப்படுத்தும் பொழுது வளமான கற்றல் மேம்பாட்டை விரிவாக்குவதுடன் தமது இலக்குக் குழுவான மாணவர் சமுதாயத்தையும் ஆராய்ச்சிக்கு வழிநடத்திச் செல்லும்.

தொடர் ஆராய்ச்சிச் செயற்பாட்டின் அடிப்படையிலேயே புதிய கோட்பாடுகளையும், எண்ணக்கருக்களையும் கல்விச் சமூகத்தால் உருவாக்கி அறிஞர்களாக வளர முடியும். எமக்கான உள்ளூர் ஆய்வு அறிவியலையும் ஆய்வு முறையியலையும் ஆய்வாளர்கள் முன்மொழியும் பொழுது நாம் காலனியநீக்க ஆராய்ச்சி முடிவுகளை முன்வைத்து உள்ளூர் - பிரதேச – தேசிய மனிதவள வளர்ச்சியினை மேலும் வலுப்படுத்த முடியும். சமுதாயம் பயனடைய வேண்டும் என்றால் காலனியநீக்க ஆராய்ச்சி முறையில் தமிழ் அறிவுத் தோற்றவியலில் இருந்து வலுப்படுத்தப்பட்டு பரவலாக்கப்பட வேண்டும். இதற்கு இவ்வாறான ஆராய்ச்சி மாநாடு களம் அமைந்துக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாய்வு மாநாட்டைச் சிறப்பாக ஒழுங்கமைத்து வழிப்படுத்த அனுமதியளித்த கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் அவர்களுக்கு எனது நன்றிகளை முதற்கண் கூறிக்கொள்கின்றேன். இந்நிகழ்வை வெற்றிகரமாக நடத்துவதற்கு

ஆலோசனை வழங்கி, வழிப்படுத்தி நிருவாக ரீதியாக உதவிகளைச் செய்த கலை கலாசார பீடாதிபதி கலாநிதி வ. குணபாலசிங்கம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இவ்வாய்வு மாநாட்டிற்குப் பெரும் துணை புரிந்த ஆய்வு மாநாட்டிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலோசனை சபைக்கும் நன்றிகளை உரித்தாக்குகின்றேன். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர், நிதியாளர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இவ்வாய்வு மாநாட்டைத் திறன்பட வினைத்திறனுடன் செய்து முடிக்க அர்ப்பணிப்புடன் துணைபுரிந்த ஒழுங்கமைப்புக் குழுவினருக்கு எனது மனமார்ந்த நன்றிகள். குறிப்பாக, ஆய்வுக் கோவையின் முதன்மைப் பதிப்பாசிரியர் கலாநிதி ந. புஸ்பராசாவுக்கும் ஏனைய பதிப்பாசிரிய உறுப்பினர்களான திருமதி கௌரி லக்சுமிகாந்தன், திருமதி துஷ்யந்தி சத்தியஜித், திருமதி கிறிஸ்டினா நிறோஜினி மோசஸ்ரூபன், கலாநிதி த. மேகராசா, திரு. ம. லெ. முகம்மது ஹில்பான். க. ஸ்ரீகருணாகரன், கலாநிதி. சீ. மதன்ராஜ் ஆகியோரும் தொடர்ச்சியாக முழு மூச்சுடன் செயற்பட்டனர். இதற்கும் மேலாக மாநாட்டின் செயலாளர் திருமதி புளோரிடா சிமியோன் என்னால் பணிக்கப்படும் ஒவ்வொரு வேலையையும் திட்டமிட்டுத் திறன்படச் செய்தவர். இவர் ஒவ்வொரு பணியையும் விருப்புடனும் சிறப்புடனும் தரமாகச் செய்து முடிக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். அவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இந்நிகழ்வின் காசாளர் திரு. அ. கண்ணேராஜ் அவர்களுக்கும் எனது நன்றிகள். அத்துடன் நிகழ்வு சிறப்பாக நடைபெற விருப்புடன் ஒத்துழைத்த பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், முதுநிலை விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான நன்றிகள். கலை கலாசார பீடத்தின் உதவிப் பதிவாளர் வே. பிரகாஷ், கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். இந்த ஆய்வு மாநாடு சிறப்பாக நடைபெறுவதற்குப் பகுதியளவில் நிதி அனுசரணை வழங்கிய அன்பு உள்ளங்களுக்கும் நன்றிகள். இவ்வாய்வு மாநாட்டிற்கு சிறப்பான திருப்புமுனையாக அமைய பலவழிகளிலும் உதவிய நல் உள்ளங்களுக்கும் நன்றிகள்.

# ABSTRACT OF KEYNOTE ADDRESS



Member, Public Service Commision; Former Professor & Head, School of Law, SLIIT; Dean, Faculty of Law, University of Colombo; Chairman, Officiial Languages Commision; Member, Human Rights Commision of Sri Lanka.

**Equality, Equity, and Social Justice through Education in Pluralistic Societies**

The Address focuses on the need for understanding, appreciating, protecting and promoting equality, equity and social justice in homogenous societies in general and in pluralistic societies in particular through education. It delves into the meaning of equality, its relevance in public, private and public-cum-private spheres, and how it is understood in a world where it is evident that all are not equal, for example in their status, rights and opportunities, due to various reasons and factors. It also relates the concept of equity to inform the understanding of equality, and explores how observance of 'formal equality' perpetuates inequality and frustrates equity while 'substantive equality' addresses the concerns of equity. Although justice is a relative concept in a general sense, systemic and historic discriminations against people and groups within pluralistic societies demand that social justice tempered with equity and substantive equality is a must to make those societies live in peace and harmony. The Address stresses the importance of our generation and future generations understanding how these diverse concepts interact and impact upon the peoples of pluralistic societies. It concludes with a call for mainstreaming these themes in the academic and extra curricula activities of the undergraduate and postgraduate students as well as in the research activities – theoretical & empirical – undertaken by the academics. Both the academics and students should internalize and absorb these important tenets and live by them.

# Content


Message from the Vice Chancellor, Eastern University, Sri Lanka v

பீடாதிபதியின் செய்தி, கலை கலாசாரப்பீடம் vi

ஆய்வு மாநாட்டு இணைப்பாளரின் செய்தி vii

ABSTRACT OF KEYNOTE ADDRESS x

ABSTRACTS xvi

Religions and Cultural Heritage

மட்டக்களப்புத் திருப்படைக் கோயில்களும் பிரபந்தங்களும் 1

ருஜானி நிமலேஸ்வரன்

மரபுவழி கிறிஸ்தவ சபைகளுக்கும் சுயாதீன சபைகளுக்கும் இடையிலான ஓர் ஒப்பாய்வு 2

காமினி டில்மி அப்ஸரா, கணேசன் மதிசீலன்

பாரம்பரிய இந்து சமூகப் பண்பாட்டில் சமகால நாகரிகத்தின் தாக்கம் - யாழ்ப்பாண மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு 3

நிருத்திகா ஜீவராசா, இரத்தினசிங்கம் சகாயசீலன்

இந்து சமயம்சார் தொல்லியல் சின்னங்களும் அழிந்த நகரங்களும்: சிந்துவெளி - அரிக்கமேடு ஆகிய நகரங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 4

பா.ஜேசினி மதுஷிகா, சாந்தி கேசவன்

நாவற்குழி திருவாசக அரண்மனை, கொக்கட்டிச்சோலை திருமந்திர அரண்மனை உருவாக்கத்தில் கலாநிதி ஆறு.திருமுருகனின் பங்களிப்பு 5

தவராசா லக்ஸ்சனா, வ. குணபாலசிங்கம்

Ethics and Human Values

இணையவழிக் குற்றங்களில் தகவல் தொழில்நுட்பத்தின் செல்வாக்கு - ஒரு பிரயோக ஒழுக்கவியல் நோக்கு 7

தேவதாஸ் தவேநிதா, முனியாண்டி ரவி

மகாபாரதம் வெளிப்படுத்தும் வாழ்வியல் தத்துவம் - ஒழுக்கவியல் அடிப்படையிலான ஓர் ஆய்வு 8

நித்திஞானம் றொசாயினி

திருக்குறள் மற்றும் நாலடியாரில் இல்வாழ்க்கை எனும் எண்ணக்கருவும் அதன் தனித்துவமும் - தமிழர் மெய்யியல் சிந்தனை நோக்கில் ஓர் ஒப்பீட்டு ஆய்வு 9

நோமன் றொசாயிறோ ஜான்சி, முனியாண்டி ரவி

இந்து மற்றும் சமண சமயங்களில் காணப்படும் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்கள் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு 10

லிங்கமூர்த்தி விரிதரன், இரத்தினசபாபதி பிரேம்குமார்

## Literature and Society

இராஜம்கிருஸ்ணனின் நாவல்கள் வெளிப்படுத்தும் பெண்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும் 12

ஞா. சுதர்சுயா

புறப்பாடல்களில் சீறூர் மன்னர் சமுதாயம்: மானிடவியல் அணுகுமுறை 13

ம.பிரேமா, க. விஜயகுமாரி

சங்க இலக்கியத்தில் தாவரங்கள் - ஓர் ஆய்வு 14

வெ.முத்துலட்சுமி

மேலைத்தேய நாடுகளில் இந்து சஞ்சிகைகளும் ஆய்வு இதழ்களும் - ஓர் ஆய்வு 15

செல்வராசா லலிதா, சாந்தி கேசவன்

## Literature and Contemporary Voices

பேராசிரியர் வ. மகேஸ்வரனின் தமிழ் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் - ஒரு நோக்கு 17

சபேசன் சுகன்யா, ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்

வ.ஐ.ச.ஜெயபாலனின் புலம்பெயர் கவிதைகள் - ஓர் ஆய்வு 18

கிருபாகரன் சிந்துஜா, ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்

அ.செ.முருகானந்தனின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு 19

ஷம்சிகா ஜீவகரன், விஜிதா திவாகரன்

பேராசிரியர் செ.யோகராசாவின் ஈழத்து நவீன தமிழ் இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகள் - ஓர் மதிப்பீடு 20

அமிர்தலிங்கம் அனிதா, நதிரா மரியசந்தனம்

மூதூர் அனஸின் நவீன காவியங்கள் - ஓர் ஆய்வு 21

பாலரட்ணம் சரண்யா, நதிரா மரியசந்தனம்

## Performance and Aesthetics

பற்றிஸ் பவிஸின் ஆற்றுகைப் பகுப்பாய்வும் ஈழத்துத் தமிழ் அரங்கப் போக்கும் - ஓர் ஆய்வு 23

கா. அற்புதன்

வெண்கல உலோக வார்ப்புக் கைவினையாக்கத் தொழில் முனைவும் அதன் சவால்களும்: மட்டக்களப்பு மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 24

இளையதம்பி குகநாதன்

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் கல்வியியல் அரங்கச் செயற்பாடுகளும் அதன் முக்கியத்துவமும் - ஓர் ஆய்வு 25

கு. ரவிச்சந்திரன், புவனேந்திரன் ரதிகலா

## Education and Society


தரம் ஐந்து புலமைப்பரிசில் மாணவர்களின் கற்றல் அடைவில் பெற்றோர்களின் சமூக - பொருளாதார காரணிகளின் செல்வாக்கு (போரதீவுப்பற்றுக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு) 27

சுஜானா சிவசுதன்

கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டை மேம்படுத்துவதில் பாடசாலையின் வளப்பற்றாக்குறை ஏற்படுத்தும் தாக்கம் (பட்டிருப்பு வலய மண்முனை தென் எருவில் பற்றுக் கோட்டப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வு) 28

யோ. அகல்யா

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி க.பொ.த. உ/த மாணவர்களின் கற்றலில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் (பிலியந்தல கல்வி வலய தமிழ் மொழிமூலப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு) 29

வனஜா லோகபிரசாத், சபாரட்ணம் அதிரதன்

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டமும் அதனை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்களும் (ஏறாவூர்ப்பற்று மேற்கு கோட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு) 30

சுப்பிரமணியம் பாலகிருஸ்ணன்

க.பொ.த உயர்தர கலைத்துறை மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்குறைவும் சமூகப்பொருளாதாரக் காரணிகளின் தாக்கமும்: மூதூர் கல்வி வலய ஈச்சிலம்பற்றுக் கல்விக் கோட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 31

ச.ஜீவதரன், ஆ.நித்திலவர்ணன்


## Cultural Diversity and Inclusion


இந்து பௌத்த மக்களின் வாழ்வியல் சடங்குகளுக்கிடையிலான பரஸ்பரத் தொடர்புகள்: கேகாலை மாவட்டத்து தெஹியோவிட்டப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு 33

சிதிரிசேன துஷாந்தி, வ. குணபாலசிங்கம்

ஐ.எல்.எம். அப்துல் அஸீஸின் சமய, சமூகப் பணிகள் - ஒரு பன்முகப் பார்வை 34

ஏ. ஜ.ஃபர் ஹுஸைன்

இலங்கையின் மத்தியஸ்த சபைகள் எதிர்நோக்குகின்ற சவால்களும் அதற்கான தீர்வுகளும்: ஏறாவூர் மத்தியஸ்த சபையினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 35

தாஜுதீன் முஹம்மது முபாஸ்

இலங்கையில் கிறிஸ்தவக் கல்வி ஊடாக மாணவர்களிடையே சமூக ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புதல் 36

யே. ஹேரோசினி


## Gender and Equality


மலையக லயன் குடியிருப்புகளில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் சமூகப் பாதுகாப்புப் பிரச்சினைகள்: பம்பரகலை தோட்டத்தை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு 38

சுப்பையா ரிஷாந்தி, குணநாயகம் விக்னேஸ்வரன்

விவாகரத்தான பெண்களின் வாழ்வில் ஏற்படுத்தப்படும் உளவியல் தாக்கங்கள்: ஏறாவூர்பற்று பிரதேச செயலகப்பிரிவை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 39

அரியரெத்தினம் அணோஜா

பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் வேலைக்குச் செல்லும் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள்: செங்கலடி 01 கிராம சேவகர் பிரிவினை மையமாகக் கொண்ட ஆய்வு 40

வரதராஜன் சித்தாரா, இரத்தினசபாபதி பிரேம்குமார்

## Environment and Social Justice

மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாட்டு மாற்றம் (2002 – 2022) 42

அஞ்சாநிலை சந்திரமோகன்

நுவரெலியப் பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாட்டு மாற்றங்கள் 43

பிச்சமுத்து காயத்திரி

இலங்கையின் பொருளாதார நெருக்கடியினால் மீனவ சமுதாயம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்: ஒலுவில் பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு 44

தாஜுதீன் முஹம்மது முபாஸ்

முதியோர்கள் எதிர்கொள்ளும் சுகாதாரப் பிரச்சினைகள்: நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பெருந்தோட்டங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு மருத்துவ சமூகவியல் ஆய்வு 45

பா.திலான், ப.நிரோஷா, சி.சிவகாந்தன்

உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும் விளைவுகளும்: நுவரெலியா மாவட்டத்தின் லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவினை அடிப்படையாகக்கொண்ட ஒரு மருத்துவ சமூகவியல் ஆய்வு 46

எலோமி ஜெனிட்டா, சி.சிவகாந்தன்

தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகள்: அம்பகமுவப் பிரதேச செயலகப் பிரிவை அடிப்படையாகக் கொண்ட ஒரு மருத்துவ சமூகவியல் ஆய்வு 47

பா. ரோஹினி, சி. சிவகாந்தன்

## Inclusive Education Policy and Practice

தரம் 06 மாணவர்களின் எழுத்துத்திறன் விருத்தி கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம் 49

அஸீஸ் பாத்திமா ஹாழிறா, ராஜேந்திரன் தக்ஷாயினி

கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் வாசிப்புத்திறன் பின்னடைவு கற்றல் செயற்பாடுகளில் ஏற்படுத்தும் சவால்கள் 50

முஹம்மட் ஜமால்தீன் பாத்திமா ஸஜீதா, ராஜேந்திரன் தக்ஷாயினி

சிரேஷ்ட இடைநிலை வகுப்பு (தரம் 11) மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் திறன்வகுப்பறையின் செல்வாக்கு (மண்முனை வடக்கு கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவைநிலை ஆய்வு) 51

சத்தியராசா பிரியசகி, ராஜேந்திரன் தக்ஷாயினி

INCLUSIVE EDUCATION IN THE BATTICALOA DISTRICT: ANALYZING PRACTICES, STRENGTHS, AND CHALLENGES 52

K. Ketheeswaran, F.M. Nawastheen

## Virtual Education and Equity

நிகழ்நிலைக் கல்வி மலையக பாடசாலைகளில் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களில் ஏற்படுத்தியுள்ள ஒழுக்கவியல் ரீதியான தாக்கங்கள்: கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்டப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 54

ராஜா பிரியதர்ஷனி, முனியாண்டி ரவி

விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் வகிபாகம் 55

ந.கோவேந்தன, ராஜேந்திரன் தக்ஷாயினி

கற்றல்-கற்பித்தல் செயன்முறையில் இணையவழிச் சாதனங்களின் பயன்பாடு: சிரேஷ்ட இடைநிலை வகுப்புகள் பற்றிய ஓர் ஆய்வு 56

இராசசிங்கம் நாகேந்திரன், தேவராசா முகுந்தன்

FACTORS AFFECTING SRI LANKAN CHILDREN’S CONCEPTION OF CONSERVATION AND SPACE 57

T. Mukunthan ,D.D.I.Deepthinee Dediwala

ENSURING EQUITY IN EDUCATION THROUGH THE 13 YEARS GUARANTEED EDUCATION PROGRAMME 58

S.Sritharan

## Politics and Human Rights

சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்களுக்கிடையிலான மோதல்களும் நல்லிணக்க முயற்சிகளும் - இலங்கையில் இடம்பெற்ற முக்கிய கலவரங்களை மையப்படுத்திய ஆய்வு 60

பாத்திமா நவாஸ்தீன், பேரின்பம் சச்சிதானந்தம்

மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமையும் பிரயோகமும்: பதுளைத் தேர்தல் மாவட்டத்தில் 2015ஆம் 2020ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு 61

செல்லதுரை புஸ்பகுமார், ஆறுமுகம் யோகராஜா

உள்நாட்டு யுத்தத்திற்குப் பின்னரான மனித உரிமை மீறல்கள் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் ஏற்படுத்திய தாக்கங்கள் 62

வ. ஜெயலோஜினி

PANEL OF REVIEWERS 63

# ABSTRACTS

# Religions and Cultural Heritage

# மட்டக்களப்புத் திருப்படைக் கோயில்களும் பிரபந்தங்களும்

**ருஜானி நிமலேஸ்வரன்**
மட்/ககு/வாழைச்சேனை இந்துக் கல்லூரி- தேசிய பாடசாலை,
வாழைச்சேனை, மட்டக்களப்பு
*nrujani@gmail.com*

இலங்கையில் பண்டுதொட்டு இந்துசமயம் சிறந்து விளங்கிய பிராந்தியங்களில் மட்டக்களப்பு மாவட்டம் தனித்துவமானது. மட்டக்களப்பில் திருப்படைக்கோயில்கள், அவற்றின்மீது பாடப்பட்ட பிரபந்தங்கள், அவற்றினூடாக வெளிப்படுத்தப்படும் இந்துப் பண்பாட்டம்சங்களை வெளிக்கொணர்வது ஆய்வு நோக்கமாகும். மட்டக்களப்புத் திருத்தலங்கள்மீது பாடப்பட்ட பிரபந்தங்களின் பாடுபொருள் தமிழர் வரலாற்றில் தாக்கம் செலுத்துகின்றனவா? என்பது இவ்வாய்வின் வினாவாகும். பண்புசார் ஆய்வு அணுகுமுறை நுட்பத்துடன் விளக்க முறையியல் பயன்படுத்தப்படுகின்றது. 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளிலே மட்டக்களப்புத் திருத்தலங்கள்மீது அதிகளவு பிரபந்தங்கள் எழுந்துள்ளன என்பன இவ்வாய்வின் கருதுகோள்களாக அமைகின்றன. மட்டக்களப்பின் சைவசமய வளர்ச்சியில் இங்குள்ள முருகன் கோயில்களுக்குக் கணிசமான இடமுண்டு. மட்டக்களப்பில் அமைந்துள்ள பழமையான முருகன் கோயில்களைத் திருப்படைக் கோயில்கள் என அழைக்கப்படுகின்றது. முருகனுடைய திருப்படையாகிய வேல் வைத்து வழிபட்ட தொன்மையான கோயில்கள் திருப்படைக் கோயில்கள் ஆகும். பண்டைய அரசரின் மதிப்பும் மானியமும் சீர்வரிசைகளும் பெற்ற கோயில்களே திருப்படைக் கோயில்களாக அழைக்கப்பட்டன. மட்டக்களப்பின் தனித்துவமான இந்துப் பண்பாட்டை வெளிப்படுத்துவதில் திருப்படைக் கோயில்களுக்கு முக்கிய பங்குண்டு. இத்தகைய திருப்படைக் கோயில்களின் சிறப்பினையும் அவை சார்ந்த பண்பாட்டு அம்சங்களையும் வெளிக்கொணர்வதில் அக்கோயில்கள்மீது பாடப்பட்ட பிரபந்தங்கள் முக்கிய ஆதாரங்களாகத் திகழ்கின்றன. மக்கள் மத்தியில் சமயக் கருத்துக்களைப் நிலைநிறுத்துவதற்கான பல்வேறு அம்சங்களைப் பிரபந்தங்கள் கொண்டிருந்தன. திருப்படைக் கோயில்கள் மீதெழுந்த பிரபந்தங்கள் முருகன் புகழ், தலங்களின் சிறப்பு, புராணக் கதைகள், சமுதாயப் பிரச்சினைகள், ஆன்ம ஈடேற்றத்திற்கு வேண்டிய வழிவகைகள், மட்டக்களப்பின் வரலாற்றியல் அம்சங்கள், வழிபாட்டு முறைகள், சமுதாய அமைப்பு முறைகள் போன்ற பல்வேறு விடயங்களினைப் பாடுபொருளாகக் கொண்டமைந்துள்ளமையினை இவ்வாய்வினூடாக அடையாளங்காண முடிகின்றது. இவற்றினூடாக மட்டக்களப்பில் பண்டுதொட்டு வழக்கிலிருந்த முருக வழிபாட்டின் பரிணாம வளர்ச்சியையும் அதன் பிரதான அம்சங்களையும் அவற்றாற் சமுதாயத்தில் ஏற்பட்ட செல்வாக்கினையும் அறிந்துகொள்ள முடிகின்றது. மட்டக்களப்புத் திருத்தலங்கள்மீது பாடப்பட்ட பிரபந்தங்கள் மட்டக்களப்பு இந்துப் பண்பாடு தொடர்பான பல விடயங்களை வெளிக்கொணர்வதில் முக்கிய ஆதாரங்களாக விளங்குவதனால் இதனை ஆவணப்படுத்துவதற்கு இவ்வாய்வு அவசியமாகின்றது. மேலும் மட்டக்களப்பு இந்துப் பண்பாட்டின் கையளிப்புப் பாரம்பரியத்தில் உள்ள குறைபாட்டினால் பல்வேறு பண்பாட்டு அடையாளங்கள் அழிந்து போகும் நிலை தற்பொழுது உருவாகியுள்ளது. எனவே, மட்டக்களப்பின் பாரம்பரியமான இந்துப் பண்பாட்டினை பாதுகாக்கும் பொருட்டு இவ்வாய்வானது முக்கியத்துவமுடையதாக அமைகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *மட்டக்களப்பு, திருப்படைக் கோயில்கள், பிரபந்தங்கள், முருகன், இந்துப் பண்பாட்டம்சங்கள்*

# மரபுவழி கிறிஸ்தவ சபைகளுக்கும் சுயாதீன சபைகளுக்கும் இடையிலான ஓர் ஒப்பாய்வு

**காமினி டில்மி அப்ஸரா, கணேசன் மதிசீலன்**
ஒப்பீட்டுச் சமயமும் சமூக நல்லுறவும் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*dilmiapsaragamini@gmail.com*

மீட்பின் திட்டத்தை மானிட சந்ததிக்கு இறுதிவரை எடுத்துச் செல்ல இயேசு கிறிஸ்து திருத்தூதர் பேதுரு தலைமைத்துவத்தின் கீழ் திருச்சபையை நிறுவினார். இத்திருச்சபையானது இயேசு கிறிஸ்துவை தேவ குமாரன் என்று விசுவாசித்து, அவரைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவரிடத்தில் பாவமன்னிப்புப் பெற்று, அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்க அர்ப்பணிக்கும் கூட்டமே திருச்சபையாகும். அந்தத் திருச்சபையானது ஒரே திருச்சபையாக ஆரம்ப காலங்களில் காணப்பட்டாலும் காலப்போக்கில் மாறுபட்ட புதிய போதனைகளினால் திருச்சபை 1054ஆம் ஆண்டு பிளவுபட்டு கீழைத்தேயம், மேலைத்தேயம் என இரு பெரும் பிரிவுகளாகச் செயற்படுகின்றது. 15ஆம் நூற்றாண்டின் பின்னர் மாட்டின் லூத்தரின் சீர்த்திருத்தத்தினால் (1517ஆம் ஆண்டு ஒக்டோபர் 31) திருச்சபைக்குள் மேலும் பல பிளவுகள் ஏற்பட்டன. அதன் விளைவாக கத்தோலிக்க சபையில் இருந்து பிரிந்தவை 'சீர்திருத்தச்சபை' என அழைக்கப்பட்டன. இப்பிளவினைக் காரணியாகக் கொண்டு திருச்சபையினுள் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. இவ்வாறாக திருச்சபையில் பிளவுகள் ஏற்படும் போது அதன் ஒருமைக்குப் பங்கம் ஏற்படுவதாகக் கருதப்படுகின்றது. இயேசுவினால் அழைப்புப் பெற்று அவருக்குரிய ஒரே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டதாகக் கருதப்படுகின்ற ஒரே திருச்சபையின் ஒன்றிப்பு வெளிவாரியாகத் தெளிவுபடுத்தப்படவும், திருச்சபை எவ்வாறு பிளவுபட்டு போதனைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு அதனுடைய வழிமுறைகள் எவ்வாறு பின்பற்றப்படுகிறது என்பதைத் தெளிவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் வரலாற்றை மையப்படுத்திய இவ்வாய்வானது நோக்கத்தினை அடைந்து கொள்ளும் வகையில் பண்புசார் அளவை நிலையினைக் கைக்கொண்டுள்ளது. நேர்காணல், உரையாடல் மற்றும் அவதானிப்பு மூலம் பெற்ற முதலாம் நிலைத்தரவுகளையும், இரண்டாம் நிலைத்தரவுகளான நூல்கள், திருவிவிலியம், சஞ்சிகைகள், இணையத்தளத் தகவல்கள் போன்றவற்றையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெறப்பட்ட தரவுகள் வரலாற்றுப் பகுப்பாய்வு மற்றும் விபரணப் பகுப்பாய்வு முறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. மரபுவழி கிறிஸ்தவ சபைகளும் சுயாதீன சபைகளும் போதனைகளின் அடிப்படையில் தமக்குள் பிளவுபட்டு இருந்தாலும் அவர்களுக்கிடையில் பல ஒன்றுபட்ட போக்குகளும் காணப்படுகின்றன என்பதே இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *அருட்கொடைகள், சுயாதீன திருச்சபை, திருச்சபை, பரிசுத்த ஆவி, மரபுவழித் திருச்சபை*

# பாரம்பரிய இந்து சமூகப் பண்பாட்டில் சமகால நாகரிகத்தின் தாக்கம் - யாழ்ப்பாண மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு

**நிருத்திகா ஜீவராசா, இரத்தினசிங்கம் சகாயசீலன்**
ஒப்பீட்டுச் சமயமும் சமூக நல்லுறவும் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*niruthtika1997105@gmail.com*

பண்பாடு என்பது வாழ்க்கை முறை (Way of Life) ஆகும். ஒரு சமுதாயத்தில் வாழும் மக்களின் பெருமைகளையும் எண்ணங்களையும் ஒருமித்த நடத்தைகளையும் வெளிப்படுத்தும் மையப்புள்ளியாகப் பண்பாடு காணப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில் மக்களுக்குப் புதிய விடயங்களை அறிமுகப்படுத்துவதிலும் தெரியப்படுத்துவதிலும் நவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. புதிய விடயங்களைத் தெரிய வேண்டுமென்றால் இணையத்தை நாடுகிறார்கள். ஆனால், பழைமையான விடயங்களையும் பண்பாடுகளையும் விளம்பரம் செய்வதற்கு யாரும் முன்வருவதும் இல்லை பழைமையான பொருட்கள் மீது மக்கள் ஆர்வம் காட்டுவதுமில்லை. பழையன கழிதல் புதியன புகுதல் என்றரீதியில் தமது வாழ்க்கை முறைகளை மாற்றி அமைத்துக் கொள்கின்றார்கள். நவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் கவர்ச்சிகரமான கலாசார விளம்பரங்களால் ஈர்க்கப்பட்ட மக்கள் நாகரிகமான முறையிலேயே வாழ்வதற்கு விரும்புகின்றார்கள். இவ்வாறான மக்களால் ஒரு நாட்டினுடைய பழைமையான பண்பாட்டம்சங்களைத் தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதென்பது இயலாமல் உள்ளது. பாரம்பரிய பண்பாட்டின் சிதறல் என்பது நவநாகரிகத்தின் தாக்கம் எனலாம். இவ்வாறான தாக்கத்தினால் ஏற்படும் பாரிய பிரச்சினைகளை ஆராயும் பொருட்டு பாரம்பரிய இந்து சமூகப் பண்பாட்டில் சமகால நாகரிகத்தின் தாக்கம்- யாழ்ப்பாண மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு என்ற தலைப்பின் ஊடாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாரம்பரிய இந்து சமூகப் பண்பாட்டு முறைகளையும், அதன் நன்மைகளையும், அவற்றின் தேவைகளையும் தற்கால மற்றும் எதிர்கால சந்ததிக்கு நினைவுபடுத்தி அவற்றைப் பின்பற்ற வைப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வானது இந்து சமூகப் பண்பாட்டின் ஆரம்ப காலம் தற்காலப் பாரம்பரியங்களை ஒப்பீட்டாய்வு செய்வதன் மூலம் எதிர்கால ஆய்வு முயற்சியாளர்களின் அறிவு விருத்திக்கு உந்து சக்தியாக அமைகின்றது. இவ் ஆய்வின் முறையியலாக அளவை முறைத் தகவல்கள் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் முதன்நிலைத் தரவுகளாக விளங்குகின்றன. இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் இணையத்தளத் தரவுகள் என்பன இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தி பண்புசார் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நவநாகரிகத் தாக்கத்தின் விளைவால் சமூக நல்லுறவில் ஏற்பட்ட முரண்பாடுகளைச் சீர்செய்தல், பாரம்பரிய இந்து சமூகப் பண்பாட்டில் சமகால நாகரிகம் ஏற்படுத்திய தாக்கத்தினையும், அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் கண்டறிதல் என்பவற்றின் மூலம் தற்கால சந்ததியினரும், எதிர்காலச் சந்ததியினரும் தவறான கலாசாரத்தைப் பின்பற்றுவதனை இல்லாது செய்தலாகும். தற்காலத்தில் ஏற்படும் பாதிப்புக்களைச் சரிசெய்து எதிர்காலத்திற்குச் சிறந்த பாதைக்குரிய உந்துசக்தியினை உருவாக்க முடியும் எனலாம்.

***திறவுச் சொற்கள்:*** *பண்பாடு, நவநாகரிகம், சமூக நல்லுறவு, இந்து சமூகம், கலாசாரம்.*

# இந்து சமயம்சார் தொல்லியல் சின்னங்களும் அழிந்த நகரங்களும்: சிந்துவெளி - அரிக்கமேடு ஆகிய நகரங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**பா.ஜேசினி மதுஷிகா, சாந்தி கேசவன்**
இந்து நாகரிகத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*bjmadushika@gmail.com*

தென்னாசியாவில் இந்தியா நீண்ட தொடர்ச்சியான வரலாற்றுப் பராம்பரியங்களைக் கொண்ட நாடாக விளங்குகின்றது. அந்தவகையில் இந்தியாவின் ஏராளமான இந்துசமயம்சார் தொல்லியல் சின்னங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சிந்துவெளி, அரிக்கமேடு ஆகிய நகரங்களின் தொன்மையையும் தொடர்ச்சியான வரலாற்றையும் நிரூபிக்கும் வகையில் ஏராளமான தொல்லியற் சின்னங்கள் காணப்படுகின்றன. இவ்விரு இடங்களில் ஆராய்ச்சிகள் பல மேற்கொண்டு இருந்தாலும், இந்நகரங்களைப் பற்றி முழுமையான விபரங்கள் வெளிக்கொணரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நகரங்களை மேலும் அகழ்வாய்வுகளிற்கு உட்படுத்தும் போது தமிழரின் பெருமை உலக அரங்கில் பேசப்படும். இவ்விரு இடங்களையும் அகழ்வாய்வு செய்யும் பொழுது வழிபாட்டுக் கட்டடங்கள், மட்பாண்டங்கள், செங்கற்கள், ஈமத்தாழிகள், தெய்வச்சிலைகள், பிராமி ஓடுகள், மதுச்சாடிகள் எனப் பல பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்சின்னங்கள் இவ்விரு நகரங்களின் வரலாற்றுத் தொன்மையை எடுத்துக்காட்டுபவையாக அமைகின்றன. இந்நகரங்களில் வாழ்ந்தவர்களது வாழ்க்கைமுறை என்பவற்றைக் கூறுவதோடு இந்நகரங்கள் என்ன காரணத்தினால் அழிந்தது என்பது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரம்ப காலத்தில் இந்நகரங்களின் விஸ்தரிப்பு ஏனைய நாடுகளுடன் இருந்தாலும் இன்று இவ்விரு நகரங்களின் நிலை என்னவென்பதும் இந்நகரங்கள் தமிழர்களின் பிறப்பிடமாகவும் இருந்துள்ளது என்பதனை நிரூபிக்கவும், இந்நகரங்களின் வரலாற்றுத் தொன்மையை வெளிக்கொணர்வதால் உலக வரலாற்றில் தமிழருக்கான மதிப்பினை அடையாளப்படுத்தவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *அரிக்கமேடு, சிந்துவெளி, நகரங்கள்*

# நாவற்குழி திருவாசக அரண்மனை, கொக்கட்டிச்சோலை திருமந்திர அரண்மனை உருவாக்கத்தில் கலாநிதி ஆறு.திருமுருகனின் பங்களிப்பு

**தவராசா லக்ஸ்சனா, வ. குணபாலசிங்கம்**
இந்து நாகரிகத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
Shanaluxshi19970118@gmail.com

நீண்ட கால வரலாற்றைக் கொண்ட இந்துசமயம் பல தலைமுறைகளாக பண்பாடு, கலை, கலாசாரம், இந்து இலக்கியங்கள் என்பவற்றைப் பாதுகாக்கின்றது. இவை அன்று தொட்டு இன்று வரை சமயப்பெருந்தகைகளினால் பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகின்ற போக்கைக் காணமுடிகின்றது. அந்தவகையில், ஈழத்திலும் சமயப்பெருந்தகைகள் தோற்றம் பெற்றுள்ளனர். அவர்களில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் குறிப்பிடத்தக்கவர். சிவபூமியின் அறக்காவலனாக இருந்து சைவசமயத்தை வளர்த்து வருகின்றவர்களில் இவரும் ஒருவராவார். இந்து சமய இலக்கியங்கள் அச்சு நூல் வடிவங்களிலும் இணையவழிகளிலும் பாதுகாக்கப்படுகின்றன. இவற்றை அழியாது பாதுகாப்பதற்காக அரண்மனையினை அமைத்து புதிய முயற்சிக்கு வித்திட்டார். இவை எதிர்காலத்திற்கும் பாதுகாப்பாக அமையும் என நம்பப்படுகிறது. ஆறு திருமுருகனின் சமய, சமூகப் பணிகளை வெளிப்படுத்தல், சிவபூமி அறக்கட்டளையின் பணிகளை விபரித்தல், நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை மற்றும் கொக்கட்டிச்சோலை சிவபூமி திருமந்திர அரண்மனை தொடர்பான விடயங்களை ஆராய்தல் போன்றவற்றை நோக்காகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வானது ஆறு. திருமுருகனுடனான நேர்காணல், இணையக் காணொளிகள், நேரடி அவதானிப்பு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதாக அமைந்துள்ளது. களஆய்வு, பகுப்பாய்வு, விபரணஆய்வு போன்ற ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. திருவாசக அரண்மனை, திருமந்திர அரண்மனை அமைவிடம், திருவாசக மற்றும் திருமந்திர பொறிப்பு முறை, வழிபாட்டு முறைகள், நுண்கலைவளர்ச்சி, அரண்மனைகளின் சிறப்புகள், அரண்மனை வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கோலம், சமூக நல்லுறவு போன்றவற்றைச் சமூகத்திற்கு வெளிப்படுத்தும் வகையில் இவ்வாய்வு அமைகின்றது. மேலும் இவ்வாய்வு இது போன்ற புதிய சிந்தனைகள் தோற்றம் பெறுவதற்கும் வழிவகுக்கும்.

**திறவுச் சொற்கள்:** *கலாநிதி ஆறு.திருமுருகன், திருவாசக அரண்மனை, திருமந்திர அரண்மனை, கருங்கல் தேர்*

# Ethics and Human Values

# இணையவழிக் குற்றங்களில் தகவல் தொழில்நுட்பத்தின் செல்வாக்கு - ஒரு பிரயோக ஒழுக்கவியல் நோக்கு

**தேவதாஸ் தவேநிதா, முனியாண்டி ரவி**
தத்துவவியல் மற்றும் விழுமிய கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், *இலங்கை.*
*thavanithathevathas@gmail.com*

நவநாகரிக யுகத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது துரிதமான வளர்ச்சியை அடைந்துள்ளது. இது ஒரு புறம் இருக்க மறுபுறம் இணையப் பாவனையானது சமூகத்தின் மத்தியில் இன்றியமையாததாக காணப்படுகின்றது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை இணையத்தின் வாயிலாக பாவிக்கின்ற போது ஏற்படுகின்ற ஒரு பெரும் பாதகமான விளைவாகவே இணையவழிக் குற்றங்கள் கருதப்படுகின்றன. புதியவகை பிரச்சினையாக உருவெடுத்துள்ள இணையவழிக் குற்றங்கள் பற்றிய ஆய்வாகவே இவ்வாய்வானது அமையப் பெற்றுள்ளது. அந்தவகையில் இணையவழிக் குற்றங்களிற்கு அடிப்படையாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான அபரிமிதமான வளர்ச்சிதான் காரணமாகின்றது என்பதனையும் இதன்வழியாக சமூகத்தில் ஏற்படுத்தப்படுகின்ற ஒழுக்கமீறுகைகளைக் கண்டறிவதையும் நோக்கமாக இவ்வாய்வு கொண்டுள்ளது. கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்தான் இணையவழிக் குற்றங்களுக்கு அடிநாதமாக அமைகின்றது எனும் முடிவுக்கு வர முடிகின்றது. இதன் அடிப்படையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துகின்ற பயனர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நுட்பமுறைகள், கொள்கை மற்றும் திட்டமிடுதல் சார்ந்தோர்கள் பின்பற்ற வேண்டிய நியதிகள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வடிவமைப்பாளர்கள் எதிர்காலத்தில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் போன்ற பரிந்துரைகளையும் இவ்வாய்வானது வெளிப்படுத்துகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *இணையவழிக் குற்றங்கள், ஊடுருவுதல், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், தரவுத் திருடர்கள்*

# மகாபாரதம் வெளிப்படுத்தும் வாழ்வியல் தத்துவம் - ஒழுக்கவியல் அடிப்படையிலான ஓர் ஆய்வு

**நித்திஞானம் றொசாயினி**
gnanam746knithirosh@gmail.com

இந்த உலகில் மானிடராய்ப் பிறந்த அனைவரும் வாழ்தல் பொருட்டு பல்வேறு ஒழுக்கக் கருத்துக்களையும் விழுமியப் பண்புகளையும் பின்பற்றுபவர்களாகவே காணப்படுகின்றனர். ஆதிகாலம் தொடக்கம் இன்று வரை நல்லொழுக்கமானது மனிதனின் உயர்பண்பாக கருதப்படுகின்றது. நல்லொழுக்கம் எனப்படுவது மனிதர்களை நல்வழிப்படுத்தும் சிறந்த ஆயுதமாகவும் காணப்படுகின்றது. அந்தவகையில், மகாபாரதம் வெளிப்படுத்தும் வாழ்வியல் தத்துவம் - ஒழுக்கவியல் அடிப்படையிலான ஓர் ஆய்வு எனும் தலைப்பின் ஊடாக மகாபாரதமானது சமயச்சார்புடையதாகக் காணப்பட்டாலும் ஒழுக்கவியல் கருத்துக்களையும் கொண்டதாகவே காணப்படுகிறது என்பதனையும் இவ்வொழுக்கவியல் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்குமாற்றினையும் வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். மேலும், ஒழுக்கத்தின் முக்கியத்துவம் என்ன என்பதை அறிந்து கொள்ளுதல், ஒரு மனிதன் கடைப்பிடிக்கும் ஒழுக்கத்தின் மூலம் வாழ்வில் எவ்வாறான உயர்ந்த நிலையினை அடையலாம், ஒழுக்கமற்ற மனிதர்களின் வாழ்வு எவ்வாறு காணப்படும் ஆகிய துணை நோக்கங்களையும் இந்த ஆய்வு கொண்டுள்ளது. இவ்வாய்வு இலக்கியத்தில் காணப்படும் கோட்பாட்டு விடயங்களைப் பகுப்பாய்வு செய்வதனால் இது விபரிப்பு ஆய்வாகவே அமையும். இதனால் பண்புசார் ஆய்வுமுறை இங்கே பிரயோகிக்கப்படுகின்றது. இந்த ஆய்வினை மேற்கொள்வதற்கு இரண்டாம் மற்றும் மூன்றாம் தர மூலங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஆய்வுக்குரிய விடயம் பண்புசார் அடிப்படையில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு முடிவு காணப்படுகின்றது. மனிதன் தனக்கெனக் காணப்படும் வாழ்வியல் ஒழுக்கத்திலிருந்து மீறாது அவ்வொழுக்கத்தினைப் பேணுவதன் மூலம் சமூகத்தில் பல்வேறு விதமான சமூக சீர்கேடுகளிலிருந்தும் பிரச்சினைகளிலிருந்தும் மீள முடியும். அந்தவகையில், மகாபாரதத்தில் குறிப்பிடப்படும் ஒழுக்க சிந்தனைகள் குறித்த இவ்வாய்வு ஒரு மனிதனின் நல்வாழ்க்கைக்கு உகந்ததாகவே காணப்படுகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *ஒழுக்கம், மகாபாரதம், தர்மம், கர்மம்*

# திருக்குறள் மற்றும் நாலடியாரில் இல்வாழ்க்கை எனும் எண்ணக்கருவும் அதன் தனித்துவமும் - தமிழர் மெய்யியல் சிந்தனை நோக்கில் ஓர் ஒப்பீட்டு ஆய்வு

**நோமன் றொசாயிறோ ஜான்சி, முனியாண்டி ரவி**
தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை
jency1997.07@gmail.com

தமிழர் மெய்யியலின் ஆய்வுப் பொருண்மைகளில் திருக்குறள் மற்றும் நாலடியார் எனும் இரு பதினெண் கீழ்க்கணக்கு நீதி நூல்களும் தனித்துவமான இடத்தினைப் பெற்றுக்கொள்கின்றன. சங்கமருவிய கால/அறநெறிக்கால நூல்களாக இவை இரண்டும் அறியப்படுகின்றன. திருக்குறளில் இல்லறவியல் இல்வாழ்க்கை தொடக்கம் புகழ் ஈராக இருபது அதிகாரங்களையும் கொண்டமைந்தது. இல்லறவியலில் இடம்பெறும் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், புதல்வரைப் பெறல், அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்நன்றி அறிதல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெ∴காமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினை அச்சம், ஒப்பறிவறிதல், ஈகை, புகழ் என்னும் அதிகாரங்கள் இல்லறத்தின் தனித்துவமான விடயங்களை வெளிப்படுத்துகின்றது. நாலடியார் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரதான பகுதிகளையும் அறத்துப்பாலில் இரண்டு இயல்களும், பொருட்பாலில் ஏழு இயல்களும், காமத்துப்பாலில் இரண்டு இயல்களுமாக மொத்தம் பதினொரு இயல்களில் நாற்பது அதிகாரங்களையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து பாடல்கள் உள்ளடங்களாக நானூறு வெண்பா பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. நாலடியாரின் அறத்துப்பாலில் உள்ளடங்கும் பொறையுடைமை, பிறர்மனை நயவாமை, ஈகை, பழவினை, மெய்மை, தீவினை அச்சம் போன்ற அதிகாரங்களில் இல்லறம் தொடர்பான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, நாலடியாரிலும் திருக்குறளிலும் இல்லறத்தின் சிறப்பு மற்றும் அதன் தனித்துவமான பண்புகளைப் பகுத்தறிந்து சிறந்த இல்லற வாழ்விற்கான அடையாளத்தினை இனங்கண்டு கொள்வதனைப் பிரதான நோக்கமாகக் கொண்டதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. இதற்காக நாலடியார் மற்றும் திருக்குறளின் மூலநூல்களும் தெளிவுரைகளும் மற்றும் இவை தொடர்பாக இணையதளத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்களும் இரண்டாம் நிலைத் தரவுகளாக பயன்படுத்தப்பட்டு பண்பு சார்ந்த ஆய்வாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இல்வாழ்க்கை பற்றிய பல பரிணாமங்களில் இருந்து மிகச்சிறந்த இல்வாழ்க்கையின் தனித்துவமான பண்புகளை வளர்ப்பதில் நாலடியார் மற்றும் திருக்குறளில் உள்ள தத்துவ சிந்தனைகள் எவ்வாறு பிரயோகிக்கப்பட முடியும் என்ற ஆய்வுப் பிரச்சினையினை மையமாகக் கொண்டு இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. நாலடியாரிலும் திருக்குறளிலும் இல்வாழ்க்கையின் சிறப்பு எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டு இருக்கின்றது. இல்வாழ்க்கையும் அதன் தனித்துவமான பண்புகள் பற்றி இவ்விரு நூல்களிலும் முன்வைக்கப்பட்டுள்ள முன்வைப்புக்களிலுள்ள தத்துவார்த்தப் போக்கு என்ன, இல்வாழ்வான் மற்றும் இல்வாழ்வாளின் கடமை என்ன, இல்லற வாழ்க்கையினைச் சிறப்படையச் செய்யத் தேவையான பண்புகள் தொடர்பாக இவ்விரு நூல்களிலும் முன்வைக்கப்படடுள்ள முன்வைப்புக்கள் எவை என்பன குறித்த ஆய்வு வினாக்களுக்கு விடைகளை கண்டறியும் முயற்சியாக இவ்வாய்வு உள்ளது. இவ்வாய்வின் மூலம் இல்வாழ்க்கை எனும் கருத்தினைத் திருக்குறள் மற்றும் நாலடியார் என்பன சில இடங்களில் ஒரே விதமாகவும் வேறுவிதமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பதை விளங்கிக் கொள்ள முடிகின்றது. மேலும் சிறந்த இல்வாழ்க்கையின் தனித்துவமான பண்புகளையும், இல்வாழ்க்கையின் முக்கியத்துவத்தினையும், சிறந்த கணவன் மற்றும் மனைவியின் கடமைகளையும், இன்றைய காலத்தில் இல்லற வாழ்க்கை சிறந்ததாகப் பேணப்பட வேண்டிய அவசியத்தினையும் குறித்து அறிந்து கொள்வதோடு இல்லற வாழ்விற்கான சரியான அர்த்தத்தையும் பண்டைய தமிழர் வாழ்வில் இல்வாழ்க்கை எத்தகைய சிறப்பிடம் பெற்றிருக்கின்றது என்பதையும் விளங்கிக் கொள்ள முடியும்.

***திறவுச் சொற்கள்:*** *இல்வாழ்க்கை, திருக்குறள், நாலடியார், இல்வாழ்க்கையின் சிறப்பு*

# இந்து மற்றும் சமண சமயங்களில் காணப்படும் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்கள் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு

**லிங்கமூர்த்தி விரிதரன், இரத்தினசபாபதி பிரேம்குமார்**
தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*viritharanmoorthy@gmail.com*

ஞானத்தின் தேடலாக அமைந்த மெய்யியல் துறைகளில் ஒன்றாக ஒழுக்கவியல் காணப்படுகிறது. ஒழுக்கவியலானது பல்வேறுபட்ட ஒழுக்கப் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. அந்தவகையில், ஒழுக்கவியலின் ஒரு முக்கிய பகுதியாக சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் காணப்படுகின்றது. சமயங்கள் சுற்றுச்சூழல் ஒழுக்கச் சிந்தனைகளில் தனது பங்களிப்பினைச் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. உலகில் உள்ள பல்வேறு மதங்களும் பிரபஞ்சம், பூமி, உயிரினங்கள் என்பன ஒன்றையொன்று சார்ந்துள்ளன எனவும் அன்பு, அகிம்சை, ஒழுக்கம், சமாதானம், இரக்கம் முதலான பண்புகளைப் பரஸ்பரம் கொண்டிருக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றன. சூழலானது உலகத்திற்கு அவசியமான ஒன்றாகும். அதிலும் சுற்றுச்சூழலை ஒழுங்காக வைத்திருப்பது எமது கடமையாகும். சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் என்பது மிகவும் அண்மைக்காலத்தில் உருவான ஒழுக்கவியலின் ஒரு பகுதியாகும். இது மனிதர்கள் மற்றும் மனிதர்கள் அல்லாத விலங்குகள், தாவரங்கள் மற்றும் உயிரற்ற பொருட்கள் என்பவற்றுக்கிடையே காணப்படும் தொடர்பினை ஆராய்வதுடன் மனிதர்களைப் போலவே மனிதர்கள் அல்லாதவை நடத்தப்பட வேண்டும். அவற்றிற்கும் மனிதர்களைப் போலவே சம உரிமை உள்ளதெனக் கூறுகின்றது. இத்தகைய பின்புலத்திலேயே இந்து மற்றும் சமண சமயத்தில் காணப்படும் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. இவ்வாய்வுக் கட்டுரை இந்து மற்றும் சமண சமயங்களில் எவ்வாறு சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்கள் காணப்படுகின்றது என்பது பற்றி ஆய்வு செய்கிறது. சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்கள் இரு மதங்களிலும் காணப்படும் உயிருள்ள, உயிரற்ற பொருட்களான தாவரங்கள், விலங்குகள். ஐம்பூதங்கள், வழிபாடுகள் போன்றவற்றை உள்ளடக்குவது குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வுக் கட்டுரை இந்து மற்றும் சமண மதங்களின் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்களில் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பிட்டுப் பகுப்பாய்வு செய்வதை முக்கிய இலக்காக கொண்டுள்ளது. மேலும், சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும் இவ்வாய்வு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வு இந்து சமண இலக்கிய மூல நூல்களையும் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் தொடர்பான ஆய்வு மூலங்களையும் அடிப்படையாக கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

***திறவுச் சொற்கள்:*** *இந்து, சமணம், சுற்றுச்சூழல் ஒழுக்கவியல், விழிப்புணர்வு*

# Literature and Society

# இராஜம்கிருஸ்ணனின் நாவல்கள் வெளிப்படுத்தும் பெண்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும்

**ஞா. சுதர்சுயா**
தமிழ்க் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
vgsuya1027@gmail.com

இராஜம்கிருஸ்ணனின் படைப்புக்களுக்கென இலக்கிய உலகில் ஓர் முக்கியத்துவம் உண்டு. 1925 ஆம் ஆண்டு முசிறி என்ற இடத்தில் பிறந்தவர் இராஜம்கிருஸ்ணன். இவர் ஒரு இலக்கியப் படைப்பாளியாக உருவெடுப்பதற்கு இவரது மும்மொழி நூற்புலமையும் தமிழ் இதழ்களின் மீதான வாசிப்பனுபவமும் முக்கிய காரணங்களாக அமைந்தன. இராஜம்கிருஸ்ணனின் சிறுகதை, நாடகம், பயணக்கட்டுரை, மொழிபெயர்ப்பு போன்ற படைப்புக்கள் முற்போக்குச் சிந்தனை, சமூக நோக்கு, உறுதியான கொள்கைப் பிடிப்பு, பெண்ணியப்பார்வை, அடித்தட்டு மக்களையும் பாத்திரமாக்கும் திறன், நேர்த்தியான கதை சொல்லல், வேறுபட்ட உள்ளடக்கங்கள், சிறந்த மொழிநடை முதலானவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளன. இவ்வாறு பல்துறைசார் படைப்புக்களை வெளியிட்டிருந்தாலும் இலக்கியப்புலத்தில், இவரது கூட்டுக்குஞ்சுகள், சேற்றில் மனிதர்கள், மானுடத்தின் மகரந்தங்கள், சுழலில் மிதக்கும் தீபங்கள், மண்ணகத்துப் பூந்துளிகள், கோபுர பொம்மைகள், மாறிமாறிப் பின்னும், கோடுகளும் கோலங்களும் ஆகிய நாவல்கள் தனித்துவம் வாய்ந்தவையாக விளங்குகின்றன. ஏனைய இலக்கிய ஆளுமைகளின் நாவல்களை விட இவரது நாவல்கள் பல விடயங்களைப் பற்றி பேசினாலும் அவற்றுள் பெண்ணியத்தை பற்றி எடுத்துரைப்பதில் இணையற்றவையாகத் திகழ்கின்றன. பெண் அடக்குமுறைக்குட்பட்ட சூழலில் இவர் வாழ்ந்ததனால் பெண்ணியம் சார்ந்த விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளமை இவரது நாவல்களைப் படிக்கும்போது நன்கு புலனாகிறது. சுருங்கக்கூறின் பெண்ணியம் என்பது அனைத்து வகைப்பெண்களும் சம உரிமைகளோடு வாழ்தல் ஆகும். அந்தவகையில், ஆண், பெண் சமத்துவம், பெண்சிசுக்கொலை, பெண்கல்வி மறுக்கப்படுதல், வரதட்சணை, பாலியல் சுரண்டல், கைம்பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மறுமணத்தடை, வேலைக்குச்செல்லும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கலாசாரச் சிக்கல் என சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அவற்றிற்கான தீர்வுகளையும் இவரது நாவல்கள் எடுத்துரைக்கின்றன. பெண்கள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்பட இவரது நாவல்கள் அளப்பரிய பங்காற்றுகின்றன. அந்தவகையில் 1980 – 2000 வரையான காலப்பகுதியில் எழுந்த இவரது நாவல்களில் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் பற்றியும், அந்நாவல்களினூடாகவே அச்சிக்கல்களுக்காக அவர் கூறியுள்ள தீர்வினையும் சமூகத்திற்கு எடுத்துரைக்கும் நோக்கத்துடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. ஈழத்தைப் பொறுத்தவரையில், இவரது படைப்புகளில் வெளிப்படும் பெண்ணியம் சார்ந்த விடயங்கள் தொடர்பான ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது ஆய்வுப் பிரச்சினையாகும். இராஜம்கிருஸ்ணனின் நாவல்கள் மற்றும் குறித்த ஆய்வுடன் தொடர்புபட்டவகையில் வெளிவந்துள்ள நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வு மூலங்களாகப் பயன்படுகின்றன. இவ்வாய்வானது விபரண ஆய்வு அணுகுமுறையினூடாக மேற்கொள்ளப்படுகிறது.

***திறவுச் சொற்கள்:*** *பெண்ணியம், நாவல்கள், சமஉரிமை, தனித்துவம், சமூகம்*

# புறப்பாடல்களில் சீறூர் மன்னர் சமுதாயம்: மானிடவியல் அணுகுமுறை

**ம. பிரேமா**
தமிழாய்வுத்துறை,
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி- 620002.
premasusairaj@gmail.com

**க. விஜயகுமாரி**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி-02.
vijisurya277@gmail.com

.

சங்கப் பாடல்கள் அகம், புறம் எனும் இருவகையில் அடங்குகின்றன. இவை ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாய் அக்கால மக்களின் பண்பாடு, அரசியல், சமூகம், பொருளாதாரம் பற்றிப் பல்வேறு செய்திகள் தருவதாய் அமைந்துள்ளன. குறிப்பாக, புறப்பாடல்கள் தொன்மை இனக்குழு மக்களின் வாழ்வியல் முறைகளை எடுத்தியம்பும் அடையாளச் சின்னமாய் விளங்குகிறன. நால்வகை நிலங்களிலும் சங்காலத் தலைவர்களாகத் திகழ்ந்தவர்களை சீறூர் மன்னர், முதுகுடி மன்னர், குறுநில மன்னர், வேந்தர் என நான்கு வகையில் அறியமுடிகின்றது. இவ்வகையில் பண்பாட்டு மானிடவியல் அணுகுமுறையின் மூலம் சீறூர் மன்னர்களின் சமுதாய அமைப்பினை ஆய்வு செய்து இனக்குழுக்களின் பொதுவுடமைச் சிந்தனைகளின் தொகுப்பு பெறப்படுகின்றது.

***திறவுச் சொற்கள்***: *பண்பாட்டு மானிடவியல், சீறூர் மன்னர், வல்லாண்முல்லை, வன்புலம், பாதீடு, புராதன பொதுவுடைமை*

# சங்க இலக்கியத்தில் தாவரங்கள் - ஓர் ஆய்வு

**வெ.முத்துலட்சுமி**
தமிழ்த்துறை,
ஜி.டி.என். கலைக்கல்லூரி,
திண்டுக்கல், தமிழ்நாடு.
profmuthulakshmiv@gmail.com

பழந்தமிழர் மிகுந்த இரசனையோடு வாழ்ந்தார்கள் என்பதற்கு அவர்கள் நமக்கு அளித்த இலக்கியமே சாட்சியாகும். அவர்கள் இயற்கையோடு இயைந்த இயல்பான வாழ்வை வாழ்ந்திருக்க வேண்டும். இயற்கையை இரசித்ததோடு அன்றி, அவற்றைப் பாதுகாக்கும் குறிப்புகளை இலக்கிய நூல்கள் தோறும் காணமுடிகிறது. சங்க இலக்கியத்தில் நீர் நிறைந்த ஆறுகளையும் நிழல் அமைந்த சோலைகளையும் தண்ணிலவையும் காணமுடிகிறது. சங்க இலக்கியத்தில் தாவரங்கள், செடிகொடிகள் பற்றிய பல்வேறு குறிப்புகள் காணப்படுகின்றன. சூழ்நிலை தட்பவெப்பம், மழை ஆகியவற்றைக் கொண்டே நிலங்கள் பகுக்கப்பட்டன. இவ்வாறான நிலங்களில் மரம், பூ முதலியவற்றின் பெயர்களை வைத்துதான் திணைகளைப் பிரித்தனர். திணைகள் வாரியாக மரங்களையும், செடிகளையும், கொடிகளையும் பல பயிரின வகைகளையும் பயிரிட்டனர் என்பதை மரபுவழியாக அறியமுடிகிறது. பழங்காலம் தொட்டே மா, பலா, வாழை ஆகியவற்றை முக்கனிகளாக சேர்த்து அரசர்க்குரிய விருந்தாக கருதி வந்தனர். மருதம், கோங்கு, வேங்கை, மூங்கில் போன்ற மரங்களை வைத்துப் பறை போன்ற கருவிகள் செய்தனர். மூங்கில் மரத்தினைப் பெண்களின் தோளுக்கு உவமித்து ‘ஆடுமை புரையும் வனப்பிற் பணைத்தோள் பேரமர்க் கன்னி’ என்று குறுந்தொகை பாடல் கூறுகிறது. கபிலர் 99 வகையான பூக்கள் குறிஞ்சி நிலத்தில் இருப்பதாகவும் குறிஞ்சிப்பாட்டின் வழி எடுத்தியம்பியுள்ளார். சங்க இலக்கியத்தில் மரங்கள் மட்டுமின்றி செடி கொடிகளையும் புலவர்கள் பலவாறாகப் பாடியுள்ளனர். பொதுவாக கொடிகளை பெண்களின் சிற்றிடைக்கு உவமை கூறுவதும் உண்டு. இயற்கையாக வளர்ந்த பயிரினங்களைக் கண்டறிந்த மனிதன் நிலவாரியாக பயிர்களைப் பயிரிட்டு உண்டு வாழ்ந்தனர் என்ற குறிப்பை இலக்கியத்தின் வாயிலாக தெரிந்துகொள்ள முடிகிறது. நீர்நிறைந்த பகுதிகளில் நெல் போன்ற பயிர்களைப் பயிரிட்டும், நீர்நிலை குறைவான வானம் பார்த்த பூமியில் கம்பு, சோளம், கேழ்வரகு, அவரை, கொள், உழுந்து போன்ற பயிர்களை பயிரிட்டும் விவசாயம் செய்யும் முறையை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

***திறவுச் சொற்கள்***: *சங்க இலக்கியம், தாவரங்கள், கொடிகள், நெல் வகைகள், பயிர் வகைகள்*

# மேலைத்தேய நாடுகளில் இந்து சஞ்சிகைகளும் ஆய்வு இதழ்களும் - ஓர் ஆய்வு

**செல்வராசா லலிதா, சாந்தி கேசவன்**
இந்து நாகரிகத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*danulalitha@gmail.com*

“மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்” என்பது கச்சியப்ப சிவாசாரியார் வாக்கு. இவ்வாக்கிற்கு அமைய இந்து மதத்தின் பல கூறுகளும் பண்பாடுகளும் இன்று மேலைத்தேய கலாசாரம் கொண்ட, இந்து மதத்தோடு தொடர்பில்லாத மேலைத்தேய நாடுகளில் சிறந்த முறையில் கடைப்பிடிக்கப்பட்டும், வளர்க்கப்பட்டும் வருகின்றன. இந்து மதம் தோன்றி வளர்ந்த எமது நாடுகளைக் காட்டிலும் இம்மேலைநாடுகளில் பெரும் செல்வாக்கினைப் பெற்றுக் காணப்படுகின்றது. இவ்வகையில், இவ்வாய்வானது மேலைத்தேய நாடுகளில் வெளிவரும் அன்புநெறி, ஆத்மஜோதி, கலசம், Journal of Hindu Studies, சிவஒளி, மின்மினி, Hinduism Today ஆகிய இந்து சஞ்சிகைகள் அங்கு புலம்பெயர்ந்து வாழும் இந்து சுதேச மக்களிடத்திலும் அந்நாட்டு மக்களிடத்திலும் இந்து மதக் கருத்துக்களை எவ்வகையில் பரப்புகின்றது என்பதனை ஒருங்கிணைத்துத் தருவதோடு இந்துப் பண்பாட்டினைப் பரப்பும் ஓர் ஊடகமாக எத்தகைய பணிகளை ஆற்றுகின்றது என்பது பற்றியும் அந்நாடுகளில் இந்து மதம் கொண்டுள்ள செல்வாக்கு பற்றியும் தெரியப்படுத்துவதாக அமைந்துள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *சுதேச இந்து மக்கள், இந்துப் பண்பாடு, மேலைத்தேய நாடுகள்*

# Literature and Contemporary Voices

# பேராசிரியர் வ. மகேஸ்வரனின் தமிழ் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் - ஒரு நோக்கு

**சபேசன் சுகன்யா, ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்**
தமிழ்க் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
sukanjasapesan@gmail.com

பேராசிரியர் வ. மகேஸ்வரனின் எழுத்துக்கள் ஈழத்து ஆய்வு உலகில் முக்கியத்துவமுடையனவாகவும் தனித்துவமிக்கனவாகவும் அமைகின்றன. அந்தவகையில், இவ்வாய்வானது பேராசிரியர் வ. மகேஸ்வரனின் ஆய்வுக்கட்டுரைகளைக் கால அடிப்படையில் பகுத்து ஆராய்கின்றது. இவரின் தமிழ் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டு அவை குறித்த கருத்துநிலையினையும் கண்ணோட்டத்தினையும் வெளிக்கொணரும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக 1990 - 2022 வரை இவரால் எழுதப்பட்ட கட்டுரைகள் இவ்வாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மகேஸ்வரன் எழுதிய தமிழ் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் பற்றிய முழுமையான ஆய்வுகள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை என்பது ஆய்வுப்பிரச்சினையாக அமைகின்றதுடன் இவ்வாய்வானது விவரண மற்றும் பகுப்பாய்வு முறையியல் என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்விற்காக அவருடனான செவ்வி மற்றும் ஆண்டு மலர்கள், சஞ்சிகைகள், பருவ இதழ்கள், நூல்கள், ஆய்விதழ்கள், என்பவற்றில் வெளிவந்த மகேஸ்வரனின் ஆய்வுக்கட்டுரைகள் முதலாம் நிலைத்தரவுகளாகவும், வ. மகேஸ்வரன் பற்றி இதழ்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், பணிநயப்பு விழா மலர், வானொலி நிகழ்ச்சிகள் என்பவற்றில் வெளியான கட்டுரைகள், இணையத்தினூடாக பெற்றுக்கொண்ட வ. மகேஸ்வரன் பற்றிய தகவல்கள் என்பன இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. பேராசிரியர் வ. மகேஸ்வரனின் தமிழ் இலக்கிய ஆய்வுக்கட்டுரைகள் பெறும் முக்கியத்துவத்தினை இலக்கிய உலகிற்கு வெளிக்கொண்டு வருதல் என்ற அடிப்படையில் இவ்வாய்வானது முக்கியத்துவம் பெறுகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *பேராசிரியர் வ. மகேஸ்வரன், இலக்கியப்படைப்புக்கள், படைப்பாளுமை, ஆய்வுக்கட்டுரைகள், ஆய்விதழ்கள்*

# வ.ஐ.ச.ஜெயபாலனின் புலம்பெயர் கவிதைகள் - ஓர் ஆய்வு

**கிருபாகரன் சிந்துஜா, ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்**
தமிழ்க் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
sinthuya008@gmail.com

1970களின் பின்னர் ஈழத்துக் கவிதை பெரும்பாலும் புதுக்கவிதையாகவே மாறிவிட்டது. முற்போக்கான கவிதைகளே இன்றைய புதுக்கவிதையின் பலம் என்று சொல்ல வேண்டும். அந்தவகையில், சொந்த அனுபவ வெளிப்பாட்டுக்கு முதன்மை கொடுக்கும் வகையிலும், சமூக அரசியல் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையிலும் வ.ஐ.ச.ஜெயபாலன் புதுக்கவிதையைப் படைக்கத் தொடங்கினார். 1970களின் பின்னர் கவிதையுலகில் பிரவேசித்த வ.ஐ.ச.ஜெயபாலன் புலம்பெயர்ந்து செல்லும் முன்பிருந்தே கவிதை எழுதிவந்துள்ளார். இன ஒடுக்குதலால் உண்டான பிரச்சினைகளால் கவிஞர் புலம்பெயரவேண்டிய நிர்ப்பந்தம் உருவானது. கவிஞரின் வாழ்வில் இரு புலம்பெயர்வுகள் இடம்பெற்றன. 1984ல் இந்தியாவை நோக்கியும், பின் சமாதான காலத்தில் இலங்கை வந்த கவிஞர் இலங்கையின் அசமந்தமான சூழ்நிலையால் மீண்டும் 1987இல் நோர்வே நாட்டையும் நோக்கியதாக கவிஞரின் புலப்பெயர்வு அமைந்தது. எனினும், இவ்வாய்வில் வ.ஐ.ச.ஜெயபாலனின் கவிதைகளில் அவர் புலம்பெயர்ந்து சென்ற பின்னர் எழுதிய கவிதைகளே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலனுடைய கவிதைகள் ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் இன்றியமையாத பங்களிப்பை வழங்கியதோடு தனித்துவமான இடத்தையும் பெற்றுள்ளன என்ற அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வ.ஐ.ச.ஜெயபாலனின் புலம்பெயர்ந்த பின்னரான கவிதைகள் புலம்பெயர் மக்களின் வாழ்வியல் அம்சங்களையும், புலப்பெயர்வின் சூழலையும், அதன் அவலங்களையும், காதல் மற்றும் பிரிவின் வலியையும் பிரதிபலிப்பனவாக அமைகின்றன. எனவே, வ.ஐ.ச. ஜெயபாலன் புலம்பெயர்ந்த பின்னர் எழுதிய கவிதைகளைத் தொகுத்து அதன் தனித்துவத்தை வெளிக்கொண்டுவரும் நோக்குடன் இவ்வாய்வு அமைந்துள்ளது. இவ்வாய்வில் வ.ஐ.ச.ஜெயபாலனின் புலம்பெயர்ந்த பின்னரான கவிதைகளின் உள்ளடக்கமும் ஆக்கமுறைமையும் கருத்துவெளிப்பாடும் ஆராயப்பட்டுள்ளன. ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் வ.ஐ.ச.ஜெயபாலன் பெறும் முக்கியத்துவம் வெளிப்படும் வகையிலும் இவ்வாய்வானது அமைகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *அந்நியமாதல், புகலிடம், இனஒடுக்கல், நிறவெறி, சமூகம்*

# அ.செ.முருகானந்தனின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு

**ஷம்சிகா ஜீவகரன், விஜிதா திவாகரன்**
தமிழ்க் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*shamshamshi417@gmail.com*

அ.செ.முருகானந்தன் ஈழத்துச் சிறுகதை ஆசிரியர்களில் முக்கியமான எழுத்தாளராவார். இவ் ஆய்வானது அ.செ.முருகானந்தனது சிறுகதைகளை உள்ளடக்கரீதியிலும், சிறுகதைகளில் கையாளப்பட்டுள்ள உத்திமுறைகளின் அடிப்படையிலும் விரிவாக ஆராய்கின்றது. ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் மக்களின் வாழ்வை யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்தும் சிறுகதைகளாக இவரின் சிறுகதைகள் எங்ஙனம் அமைகின்றன என்பது பற்றியும், ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் அ.செ.முருகானந்தனின் பங்களிப்பு மற்றும் அவரின் சிறுகதைகள் பெறும் முக்கியத்துவம் என்பது குறித்து மதிப்பிடுவதும் ஆய்வின் நோக்கங்கள் ஆகும். அ.செ.முருகானந்தனது அனைத்துச் சிறுகதைகளும் கிடைக்கப்பெறாமை இவ்வாய்வில் எதிர்கொண்ட சவால் ஆகும். இருப்பினும், அ.செ.முருகானந்தனது நூல்களில் வெளிவந்த சிறுகதைகளை மட்டும் இவவாய்விற்கு எடுத்துக்கொண்டு, அ.செ.முருகானந்தனது சிறுகதைகள் வெளிவந்த நூல்களை முதல்நிலைத்தரவாகவும் அவர் தொடர்பாக சஞ்சிகைகள், பிறநூல்களில் வெளிவந்த கட்டுரைகளை இரண்டாம் நிலைத்தரவாகவும் கொண்டு இவவாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. அ.செ.முருகானந்தனின் சிறுகதைகளை விரிவாக ஆய்வுக்கு உட்படுத்தி அவரது சிறுகதைகளின் தனித்துவத்தை வெளிக்கொணர்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

***திறவுச் சொற்கள்***: *அ.செ.முருகானந்தன், இலங்கைத் தமிழ்ச் சிறுகதை, சிறுகதை உத்திகள், மறுமலர்ச்சிக் காலம்*

# பேராசிரியர் செ.யோகராசாவின் ஈழத்து நவீன தமிழ் இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகள் - ஓர் மதிப்பீடு

**அமிர்தலிங்கம் அனிதா, நதிரா மரியசந்தனம்**
தமிழ்க் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
Ani19970802@gmail.com

ஈழத்துக் கல்விப் புலத்திலும் இலக்கியப் புலத்திலும் நன்கறியப்பட்ட பன்முக ஆளுமை கொண்டவராகத் திகழும் செ.யோகராசா ஈழத்து நவீன தமிழ் இலக்கியங்கள் பற்றி மேற்கொண்ட ஆய்வுகள் தனித்துவமுடையனவாகவும் முக்கியத்துவம் உடையனவாகவும் அமைகின்றன. செ.யோகராசா ஈழத்து நவீன தமிழிலக்கியம் பற்றி மேற்கொண்ட ஆய்வுகள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. ஈழத்து நவீன தமிழிலக்கியம் பற்றிய இவருடைய ஆய்வுகளை வெளிக்கொணர்தல் இவ்வாய்வின் முக்கியத்துவமாக அமைந்துள்ளது. ஆரம்ப காலத்தில் படைப்பிலக்கியகர்த்தாவாக அறிமுகமாகிய இவர் எழுதிய சிறுகதைகளும் கவிதைகளும் அவரது இலக்கியப் படைப்பாளுமையை வெளிப்படுத்தின. செ.யோகராசாவின் பன்முக ஆளுமை அவர் எழுதிய நூல்கள், சிறு பிரசுரங்கள், கட்டுரைகள், மேடைப்பேச்சுக்கள், நேர்காணல்கள், உரையாடல்கள் வழியே வெளிப்படுகின்றன. கவிதை, புனைகதை உள்ளிட்ட நவீன இலக்கியம், பெண்கள் இலக்கியம், புகலிட இலக்கியம், ஈழத்து இலக்கியங்கள், சிறுவர் இலக்கியம், நாட்டார் இலக்கியம், வாய்மொழி இலக்கியம், திறனாய்வு என்பவற்றில் அதிக ஈடுபாடு கொண்டவராகவும், இவை குறித்த படைப்புக்களைத் தேடுவதிலும், ஆராய்வதிலும், திறனாய்வு செய்வதிலும் தொடர்ந்து ஈடுபட்டுவருபவராகவும் விளங்குகின்றார். எனவே, ஈழத்து நவீன தமிழ் இலக்கியங்கள் தொடர்பான அவரது ஆய்வுகளை மதிப்பீடு செய்வது ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியில் அவரது ஆய்வுகளின் முக்கியத்துவத்தை வெளிக்கொண்டுவருவதற்கு அவசியமானதாகும். இதுவரையில் செ.யோகராசா ஈழத்து நவீன தமிழ் இலக்கியம் தொடர்பாக மேற்கொண்ட ஆய்வுகள் பற்றிய முழுமையான மதிப்பீடுகள் இடம்பெறவில்லை. அவ்வகையில், இவ்வாய்வானது அவரது ஈழத்து நவீன தமிழிலக்கிய ஆய்வுகள் பற்றிய முழுமையான மதிப்பீட்டாய்வாக அமைகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *நவீன தமிழிலக்கியம், செ.யோகராசா, நவீன கவிதை, திறனாய்வு, எதிர்ப்பிலக்கியம், புனைகதை*

# மூதூர் அனஸின் நவீன காவியங்கள் - ஓர் ஆய்வு

**பாலரட்ணம் சரண்யா, நதிரா மரியசந்தனம்**
தமிழ்க் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
balarathnamsaranya2@gmail.com

மூதூர் அனஸின் படைப்புகளில் நவீன காவியங்களுக்குத் தனியானதொரு இடமுண்டு. மூதூர் அனஸின் நவீன காவியங்கள் ஓர் ஆய்வு எனும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வானது மூதூர் அனஸ் எழுதிய நவீன காவியங்களை அவற்றின் உள்ளடக்க மற்றும் காவிய வெளிப்பாட்டு முறைமை என்ற அடிப்படையில் ஆராய்கின்றது. ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் குறிப்பாக நவீன தமிழ்க் காவிய கர்த்தாக்களுள் மூதூர் அனஸ் குறிப்பிடத்தக்கவர். ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியில் மூதூர் அனஸின் நவீன காவியங்கள் முக்கியமானவை என்பதோடு இலக்கியதரம் வாய்ந்தவை என்ற வகையில் அவரது காவியப் படைப்பாளுமையை வெளிக்கொண்டு வருவதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது. இவரது நவீன காவியங்கள் தொடர்பாக இதுவரை எவ்வித ஆய்வுகளும் இடம்பெறவில்லை. இவ்வாய்வானது விமர்சன மற்றும் விளக்கமுறை ஆய்வு அணுகுமுறை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்விற்காக மூதூர் அனஸ் எழுதிய நவீன காவியங்கள் அனைத்தும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அனஸின் அச்சில் வெளிவந்த நவீன காவியங்கள், கையெழுத்துப் பிரதிகளாகவுள்ள நவீன காவியங்கள், மூதூர் அனஸுடனான நேர்காணல்கள் என்பன முதலாம் நிலைத்தரவுகளாகவும் காவிய ஆய்வுகள் குறித்த நூல்கள், சஞ்சிகைகள், இணையதளங்களில் பிற ஆய்வாளர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. எனவே மூதூர் அனஸின் நவீன காவியங்களையும், காவியப் படைப்பாளுமையையும் வெளிக்கொண்டு வருதல் என்ற அடிப்படையில் இவ்வாய்வானது முக்கியத்துவம் பெறுகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *நவீன காவியங்கள், காவியப் படைப்பாளுமை, மூதூர் அனஸ், காவிய வெளிப்பாட்டு முறை, ஈழத்துத் தமிழிலக்கியம்*

# Performance and Aesthetics

# பற்றிஸ் பவிஸின் ஆற்றுகைப் பகுப்பாய்வும் ஈழத்துத் தமிழ் அரங்கப் போக்கும் - ஓர் ஆய்வு

**கா. அற்புதன்**
*atputhan1902@gmail.com*

ஈழத்துச் சமகால தமிழ் அரங்கச் சூழலில் புதிய நுட்பமுறைகள், பயிற்சிகள், கோட்பாடுகள் உருப்பெறுகின்ற நிலையில் பற்றிஸ் பவிஸ் அவர்களால் முன்மொழியப்பட்ட ஆற்றுகைப் பகுப்பாய்வுக்கான வினாக்கொத்து, வினாக்களின் சமகாலச் சாத்தியப்பாடுகள் பற்றி ஆய்வு செய்வதாக இவ்வாய்வு அமைகின்றது. அரங்கவியலாளர்கள் ஆரோக்கியமான ஆற்றுகையைப் பெற அரங்கில் பல அம்சங்களை ஒன்றிணைக்கின்றனர். அந்தவகையில், பற்றிஸ் பவிஸ் அவர்கள் ஆற்றுகையில் காணப்படும் பல அம்சங்களை ஆராய்வதனூடாக வினாக்களை தொடுக்கின்றார். இவ் வினாக்கள் ஈழத்துச் சமகால தமிழ் அரங்கில் ஓர் ஆற்றுகையினைப் பகுப்பாய்வு செய்வதற்கு எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது இவ்வாய்வின் நோக்கமாக் கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வானது பற்றிஸ் பவிஸ் உடைய வினாக்கொத்தில் எவ்வாறான அம்சங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதனை ஆராய்வதுடன் அவ் அம்சங்கள் சமகாலச் சூழலின் மதிப்பீடு பற்றியும் உற்றுநோக்குகின்றது. இவ்வாய்வில் பற்றிஸ் பவிஸ் உடைய வினாக்கொத்து முதலாம் நிலைத் தரவாகவும் அதனோடு தொடர்புடைய இணையம், வெளியீடு, புத்தகங்கள், பத்திரிகைகள் இரண்டாம் நிலைத்தரவாகவும் அமைகின்றன.

***திறவுச் சொற்கள்:*** *வினாக்கொத்து, ஆற்றுகைகள், நுட்பங்கள், சமகாலம், அம்சங்கள்*

# வெண்கல உலோக வார்ப்புக் கைவினையாக்கத் தொழில் முனைவும் அதன் சவால்களும்: மட்டக்களப்பு மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**இளையதம்பி குகநாதன்**
Kuganathan67@gmail.com

ஆதி மனிதர்களின் அறிவுப் புலத்தின் வளர்ச்சிப் போக்கில் காலத்திற்குக் காலம் பல்வேறு அறிவுச் சாதனங்கள் உருவாக்கியுள்ளன. அவை மனித குலம் நீடித்து வாழ்வதற்குப் பயன்பட்டு இருக்கின்றது. இங்கு அறிவினை விருத்தி செய்யும் அடிப்படையின் ஆரம்பம் இயற்கையாகும். இயற்கை மனிதர் வாழ்வதற்கு அடிப்படையானதாய் அமைவதோடு நாகரிகத்தின் கால கட்ட வளர்ச்சிக்கும் மூலவேராய் அமைகின்றது. இங்கு இயற்கையின் உள்ளீடுகளைப் பயன்படுத்தி சூழலிற்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் உருவாக்கப்படுவது வெண்கல வார்ப்புத் தொழில் முனைவாகும். நாட்டுப்புற சமூகத்தின் கைவினை கலைகள் மிகவும் சமூகவயப்பட்டதாகும்; பண்பாட்டு வாழ்வின் அங்கங்களாகும். அன்றாட வாழ்வோடு மிகவும் ஒன்றிக் காணப்படுவதாகும். இந்தக் கலைகளின் சமூகவயத் தன்மை என்பது ஒரு சமூகத்திற்குத் தேவையான கலைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதற்கும் அதன் மூலம் அம்மக்கள் தேவைகள் நிறைவு செய்வதற்கும் உள்ள உறவாகும். அதனுடன் கைவினைப் பொருட்கள் வாயிலாக அச்சமூகம் வெளிப்படுத்தும் கருத்துக்கள், விழுமியங்கள், நெறிமுறைகள், பிற கற்பிதங்கள்யாவும் கலையின் சமூகவயப்பட்ட தன்மையை உணர்த்துவனவாகும். உள்ளூர் அறிவியலில் உருவாக்கப்படும் வெண்கல வார்ப்பு வரலாறு, அதன் உருவாக்கமுறை, உருவாக்கும் சமூகம், மட்டக்களப்பில் இதனை முன்னெடுப்போர், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் எனப் பலவற்றை ஆய்வியல் நோக்கில் ஆராய்கிறது. வெண்கல உலோகக் கைவினையாக்கத் தொழில் முனைவின் உற்பத்திப் பொருட்கள் உருவாக்குவதில் தொடர் பரவாலாக்கத்தின் தொடர்சியின்மையை ஆய்வின் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. வெண்கல வார்ப்பு எனும்போது பயன்பாட்டுப் பொருட்கள், சடங்குப் பொருட்கள், கலைப் பொருட்கள் என்பன உள்ளடங்கும். தமிழ்ச் சமூக பண்பாட்டு வரலாற்றில் அம்மக்கள் செய்யும் தொழில்களின் அடிப்படையில் பல்வேறு சாதிகள் கட்டமைக்கப்பட்டு அவை பரம்பரையாக கடத்தப்பட்டு வந்திருக்கின்றது. இவை தொழில்களின் அடிப்படையில் உயர்ந்த, தாழ்ந்த என்ற எண்ணப்பாடுகளைக் கட்டமைத்து சிந்தனைரீதியாக பரிமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. இங்கு வார்ப்புக் கலைத் தொழிலைச் செய்கின்றவர்களாக கம்மாளர் எனும் சாதி அமைப்பினர் காணப்படுகின்றனர். தச்சர், சிற்பி, குயவர், தட்டார், கொல்லர் என ஐவகைத் தொழில்களைச் செய்கின்றவர்கள் கம்மாளர்கள் என கூறப்படுகின்றனர். ஆரம்பத்தில் மேற்கூறிய சமூகத்திற்குரியதாய் இத்தொழில் முனைவு மட்டக்களப்பில் காணப்பட்டாலும் பின்னர் வார்ப்புத் தொழில் முனைவில் விருப்புள்ளவர்களும் முன்னெடுக்கும் தொழிலாக மாறுகின்றது. எனவே, இத்தொழில் முனைவு குறித்த ஒரு சமூகத்தில் இருந்து விடுபடுவதற்கும் அல்லது இக்கலைஞர்கள் விடுபட்டு வெற்றிகரமாக செல்வதற்கான காரணங்களை அறிந்து, அவற்றை இன்றைய சூழலில் முன்னெடுப்பதற்கான சாத்தியப்பாட்டை நோக்கமாகக் கொண்டு சமகால இலங்கைச் சூழலில் கல்வி முறை மற்றும் ஏனைய தளங்களில் மேற்கொள்ள வேண்டியவற்றை இவ்வாய்வு நிருபிக்கின்றது.

***திறவுச் சொற்கள்:*** *உள்ளூர் அறிவு, தொழில் முனைவு, கம்மாளர், காலனியம்*

# குழந்தை ம. சண்முகலிங்கத்தின் கல்வியியல் அரங்கச் செயற்பாடுகளும் அதன் முக்கியத்துவமும் - ஓர் ஆய்வு

**கு. ரவிச்சந்திரன், புவனேந்திரன் ரதிகலா**
நுண்கலைத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை,
ravichandrank@esn.ac.lk

ஈழத்தில் 1980களில் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களினால் தோற்றுவிக்கப்பட்ட அரங்க முறைகளுள் ஒன்றே கல்வியியல் அரங்காகும். இவ்வரங்கானது பிரயோகநிலை சார்ந்த செயற்பாடுகளில் மிகக் காத்திரமான எதிர் விளைவுகளை ஏற்படுத்துகின்ற அரங்க முறைமை எனும் வகையில் முதன்மை பெறுகின்றது. இன்றைய கல்வி முறைச்சூழல் பாடப் புத்தகங்களோடு மட்டும் மட்டுப்படுத்தி நிற்கும் மாணவர்களை உருவாக்கி விடுவதுடன், கல்வி என்பது பாடப் புத்தகத்தில் இருப்பதை பாடமாக்கி ஒப்புவித்தலோடு முடிவடைகிறது. இந்தவகையில், கல்வியியல் அரங்கானது அதற்கு மாறாக 'செய்து கற்றல்' என்பதையே வலியுறுத்தி நிற்கின்றது. சுருங்கக் கூறின் ''செய்வதினூடாகக் கற்றல்'' கல்வியியல் அரங்கின் சாராம்சமாகும். அறிவூட்டி மகிழ்வைத் தருதல் கல்வியின் பணி, மகிழ்வூட்டி அறிவைத் தருதல் அரங்கின் பணி. கல்விக்கும் அரங்கிற்கும் இடையே காணப்படும் ஒற்றுமையும் வேற்றுமையும் இதுவே ஆகும். இதன் காரணமாகவே கல்விச் செயற்பாடுகளில் அரங்கச் செயற்பாடுகளின் அவசியம் பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. செய்து கற்றல், செய்து பிழை விட்டுத் திரும்பச் செய்து கற்றல், கூடிக் கற்றல், கலந்துரையாடிக் கற்றல், சவால்களை எதிர்கொண்டு பிரச்சினைகளை விடுவிக்கவும் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டுக் கொள்ளவும் கற்றல், தலைமைக்குப் பணியக் கற்றுத் தலைமை தாங்கக் கற்றுக் கொள்ளல், பொது நலனுக்காகக் கூடி உழைக்கும் போது சுயநலத்தை முன்னிறுத்தாதிருக்கக் கற்றுக் கொள்ளல் என்பன கல்வியினதும், அரங்கச் செய்வினைகளதும் விளைபயன்களாகும். மாணவர்களாக இருந்து கல்வியைப் பெறும் வாய்ப்பு உலகில் பெரும்பாலானவர்களுக்குக் கிடைப்பது உண்டு. ஆசிரியராக இருந்து கல்வியை ஊட்டி அறிவினைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்புச் சிலருக்கு மட்டுமே கிடைக்கும். ஆசிரியராகவும் இருந்து கொண்டு நாடகச் செயற்பாடுகளிலும் ஈடுபடும் வாய்ப்பு ஒரு சிலருக்கு மட்டுமே கிடைக்கும். அவர்கள் தாம் வாழ்ந்த காலத்துக் கல்வி மற்றும் நாடக அரங்கு பற்றிய எண்ணக் கருக்களுக்கும் கோட்பாடுகளுக்கும் ஏற்ப கல்விக் கூடங்களில் நாடக அரங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். அதன் பெறுபேறாகக் ''கல்வியியல் அரங்கு'' என்ற சிந்தனை எம்மத்தியில் முகிழ்க்கத் தொடங்கியது. இன்றைய நவீன கல்வி முறையானது போதனை முறைக் கல்வியாகக் காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள் அனைவரும் போட்டி மனப்பாங்குடனும், பரீட்சை மையப்படுத்தப்பட்டும், சான்றிதழை இலக்காகக் கொண்ட மையக் கற்கையாகவும் தங்களுடைய கற்றலை மேற்கொண்டு வருகின்றார்கள். இதனால் மாணவர்கள் தங்களுடைய திறன்களை வெளிப்படுத்தாமல் போதனைமுறைக் கல்விக்குள் முடங்கிப்போயுள்ளனர். இதனால் மாணவர்கள் குழு நிலையில் பங்குபற்றி விளையாட்டாகவும் கற்றலாகவும் ஈடுபடும் செயற்பாடுகள் மூலமாகத் தங்களது கற்பனைகளை, கருத்துக்களை, உணர்வுகளை வெளிப்படுத்துவது, ஆற்றல்களைக் கண்டுபிடிப்பது, கொண்டாடுவது என்பதனூடாக சுயமான படைப்பாக்கத்திறன், சிந்தனைத்திறன், விமர்சனநோக்கு, செயற்பாட்டுத்திறன் என்பவற்றை வளர்த்துக்கொள்ளும் செயல்மையக் கற்றல் முறைமை மூலம் மாணவர்களுடைய திறன்களை வெளிப்படுத்துவதற்கு கல்வியியல் அரங்கு துணைபுரிகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *அறிவூட்டல், ஆளுமை விருத்தி, கல்வியியல் அரங்கமுறைமை, மாணவர் மையக்கல்வி*

# Education and Society

# தரம் ஐந்து புலமைப்பரிசில் மாணவர்களின் கற்றல் அடைவில் பெற்றோர்களின் சமூக - பொருளாதார காரணிகளின் செல்வாக்கு (போரதீவுப்பற்றுக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

**சுஜானா சிவசுதன்**

Sujauthyakumar@mail.com

இவ்வாய்வானது போரதீவுப்பற்றுக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இப்பிரதேசப் பாடசாலைகளிலே புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் பெறுகின்ற அடைவானது மிகவும் தாழ்நிலையில் காணப்படுகின்றது. இதனடிப்படையிலேயே தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களின் கற்றல் அடைவுகளில் பெற்றோர்களின் சமூக பொருளாதார காரணிகளின் செல்வாக்கினைக் கண்டறிதல் எனும் ஆய்வு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்விற்காக ஆய்வு மாதிரிகளாக அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். இவ்வாய்விற்கென தெரிவுசெய்யப்பட்ட 10 பாடசாலைகள் வசதி மாதிரித் தெரிவின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டமைக்கு அமைவாக அதிபர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் நோக்கமாதிரி அடிப்படையிலும், மாணவர்கள் விகிதாசாரத்தின் அடிப்படையிலும், இலகு எழுமாற்று மாதிரித் தெரிவின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டனர். ஆய்விற்கான தரவுசேகரித்தல் கருவிகளாக வினாக்கொத்து, நேர்காணல், ஆவணங்கள் ஆகியன பயன்படுத்தப்பட்டன. இவற்றின் மூலமாகப் பெறப்பட்ட தரவுகள் அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள் பொருத்தமான மென்பொருள் முறைகளினூடாக பகுப்பாய்வு, வியாக்கியானம், கலந்துரையாடல் போன்ற செயற்பாடுகளுக்குள் உள்வாங்கப்படுகின்றன. பகுப்பாய்வு மூலம் பல்வேறு முடிவுகளைக் கண்டறிய முடிகின்றது. போரதீவுப்பற்றுக் கல்விக்கோட்டத்திலே பெற்றோரின் பொருளாதார காரணி மாணவர்களின் கற்றலில் பல்வேறுபட்ட தாக்கத்தினைச் செலுத்துகின்றது. இத்தாக்கமானது பாடசாலைகளின் கற்றல் அடைவிலும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. அதாவது இப்பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியில், பரீட்சைகளின் அடைவுமட்டங்கள் குறைதல், இணைப்பாட விதானச் செயற்பாடுகளின் சாதனை மட்டங்களில் தொய்வு நிலை, மாணவர் இடைவிலகல், மாணவர் தினவரவு குறைவடைதல், கற்றலில் விருப்பமின்மை, இணைபாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடாமை, மேலதிக வகுப்பிற்குச் செல்ல முடியாமை, கற்றல் சூழல் பாதிப்படைதல், மாணவா் விருப்பமான பாடத்தை தெரிவு செய்து கற்க முடியாமை, பாடசாலைகள் குறித்த இலக்கினை அடையமுடியாமை போன்ற பல்வேறு வழிகளில் பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றது எனக் கண்டறியப்பட்டதோடு, இது தொடர்பில் பல பிரச்சினைகளும் இனங்காணப்பட்டு, இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான விதப்புரைகளும் இவ்வாய்வினூடாக முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *அடைவுமட்டம், கற்றல், குடும்பம்சார் காரணிகள், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை*

# கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டை மேம்படுத்துவதில் பாடசாலையின் வளப்பற்றாக்குறை ஏற்படுத்தும் தாக்கம் (பட்டிருப்பு வலய மண்முனை தென் எருவில் பற்றுக் கோட்டப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வு)

**யோ. அகல்யா**
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
yrahalya@gmail.com

இலங்கையைப் பொறுத்தவரையில் மாணவர்களின் வளர்ச்சியில் விளையாட்டுக்கள் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன. சமூகத்திற்கு பொருத்தமான திறமை கொண்ட மாணவர்களை உருவாக்குவதில் விளையாட்டுச் செயற்பாடு முக்கிய பங்கினைக் கொண்டுள்ளது. இருப்பினும் மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டை மேம்படுத்துவதில் பாடசாலைகளின் வளப்பற்றாக்குறை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இவ் அளவை நிலை ஆய்வானது மண்முனை தென் எருவில் பற்றுக்கோட்டத்தில் பட்டிருப்பு வலயத்தில் கனிஸ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டினை மேம்படுத்துவதில் பாடசாலைகளின் வளப்பற்றாக்குறை ஏற்படுத்தும் தாக்கத்தினை கண்டறிந்து அதனை, தீர்ப்பதற்கான தீர்வுகளையும் ஆலோசனைகளையும் முன்வைப்பதனை நோக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கோட்டத்தில் பட்டிருப்பு வலயத்தில் உள்ள 37 பாடசாலைகளில் இருந்து வசதி மாதிரி எடுப்பின் மூலம் 06 பாடசாலைகள் தேர்வுசெய்யப்பட்டன. இவற்றில் 1AB - 2, 1C - 2, வகை 2 பாடசாலைகள் 2 உள்ளடங்கப்படுகின்றன. நோக்கமாதிரியின் அடிப்படையில் 06 அதிபர்களும் 204 மாணவர்களும் படையாக்கப்பட்டு இலகு எழுமாற்று மாதிரி மூலமும் அம்மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு 3:1 எனும் விகிதத்தில் 68 பெற்றோர்களும் 3:1 எனும் விகிதத்தில் 71 ஆசிரியர்களும் தெரிவுசெய்யப்பட்டு அவர்களிடமிருந்து வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் போன்ற ஆய்வுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இவற்றின் மூலம் தரவுகள், தகவல்கள் பெறப்பட்டு அவை பண்பு ரீதியான மற்றும் அளவு ரீதியாக Microsoft excel படிமுறையின் ஊடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு வியாக்கியானமும் கலந்துரையாடலும் இடம்பெறுகின்றன. தரவுப் பகுப்பாய்வின் மூலம் கண்டறியப்பட்ட முடிவுகளாக மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டில் வளப்பற்றாக்குறை பாதிப்பை ஏற்படுத்துகின்றமை, விளையாட்டில் மாணவர்களின் பங்கு பற்றல் குறைதல், திறமைகள் வெளிப்படுத்தாமல் மழுங்கடிக்கப்படல் போன்ற பாதிப்புகள் காணப்படுவதுடன் கற்றலுக்கு வழங்கும் முக்கியத்துவம் போன்று விளையாட்டுச் செயற்பாட்டிற்கும் முக்கியத்துவம் வழங்குதல், விழிப்புணர்வூட்டுதல், வளங்களைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுத்தல் முதலிய விதந்துரைப்புக்களும் இவ்வாய்வில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்****: கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்கள், விளையாட்டுச் செயற்பாடு, வளப்பற்றாக்குறை, தாக்கம்*

# இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி க.பொ.த. உ/த மாணவர்களின் கற்றலில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் (பிலியந்தல கல்வி வலய தமிழ் மொழிமூலப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

**வனஜா லோகபிரசாத்**
மே/மா/பிலி/தெகிவளை தமிழ் மகா வித்தியாலயம்
*vanajah3@gmail.com*

**சபாரட்ணம் அதிரதன்**
கல்விப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம், கொழும்பு.
*Sabaaathi@sse.ac.lk*

பன்மைத்துவச் சமூகங்களைக் கொண்ட ஒரு சிறிய நாடான இலங்கை பொருளாதார நெருக்கடியின் மோசமான காலப்பகுதியை 2022ஆம் ஆண்டளவில் சந்தித்தது. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியானது ஏனைய துறைகளைப் போலவே கற்றல் மற்றும் பாடசாலை நடவடிக்கைகளிலும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இவ்வகையில் கொழும்பின் புறநகர்ப் பகுதியான பிலியந்தல கல்வி வலய தமிழ் மொழிமூல பாடசாலைகளில் கற்கும் க.பொ.த உ/த மாணவர்களில் ஏற்படுத்திய கற்றல் பாதிப்புக்களை கண்டறிவதனை நோக்கமாகக்கொண்டு விபரண அளவீட்டு ஆய்வு வடிவத்தைப் பயன்படுத்தி கலப்புமுறை ஆய்வாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிலியந்தல கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் (தமிழ் மொழிமூலம்) கல்வி கற்கும் க.பொ.த உ/த மாணவர்களை ஆய்வுக் குடித்தொகையாகவும் படைமுறை எழுமாற்று நுட்ப முறைமூலம் தெரிவு செய்யப்பட்ட 114 மாணவர்களை ஆய்வு மாதிரியாகவும் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது. வினாக்கொத்து, நேர்காணல் ஆகிய கருவிகளைப் பயன்படுத்தி மாணவர்கள் (114) பெற்றோர்கள் (41) ஆசிரியர்கள் (34) மற்றும் அதிபர்களிடமிருந்து (05) தரவுகள் பெறப்பட்டதுடன் அவை விபரணப் புள்ளியியல் முறையில் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு தகவல்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. பெருமளவான (85%) மாணவர்கள் வறுமைக் கோட்டுக்கும் கீழான வருமானத்தையுடைய குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர். 80.5% மாணவர்களது பெற்றோரின் வேலை வாய்ப்பு மற்றும் வருமானம் என்பன பொருளாதார நெருக்கடியால் பாதிப்படைந்துள்ளது. குடும்ப வருமானத்தை அதிகரிப்பதற்காக 48.25% மாணவர்கள் சிலவேளையிலாவது பங்களிக்கின்ற நிலைமை காணப்படுகின்றது. சப்பாத்து மற்றும் புத்தகப்பைகளைப் பெறுவதில் 80.7%, பாடப்புத்தகங்களைப் பெறுவதில் 82.45%, எழுதுகருவிகளைப் பெறுவதில் 72.81%, போட்டோ பிரதிகளைப் பெறுவதில் 81.58%, திறன்பேசிகளைப் பெறுவதில் 64.92%, இணைய வசதிகளைப் பெறுவதில் 74.56% ஆனவர்களும் இந்த பொருளாதார நெருக்கடியால் பாதிப்பை எதிர்நோக்குகின்றார்கள். அத்துடன் இவற்றை பெறுவதற்கு பொருளாதார நிலை தடையாக அமைவதற்கும் குடும்ப வருமானம் குறைந்து செல்வதற்குமிடையே இணைவுத் தொடர்பு ($p<0.01$) காணப்படுகின்றது. பாடசாலைக்கும் வீட்டுக்கும் இடையிலான தூரத்துக்கும் பயன்படுத்தும் போக்குவரத்துச் சாதனம் தடையாக அமைவதற்கும் இடையில் புள்ளிவிபரவியல் ரீதியாக தொடர்பில்லை ($p>0.05$). பாடசாலையிலிருந்து வீட்டிற்கான தூரத்துக்கும் பாடசாலைக்குத் தாமதமாக வரவேண்டி ஏற்படுவதற்கும் இடையில் எதிரான இணைவுத் தொடர்பு ($p<0.01$) காணப்படுகின்றது. பொருளாதார நெருக்கடியிலும் பெரும்பாலான மாணவர்கள் (80.7%) தனியார் வகுப்புக்களில் பங்குபற்றுகின்றனர். இவை இந்த ஆய்வின் முடிவுகளாக முன்னிறுத்தப்படுகின்றன.

***திறவுச் சொற்கள்:*** *இலங்கை, க.பொ.த உ/த, கற்றல், பொருளாதார நெருக்கடி, மாணவர்கள்*

# பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டமும் அதனை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்களும் (ஏறாவூர்ப்பற்று மேற்கு கோட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

**சுப்பிரமணியம் பாலகிருஸ்ணன்**
மட்/மமே/தளவாய் சுவாமி அஜராத்மானந்தாஜீ வித்தியாலயம்.
தளவாய், பங்குடாவெளி.
*brabanjaan@gmail.com*

எதிர்காலத்திற்கு பொருத்தமான அறிவாற்றலும் ஆளுமையும்மிக்க சந்ததியினரை உருவாக்க பங்களிக்கும் ஆசிரியர்கள் தங்களது வாண்மைத்திறனையும் விருத்தியாக்க வேண்டியது அவசியமாகும். அந்தவகையில் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கான ஒரு வரப்பிரசாதமாகும். ஆனபோதிலும் பாடசாலை மட்டத்தில் திட்டமிடப்படும் ஆசிரியர்களிற்கான வாண்மை விருத்திச் செயற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாத நிலையினை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதனால் பாடசாலை செயற்பாடுகளில் ஆசிரியர்கள், அதிபர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வாய்வின் முக்கிய நோக்கம் பா.ம.ஆ.அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது எதிர் நோக்கப்படும் சவால்களைக் கண்டறிந்து அதனை நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கூறுவதாகும். அந்தவகையில் இதேபோன்ற பிரச்சினைக்குட்பட்ட பாடசாலைகளிற்கு நல்லதொரு முடிவுகளை எடுத்துக் கூறக் கூடியதாகவும் இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாய்வானது 1C, வகை-II வகை-III பாடசாலைகளைக் கொண்டமைந்த ஏறாவூர்பற்று மேற்கு கோட்டத்திலிருந்து நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட அளவைநிலை ஆய்வாகும். மொத்தமான 14 பாடசாலைகளிலிருந்து அனைத்து வகை பாடசாலைகளும் உள்ளடங்கும் விதமாக படையாக்கப்பட்ட மாதிரி எடுப்பு மூலம் 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. அத்துடன் பால் அடிப்படையில் படையாக்கப்பட்டு எளிய எழுமாற்று மூலம் 50 ஆசிரியர்களும், 10 அதிபர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாய்வானது பா.ம.ஆ. அபிவிருத்தியினை நடைமுறைப்படுத்தலிலுள்ள சவால்களை அறியும் வகையில் முன்னெடுக்கப்பட்டது. கருதுகோள்களை வாய்ப்புப்பார்ப்பதற்கு தேவையான தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான வினாக்கொத்துக்கள், ஆவணங்கள் பெறுவதற்கான பட்டியல் என்பன தயாரிக்கப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் லைக்கேட்டின் அளவீட்டிற்கமைய பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் Chi square Test மூலம் கருதுகோள் வாய்ப்புப் பார்க்கப்பட்டு அதன் அடிப்படையில் முடிவுகள் விபரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அளவு சாரா விடயங்கள் பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டதன் மூலம் பல்வேறு முடிவுகளும் கண்டறியப்பட்டுள்ளன. இதன்படி இவ்வாய்வில் அளவு மற்றும் பண்பு ரீதியிலமைந்த கலப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுப்பாய்வுக்காக SPSS மென்பொருள் பயன்படுத்தப்பட்டது. அதன் மூலம் அட்டவணைகளும், உருக்களும் பயன்படுத்தப்பட்டன. ஆய்வின் முடிவுகளாக ஆசிரியர்கள் பா.ம.ஆ.அ தொடர்பாக நேரான மனப்பாங்கை கொண்டிருக்கவில்லை, அது தொடர்பான அறிவும் விளக்கமும் கொண்டிருக்கவில்லை, அதிபர்கள் பா.ம.ஆ.அ தொடர்பாக பூரண விளக்கமும், பயிற்சியும் பெற்றிருக்கவில்லை, அதனை நடைமுறைப்படுத்தலுக்காக அதிபர்கள் உரிய வகிபங்கை வகிக்கவில்லை, ஐந்தாண்டு திட்டமிடலில் உள்ளடக்கப்படும் பா.ம.ஆ.அ செயற்றிட்டங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை ஆகிய முடிவுகள் காணப்படுகின்றன. ஆய்வின் முடிவில் அதற்கான விதப்புரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *பாடசாலை அபிவிருத்திக் குழு, பாடசாலை முகாமைத்துவ அணி. பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி, பாடசாலை மேம்பாட்டுத்திட்டம்*

# க.பொ.த உயர்தர கலைத்துறை மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்குறைவும் சமூகப்பொருளாதாரக் காரணிகளின் தாக்கமும்: மூதூர் கல்வி வலய ஈச்சிலம்பற்றுக் கல்விக் கோட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**ச. ஜீவதரன்**
தி/மூ/இலங்கைத்துறைமுகத்துவாரம் இந்துக்கல்லூரி (தேசியபாடசாலை)
வெருகல்,
Ss.jeesee@gmail.com

**ஆ. நித்திலவர்ணன்**
கல்வியியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
anithlavarnan@gmail.com

க.பொ.த உயர்தர கலைப்பிரிவு மாணவர்கள் கல்வியைக்கற்று அடைவில் முன்னேற்றம் காண்பதும் பல்கலைக்கழகம் செல்வதும் பின்தங்கிய கிராமங்களில் சவாலாகவே அமைகின்றன. ஈச்சிலம்பற்று வெருகல் பிரதேசத்தில் பல்கலைக்கழக அனுமதிக்குறைவு காணப்படுவதற்கு சமூக, பொருளாதாரம் காரணமாக அமைகின்றன. இவ்வாய்வின் முக்கிய நோக்கம் க.பொ.த உயர்தர கலைத்துறை மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்குறைவில் தாக்கம் செலுத்தும் சமூகப்பொருளாதாரக் காரணிகளைக் கண்டறிந்து மேம்படுத்துவதற்கான விதப்புரைகளையும் ஆலோசனைகளையும் முன்மொழிதலாகும். நான்கு சிறப்பு நோக்கங்களைக் கொண்டு ஆய்வின் நோக்கம் அடையப்படுகின்றது. இந்த ஆய்வு குறுக்குவெட்டு ஆய்வு முறையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. மூதூர் கல்விவலயத்திற்குட்பட்ட ஈச்சிலம்பற்று கல்விக்கோட்டத்தில் உள்ள 1AB ஒன்றும், 1C வகை பாடசாலை இரண்டும்(02) பாடசாலைகளின் அதிபர் மூன்று பேரும், ஆசிரியர்கள் 65 பேரும் மாணவர்களில் 248 பேரும் நோக்குடை மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டனர். பெற்றோர்களில் 124 பேரும் எளிய எழுமாற்று மாதிரி மூலமும் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். வினாக்கொத்து, நேர்முகம் மூலமாக பல தரவுகள் சேகரிக்கப்பட்டு எண் சதவீத அளவீட்டு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. உயர்தர மாணவர்களின் பரீட்சை அடைவை ஆராய்ந்து கண்டறிந்து, அடைவில் தாக்கம் செலுத்தும் சமூகப்பொருளாதாரக் காரணிகள், கற்றலை மேம்படுத்துவதற்கான உத்திகள் போன்ற ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் பண்பு ரீதியாகவும், அளவுரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டு இதற்காக Ms office (Excel) முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வு முடிவுகளிலிருந்து குறிப்பாக ஆண் மாணவர்கள் பாடசாலை செல்லும் வீதம் குறைவாகவே உள்ளது. இதனால் பல்கலைக்கழக அனுமதியும் பரீட்சை அடைவு மட்டமும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. அதேவேளை ஆசிரியரது போதனையை ஏற்கும் மன நிலை குறைவாகக் காணப்படுகின்றது. பெற்றோர்களின் கல்வி நிலை 8ஆம் தரத்திற்கு குறைவாகவே உள்ளது. அத்தோடு குடும்ப வருமானம் மிகவும் குறைவான நிலையிலே காணப்படுவதால் குடும்பத் தொழிலில் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். இதனால் மாணவர்களிடையே பல்கலைக்கழகம் செல்வதற்கான சாதகமானநிலை குறைவாக உள்ளது. மாணவர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனைகள் முறையாக இடம்பெறவில்லை. ஆகவேதான் பாடசாலைகளிலே இதற்கான விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.

***திறவுச் சொற்கள்:*** *கல்விப் பொதுத் தராதர தகைமை (க.பொ.த உயர்தரப் பரீட்சை) அடைவு மட்டம், சமூகக் காரணிகள், பொருளாதாரக் காரணிகள்*

# Cultural Diversity and Inclusion

# இந்து பௌத்த மக்களின் வாழ்வியல் சடங்குகளுக்கிடையிலான பரஸ்பரத் தொடர்புகள்: கேகாலை மாவட்டத்து தெஹியோவிட்டப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

**சிதிரிசேன துஷாந்தி, வ. குணபாலசிங்கம்**
இந்து நாகரிகத்துறை,
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
ilayathusha18@gmail.com

மனித வாழ்வானது வளம்பெற வேண்டும் என்று கட்டமைக்கப்பட்ட ஒழுக்க நெறியாகவே பண்பாட்டுக் கூறுகளும் சடங்கு சம்பிரதாயங்களும் காணப்படுகிறன. காட்டுமிராண்டித் தனத்திலிருந்து மனிதனை ஒரு சமூகமான நடைமுறை வாழ்வை வாழ வைப்பதற்குச் சடங்குகள் மிக அவசியம். மனிதன் பிறந்தது முதல் இறந்த பிறகும் ஆன்மாவின் நன்மை கருதி செய்யப்படுபவை எல்லாம் வாழ்வியல் சடங்குகள் ஆகும். இவ்வாறாக மனிதன் பிறந்தது முதல் செய்யப்படுபவை பூர்வாங்கக் கிரியை என்றும், மனிதன் இறந்தப் பிறகு செய்யப்படுபவை அபரக்கிரியை என்றும் அழைக்கப்படுகிறன. அந்த வகையில், இலங்கை நாடானது பல்லின சமூக மக்களைக் கொண்ட நாடாகும். இப்பல்லின மக்களுள் சமூகத்தில் பௌத்தர்களும் இந்துக்களுமே அதிகமாக வாழ்கின்றனர். இதில் கேகாலை மாவட்டம் தெறியோட்ட பிரதேசத்தில் இந்து, பௌத்த மக்களின் வாழ்வியலில் காணப்படும் பரஸ்பரத் தொடர்பினை ஆராய்வதே இவ்வாய்வாகும். பௌத்தர்களும் இந்துக்களும் அதிகளவாக வாழும் பிரதேசத்தை கண்டறிந்து அவர்களால் ஆற்றப்படும் சடங்குகளை இனங்காணுதல், இவ்விரு மதத்தவரினால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் பொதுவான சம்பிரதாயங்களை இனங்காணுதல், இதில் இவர்களுக்கே உரித்தான சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களை அடையாளப்படுத்துதல், இவ்விரு மதத்தினரால் செய்யப்படும் சடங்குகளில் பங்கு கொள்பவர்களின் முக்கியத்துவம், காலம் காலமாக இவர்கள் மத்தியில் செய்யப்பட்டு வரும் சம்பிரதாயங்கள் மீதான நம்பிக்கை, பாரம்பரியமான சம்பிரதாயங்களை கைவிடாமல் இன்று வரை தமது சந்ததிக்கு தெரிவிக்கும் முகமாக செய்யும் சடங்குகள் போன்றவற்றினை தெளிவுபடுத்துவதாகவே இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாய்வானது இலங்கையில் பௌத்த மதத் தோற்றம் மற்றும் தொன்மையான இந்து மதத்தின் வளர்ச்சிப்போக்கு, இன்றைய காலக்கட்டத்தில் இவ்விரு மதங்களின் பரஸ்பரத் தொடர்பு போன்றவற்றினை இலக்கியங்கள், ஆய்வுகள், நேர்காணல் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு விளக்குவதாக அமைந்துள்ளது. இவ்விரு மதத்தினரும் எந்தவொரு உள்நோக்கங்களோ, உடன்படிக்கையோ இல்லாமல் காலம் காலமாக ஒன்றுபட்ட வாழ்வியல் சடங்கு முறைகளை நடாத்தி வருகின்றனர். இதனை தெளிவுப்படுத்தி எமது சமூகத்தில் சமூக நல்லிணக்கத்தை பேண வைப்பதாக இவ்வாய்வானது அமைந்துள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *பௌத்தம், இந்து மதம், சடங்கு, வாழ்வியல், சம்பிரதாயம், சமூக நல்லிணக்கம்*

# ஐ.எல்.எம். அப்துல் அஸீஸின் சமய, சமூகப் பணிகள் - ஒரு பன்முகப் பார்வை

**ஏ. ஜ.ஃபர் ஹுஸைன்**
இஸ்லாமிய கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
hussainaj@esn.ac.lk

19ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சியில் இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கிய சவால்களை அடையாளம் கண்டு அவற்றிக்கு பரிகாரம் தேடிக் கொடுத்த இலங்கை முஸ்லிம் தலைவர்களுள் ஒருவராக போற்றப்படும் ஐதுரூஸ் லெப்பை மரிக்கார் அப்துல் அஸீஸ் அவர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். இவ்வகையில் இவ்வறிஞர் மேற்கொண்ட கல்வி, எழுத்துப்பணி, சமய, சமூகப் பணிகள் ஆகியவைகளை வெளிக்கொணர்தல் இவ்வாய்வின் நோக்கமாகும். பண்புரீதியில் அமைந்த இவ்வரலாற்றாய்வு இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். மேலும் இவர் தொடர்பாக வெளியிடப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் வரலாற்று ஆவணங்கள் என்பன மீளாய்வு செய்யப்பட்டன. தந்தையின் ஊடாக கிடைக்கப்பெற்ற அறிவும் அவரது சமகாலத்தில் வாழ்ந்த சமூக எழுச்சிக்குப் பங்காற்றிய தலைவர்களின் நட்பும் முஸ்லிம்களின் பின்னடைவுக்குக் காரணமான விடயங்களைத் துல்லியமாகக் கண்டறிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தன. ஆங்கிலக் கல்விக் கொள்கையை முஸ்லிம்கள் எதிர்த்ததன் விளைவாக அதுசார்ந்த பலன்களை இழந்திருந்த சூழ்நிலையில் அறிஞர் எம்.சி. சித்திலெப்பையுடன் இணைந்து சமயச் சூழலில் ஆங்கிலக் கல்வியை வழங்க பாடுபட்டு வெற்றிகண்டார். அத்தோடு முஸ்லிம்கள் கல்வியில் முன்னேற்றங்காண கொழும்பு ஸாஹிராக் கல்லூரியை உருவாக்கியதோடு, அச்சூழலில் ஏற்பட்ட துருக்கித் தொப்பிப் விவகாரத்தை முறையாகக் கையாண்டு தீர்வு பெற்று முஸ்லிம்களின் தனித்துவத்தை நிலை நாட்டப் பாடுபட்டார். தனது பத்திரிகைகள், உரைகள் மூலமும் சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்துதல், இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றைத் தெளிவுபடுத்தல் ஆகியவற்றில் அப்துல் அஸீஸ் ஆற்றிய சேவைகள் என்றும் நிலைத்து நிற்கக் கூடியவைகளாகும். எனவே, முஸ்லிம்களுக்கு வழிகாட்டுவதற்கான தனிமனித ஆளுமைகளின் அவசியம் வலியுறுத்தப்படுவதோடு, அதற்கான முன்னெடுப்புக்கள், வழிகாட்டல்கள் பற்றிய முன்மொழிவுகளைத் தருவதாகவும், எதிர்காலத்தில் இவ்விடயத்தில் ஆய்வை மேற்கொள்வோருக்கு உதவுவதாகவும் இவ்வாய்வு அமைகிறது.

***திறவுச் சொற்கள்:*** *ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ், இலங்கை முஸ்லிம்கள், பணிகள்*

# இலங்கையின் மத்தியஸ்த சபைகள் எதிர்நோக்குகின்ற சவால்களும் அதற்கான தீர்வுகளும்: ஏறாவூர் மத்தியஸ்த சபையினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**தாஜுதீன் முஹம்மது முபாஸ்**
சமூக விஞ்ஞானங்கள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
mufasnmohamed@gmail.com

மனிதர்களுக்கிடையே இயல்பாகவே பிணக்குகள் ஏற்படுவது வழக்கமானதாகும் அவை சுமுகமான முறையில் தீர்க்கப்பட வேண்டியது அவசியமானது. இந்த வகையில் உலகளாவிய ரீதியில் இவ்வாறு மனிதர்களுக்கிடையே ஏற்படுகினற பிணக்குகளை தீர்ப்பதற்காக பல நிறுவனங்களை உருவாக்கி அதனை பல வழிமுறைகளை கையாண்டு தீர்த்துக் கொள்கின்றனர். அவற்றில் மிகப் பிரதானமானது மத்தியஸ்த செயற்பாடாகும். அதாவது இச்செயற்பாட்டின் மூலமாக இரு நபர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையில் ஏற்படுகின்ற பிணக்குகளை தீர்த்துக் கொள்வதற்காக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் செயற்படுத்தப்படுகின்றது. உலக நாடுகளில் குறிப்பாக சீனா (ஹொங்கொங்கில் பிரதான மத்தியஸ்த நிலையம்), இந்தியா (1996), சிங்கப்பூர் (1997), இலங்கை (1990), துபாய் போன்ற நாடுகளிலும், ஐரோப்பிய கண்டத்தில் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி (1993), ஸ்வீடன் (1999), நோர்வே, பெல்ஜியம், நியூசிலாந்து நாடுகளிலும் அமெரிக்க கண்டத்தில் கனடா, அர்ஜென்டினா (2010), நெதர்லாந்து, கொரியா, ஹங்கேரியா, சவுதி அரேபியா போன்ற இன்னும் பல நாடுகளிலும் மத்தியஸ்த சபை இயங்கிக் கொண்டு வருகின்றன. அந்த வகையில் இலங்கையிலும் மத்தியஸ்த சபையின் பெறுமதி உணரப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறு சமூகங்களுக்கிடையே ஏற்படுகின்ற பிணக்குகளை தீர்ப்பதனை நோக்காகக் கொண்டு 1988ஆம் ஆண்டின் 72ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நமது நாட்டில் மத்தியஸ்த சபை அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும், மத்தியஸ்த சபைகள் பிணக்குகளைத் தீர்ப்பதில் பாரிய பங்களிப்பினை வழங்கினாலும் அவற்றின் செயற்திறனான செயற்பாட்டிற்கு பல காரணிகள் சவாலாகக் காணப்படுவதனை ஏறாவூர் பிரதேச மத்தியஸ்த சபையினை அடிப்படையாகக் கொண்டு கண்டறியப்பட்டுள்ளதுடன் அச்சவால்களை நிவர்த்தி செய்வதற்கான பரிந்துரைகளும் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மத்தியஸ்த சபை மூன்றாம் நிலை மத்தியஸ்தராக இருந்து சமூகத்தில் ஏற்படும் பிணக்குகளை தீர்த்து சமாதானத்தினை ஏற்படுத்துவதற்கான, அல்லது கட்டியெழுப்புவதற்கான செயற்பாடுகளை முழுமையாக இச்சபையால் செய்ய முடியாதுள்ளது ஆகவே இவற்றினை வெளிக்கொண்டு வருவதற்காக இங்கு முதலாம் நிலைத் தரவுகளாக நேரடி அவதானம், நேர்காணல் மற்றும் குழு கலந்துரையாடல் மூலமாகவும் அதேபோன்று இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளம் என்பவற்றினூடாகவும் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *மத்தியஸ்த சபை, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், பிணக்குகள், மத்தியஸ்தம்*

# இலங்கையில் கிறிஸ்தவக் கல்வி ஊடாக மாணவர்களிடையே சமூக ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புதல்

**யே. ஹேரோசினி**
herosinijesurasa@gmail.com

இலங்கை பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், கத்தோலிக்கம் ஆகிய சமயங்களைக் கொண்டுள்ள ஒரு பன்மைத்துவ நாடாகும். சமகால சமுதாயமானது சமய, இன பேதங்களால் வன்முறை பாகுபாடு, பொருளாதார ஏற்றத்தாழ்வு போன்றவற்றால் கட்டப்பட்டு ஒருமைப்பாடு என்ற அடித்தளத்தை விட்டு விலகிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. ஒருமைப்பாடு என்ற எண்ணக்கரு பாடசாலைகளில் விதைக்கப்பட்டால் இலங்கையின் எதிர்காலம் வளர்ச்சிமிக்கதாக அமையும். கிறிஸ்தவக் கல்வி ஊடாக ஒருமைப்பாடு என்ற பண்பு விருத்தியடைவதானால் மாணவர்களிடையே ஒற்றுமை வளர்கின்றது. எனவே இலங்கை போன்ற பல்லின சமூகத்தவர்களைக் கொண்ட நாட்டில் மாணவர்களிடையே ஆழமான அன்பின் ஒருமைப்பாட்டினைக் கட்டியெழுப்புவது சமகாலத்தில் இன்றியமையாத தேவையாக உள்ளது. மாணவர்கள் மத்தியில் வேற்றுமையும் வெறுப்பும் இல்லாத ஒரு அன்பான சமூகத்தினை உருவாக்க கிறிஸ்தவ கல்வி உறுதுணையாய் அமைந்துள்ளது. மனிதருடைய வாழ்வில் கல்விக்கு மாபெரும் முக்கியத்துவம் உள்ளது. திரு அவை நிறைவாழ்வின் இறைத்திட்டத்தை அனைத்து மக்களுக்கும் அறிவிக்கவும், அனைத்தையும் கிறிஸ்துவுக்குள் ஒன்று சேர்க்கவும் தன்னை நிறுவிய கடவுளிடமிருந்து கட்டளை பெற்றுள்ளது. இக்கட்டளையினை நிறைவேற்றுவதற்கு மனிதரின் வாழ்க்கை முழுவதிலும் கவனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. திரு அவை ஒவ்வொருவருடைய கல்வி வளர்ச்சியிலும், விரிவாக்கத்திலும் தனிப்பட்டதொரு பொறுப்பினைக் கொண்டுள்ளது. ஒருமைப்பாடு என்பது பன்மைச் சமூகம் கொண்ட இலங்கை நாட்டில் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்படுவதை குறித்து நிற்கின்றது. ஒருமைப்பாடு தொடர்பான அறிவினையும் ஆற்றலையும் கிறிஸ்தவக் கல்வி ஊடாக மாணவர்கள் கற்றுக் கொள்கின்றார்கள். கற்றுக் கொண்ட விடயத்தினை தங்களது அன்றாட சூழலில் செயற்படுத்த முன்வருகின்றார்கள். மனிதரின் மண்ணுலக வாழ்வு விண்ணுலக அழைப்போடு தொடர்பு கொண்டுள்ளதால் இம்மண்ணுலக வாழ்க்கையிலும் கூட கிறிஸ்து நிறுவிய திரு அவை கிறிஸ்தவக் கல்வியில் அதிக கவனம் செலுத்துவது அவசியம். பன்மைத்துவ சமூகத்தில் கிறிஸ்தவக் கல்வி பல நலன்களைக் கொண்டு வருகின்றது. ஒவ்வொரு மாணவர்களின் உடல், உள வளர்ச்சிக்கும், அறநெறி வாழ்வுக்கும் உதவும் வகையில் கிறிஸ்தவக் கல்வி அமைதல். கிறிஸ்தவக் கல்வி மாணவர்களைச் சமூக வாழ்வில் பங்கெடுக்க தயாரிக்கிறது. ஒழுக்க நெறியின் மதிப்புக்களை மனச்சான்றின் ஒளியில் ஆராய்ந்து வாழ்வில் கடைப்பிடிக்க வழிகாட்டுகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *ஒருமைப்பாடு, கிறிஸ்தவம், கல்வி, பல்லின சமூகம், இலங்கை, மாணவர்கள், திரு அவை*

# Gender and Equality

# மலையக லயன் குடியிருப்புகளில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் சமூகப் பாதுகாப்புப் பிரச்சினைகள்: பம்பரகலை தோட்டத்தை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு

**சுப்பையா ரிஷாந்தி, குணநாயகம் விக்னேஸ்வரன்**
சமூக விஞ்ஞானங்கள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
rishanthikr7316@gmail.com

ஒரு மனிதனுக்கு சமூகப்பாதுகாப்பு என்பது ஒரு தேசத்தினால் வழங்கப்படும் உறுதியளிக்கப்பட்ட ஒரு திட்டமாகும். அதன்படி இலங்கையில் பல்வேறுபட்ட சமூக பாதுகாப்பு திட்டங்கள் நடைமுறையில் இருந்தாலும் இலங்கையின் மலையகம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களுக்கு சென்றடையும் சமூக பாதுகாப்பு திட்டங்களும், செயல் ஒழுங்குகளும் மலையகத்தில் லயன் குடியிருப்பில் வாழும் மக்களுக்கு சென்றடைவதில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவற்றில் அவர்களுடைய லயன் குடியிருப்பு முறை, பொருளாதாரம், வறுமை, அத்துடன் மிக முக்கியமாக தோட்ட நிர்வாகத்திடம் முழு மக்களினுடைய அதிகாரங்களும், உரிமைகளும் முடக்கப்பட்டுள்ளமை, அவர்களுடைய பிரதேச பாங்கு, அரசியல் முறைமை என்பன இதற்கு வழிகோலுகின்றன. அந்தவகையில், சமூகப்பாதுகாப்பினுள் காணப்படும் திட்டங்கள் மலையகத்தில் லயன் குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு முழுமையான முறையில் சென்றடைவதில்லை. பல இன்னல்களின் மத்தியில் இம்மலையக மக்களுக்கான திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டாலும் அதனை உரிய ஒழுங்கு முறையில் அவர்களுக்கு கொண்டு சேர்ப்பது கடினமாகவே உள்ளது. பிரித்தானியரின் காலனித்துவ காலத்தில் இருந்தது போன்ற பரிதாப நிலையிலேயே இன்றும் வாழ்ந்து வருகின்றனர். காரணம் ஒரு தேசத்தின் ஒரு குடிமகன் அரசாங்கத்தினால் வழங்கப்படும் திட்டங்களினுள் காணப்பட வேண்டும் என்பது அம்மனிதனின் குடியுரிமையை வலியுறுத்துவதாக காணப்படுகின்றது. அதனடிப்படையில் சமூகப் பாதுகாப்பு என்பது மலையக மக்களுக்கு இதுவரையில் முழுமையாக எட்டாக்கனியாகவே உள்ளது. இலங்கையில் வாழும் ஏனைய பிரதேச மக்களுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. அதற்கு அவர்களினுடைய ஈடுபாடு குறைவு மட்டுமன்றி சமூகக் கட்டமைப்பு, அரசியல், பொருளாதாரம், கல்வியறிவு, தலைமைத்துவமற்ற நிர்வாகம் என்பன காரணமாகின்றன. மலையக மக்களின் வாழ்வில் காணப்படும் எழுத்து ரீதியிலான சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் செயன்முறை ரீதியில் மலையக தோட்டப்புறங்களில் வசிக்கும் லயன் குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு சென்றடையாமைக்கான காரணங்கள், அதற்கு காரண காரிய நிலைமைகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து அதற்கான தீர்வுகளையும் பரிந்துரைகளையும் முன்வைப்பதாக இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாய்வுக்கான தரவுகள் எளிய எழுமாற்று மாதிரியைப் பயன்படுத்தி வினாக்கொத்து, கலந்துரையாடல், பங்குபற்றல் அவதானம், செவ்வி காணல் எனும் முறைமையியலுக்கு ஊடாக தரவுகள் சேகரிக்கப்பட்டது. சேகரிக்கப்பட்ட தரவுகள் எண் மற்றும் பண்பு ரீதியான முறைகளின் ஊடாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இங்கு சமூக பாதுகாப்பானது லயன் குடியிருப்பில் வாழும் மக்களுக்கு சென்றடைவதில் ஏற்பட்டுள்ள தடைகள் தரவு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு ஆய்வு தொடர்பான உண்மை இனங்காணப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்****: சமூகப் பாதுகாப்பு, லயன் குடியிருப்பு, பெருந்தோட்டத்துறை, தோட்டத் தொழிலாளர்கள், தோட்டம்*

# விவாகரத்தான பெண்களின் வாழ்வில் ஏற்படுத்தப்படும் உளவியல் தாக்கங்கள்: ஏறாவூர்பற்று பிரதேச செயலகப்பிரிவை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**அரியரெத்தினம் அணேஜா**
முதுதத்துவமாணி ஆய்வாளர்
தத்துவவியல் துறை,
கலை கலாசார பீடம்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
anejaariyarethnam@mail.com

இன்றைய உலகில் அனைத்து நாடுகளிலும் விவாகரத்து எனும் பிரச்சினையானது பொதுவானதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் இப்பிரச்சினை தவிர்க்க முடியாத ஒன்றாகவும் காணப்படுகின்றது. திருமணபந்தத்தில் இணைகின்ற அனைவரது எதிர்பார்ப்பும் இறுதிவரை தம் துணையோடு இணைந்து சிறப்பான வாழ்க்கையினை வாழவேண்டும் என்பதே ஆகும். இருப்பினும்கூட திருமணபந்தத்தில் இணைந்த நபர்கள் தங்களின் திருமண உறவை சட்டரீதியாக முடித்துக்கொள்ளும் இறுதிக் கட்டமான விவாகரத்திற்கு செல்லும் நிலையும் சிலரது வாழ்வில் தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிடுகின்றது. கணவன் மனைவியரிடையே ஏற்படுகின்ற கருத்து முரண்பாடுகள், புரிந்துணர்வின்மை, கடமைகளிலிருந்து விலகிக்கொள்ளுதல், விழுமியங்களில் நம்பிக்கையின்மை என்பது ஒருவர்மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றபோது திருமண வரையறைகளையும், அவற்றுக்கான கடப்பாடுகளிலும் இருந்து விடுபடுகின்ற எண்ணம் தலைதூக்குகின்றது. இதுவே விவாகரத்துக்குரிய அடிப்படைகளாக அமைகின்றன. விவாகரத்தின் மூலம் பெண்கள், ஆண்கள், விவாகரத்தான பெற்றோரின் பிள்ளைகள், அவர்களது குடும்பம் எனப் பலரும் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றார்கள். அதிலும் குறிப்பாக விவாகரத்தான பெண்கள் தம் வாழ்வில் பல்வேறுவகையான சவால்களை எதிர்கொண்டு வருகின்றார்கள். அதில் உளவியல் ரீதியான பிரச்சினைகள், சமூக ரீதியான பிரச்சினைகள், பொருளாதார ரீதியான பிரச்சினைகள் மற்றும் ஒழுக்கவிழுமிய ரீதியான பிரச்சினைகள் எனப் பல அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இதன்பொருட்டு இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே உள்ள ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவில் விவாகரத்தானவர்களின் எண்ணிக்கையானது அதிகரித்துச் செல்வதனைக் ஆய்வுப்பிரச்சினையாகக்கொண்டு இவ்வாய்வானது வடிவமைக்கப்பட்டுள்ளது. விவாகரத்தான பெண்கள் உளவியல் ரீதியாக எதிர்கொள்ளும் சவால்கள் எவை? எனக் கண்டறிந்து அதற்கான தீர்வினை எய்திக்கொள்வதனை பிரதான நோக்காக்கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இங்கே முதலாம் நிலைத் தரவு மூலங்களாக வினாக்கொத்து, நேர்காணல் போன்றனவும் இரண்டாம் நிலைத் தரவுகளாக புள்ளிவிபரத்திரட்டு, இணையத்தளம் மற்றும் ஆய்வுக்கட்டுரைகளும் வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டு பண்புசார் மற்றும் அளவுசார் ஆய்வு முறையியலும் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவில் விவாகரத்தான பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான காரணங்கள் யாவை? விவாகரத்தான பெண்கள் எதிர்கொள்ளும் உளவியல் தாக்கங்கள் எவை? விவாகரத்தான பெண்களின் வாழ்வில் ஏற்படும் உளவியல் தாக்கங்களிற்கான தீர்வினை எவ்வாறு அடைந்துகொள்வது? என்பவற்றினை ஆய்வு வினாக்களாகக்கொண்டு இவ்வாய்வு முன்நகர்த்தப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *விவாகரத்து, பெண்கள், உளவியல் தாக்கம், திருமண விடுப்பு*

# பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் வேலைக்குச் செல்லும் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள்: செங்கலடி 01 கிராம சேவகர் பிரிவினை மையமாகக் கொண்ட ஆய்வு

**வரதராஜன் சித்தாரா, இரத்தினசபாபதி பிரேம்குமார்**
தத்துவவியல் மற்றும் விழுமிய கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
***siththarav1997@gmail.com***

தற்காலத்தில் பெண்கள் தாம் வாழும் ஆண்மைய வாத முதலாளித்துவ சமூகத்தில் தம் வாழ்வை சீரான வகையில் நடத்திச் செல்ல பல்வேறு காரணிகள் இடையூறு விளைவிக்கும் வகையிலாக காணப்படுவது நாம் அறிந்ததே. அதிலும் ஆண் துணையற்று வாழும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களினை சேர்ந்த வேலைக்குச் செல்லும் பெண்கள் தம் வாழ்வில் எண்ணிலடங்காத சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றனர். அவர்களின் முன்னேற்றத்தையும், வாழ்க்கையையும் மேலும் கொண்டு செல்ல இத்தகையதான காரணிகள் தடுக்கும் வகையில் அமைகின்றன. அதன்படி அத்தகைய பெண்தலைமைத்துவ குடும்பத்தைச் சார்ந்த பெண்களின் வாழ்வில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களாக உளவியல் சார்ந்த பிரச்சினைகள், சமூகம் சார்ந்த பிரச்சினைகள், பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள், குடும்பம் சார்ந்த பிரச்சினைகள், கலாசாரம் சார்ந்த பிரச்சினைகள், மற்றும் பாலியல் சார்ந்த பிரச்சினைகள் என்பன காணப்படுகின்றன. இவ்வாறான வகையில் ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட செங்கலடி 01 கிராம சேவகப் பிரிவில் காணப்படத்தக்க பெண் தலைமை தாங்கும் குடும்பத்தைச் சேர்ந்த வேலைக்கு செல்லும் பெண்கள் எதிர்கொள்ளும் உளவியல், சமூகம், பொருளாதாரம், கலாசாரம், பாலியல் மற்றும் குடும்பம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பிலாக ஆராயும் ஆய்வாகவே எனது ஆய்வானது காணப்படுகின்றது. அதன்படி இவ்வாய்வின் நோக்கமாக பெண் தலைமை தாங்கும் குடும்பங்களில் வேலைக்குச் செல்லும் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ன என அறிதல். எனும் விடயமானது காணப்படுகின்றது. இவ்வாய்வானது பண்புசார் ஆய்வாக காணப்படுவதன் காரணமாக சௌகரிக மற்றும் நோக்க மாதிரி பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வின் பொருட்டு தரவு திரட்டப்பட்ட முறைகளாக: வினாக்கொத்து, நேர்காணல், நேரடி அவதானம் என்பன காணப்படுகின்றன. அந்த வகையில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களை சேர்ந்த வேலைக்குச் செல்லும் பெண்களின் சமூக, பொருளாாதார, கலாசார, குடும்ப, உளவியல் மற்றும் பால்நிலை சார்ந்த சவால்களைக் கண்டறிந்து அத்தகைய சவால்களின் போது அதனை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் எனவும் அதற்குரிய தீர்வுகளை குறிப்பிட்ட பெண்களுக்கு வழங்கும் வகையிலும் முடிவுரை மற்றும் பரிந்துரைகள் குறித்ததான விடயங்களையும் கொண்டமைந்தவகையிலும் இவ்வாய்வானது பெண்ணிய மெய்யியல் நோக்கிலாக செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

***திறவு சொற்கள்:*** *பெண் தலைமைத்துவ குடும்பங்கள், வேலைக்குச் செல்லும் பெண்கள், குடும்பம், கலாசாரம், உளவியல், சமூகம், பொருளாதாரம்.*

# Environment and Social Justice

# மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாட்டு மாற்றம் (2002 – 2022)

**அஞ்சாநிலை சந்திரமோகன்**
புவியியல் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*chandrumohan291@gamil.com*

நிலப்பயன்பாடு என்பது நில மேற்பரப்பில் மேற்கொள்ளப்படும் மனிதனது செயற்பாடுகளையும், நிலப் போர்வைகளையும் குறிக்கின்றது. அந்தவகையில் ‘‘மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாட்டு மாற்றம் (2002 – 2022)’’ எனும் இவ்வாய்வானது இரு ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலப்பகுதிகளில் நிலப்பயன்பாட்டில் ஏற்பட்ட கால ரீதியான மாற்றத்தை புவியியல் தகவல் முறைக்கூடாக கண்டறிவதை நோக்கமாகக் கொண்டது. அந்தவகையில் குறிப்பிடப்பட்ட ஆய்வின் பொருட்டு முதலாம் நிலைத் தரவாக நேரடி அவதானிப்பு முறையும், இரண்டாம் நிலைத் தரவாக 2002 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான Landsat 7, Landsat 9 ஆகிய செய்மதிப் படங்கள், மெததும்பர பிரதேச செயலக மூலவளத் திரட்டு (2021), மாவட்ட புள்ளிவிபரவியல் அறிக்கைகள், ஆய்வுகளுடன் தொடர்புடைய சஞ்சிகைகள் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. குறித்த நிலப்பயன்பாடு மற்றும் நிலப்பயன்பாட்டு மாற்றம் என்பவற்றினை புவியியல் தகவல் முறைக்கூடாக ArcGIS 10.7.1 மென்பொருளைப் பயன்படுத்திக் கால ரீதியான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு 2002, 2022 ஆம் ஆண்டுகளுக்கான நிலப்பயன்பாட்டுப் படங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. Google Earth மூலம் குறித்த ஆய்வுப் பிரதேசத்தின் நிலப்பயன்பாட்டு மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் Supervised Classification முறையைப் பயன்படுத்தி பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. படங்களின் தரம் மற்றும் துல்லியத்தன்மை என்பவற்றை வெளிப்படுத்த உண்மை மதிப்பீடானது Change Error Matrix முறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு முடிவுகளின்படி 20 வருடகால இடைவெளியில் தேயிலை நிலங்கள் 6 சதவீதமாகவும், காடுகள் 4 சதவீதமாகவும் குறைவடைந்துள்ளதுடன் கட்டமைக்கப்பட்ட பகுதி 10 சதவீதமாகவும், வயல் நிலங்கள் 2 சதவீதமாகவும், நீர்நிலைகள் 1 சதவீதமாகவும் அதிகரித்துள்ளன. இக்காலப்பகுதியிலான நிலப்பயன்பாட்டு மாற்றம் பல்வேறு பௌதீக, சமூக, பொருளாதார தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. எனவே இயற்கை வளங்களை பாதுகாத்தல், மீள் காடாக்கல், நிலப்பயன்பாட்டு கொள்கைகள் மற்றும் திட்டமிடல்களை மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *நிலப்பயன்பாடு, நிலப்பயன்பாட்டு மாற்றம், மெததும்பர, செய்மதிப் படங்கள்*

# நுவரெலியப் பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாட்டு மாற்றங்கள்

**பிச்சமுத்து காயத்திரி**
புவியியல் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
pitchamuthugayathri@gmail.com

நிலப்பயன்பாட்டு மாற்றம் என்பது ஆகக்குறைந்தது இரண்டு வேறுபட்ட காலப்பகுதிகளில் புவிமேற்பரப்பில் காணப்படும் பல்வேறு நிலப்பயன்பாடுகளின் வேறுபாடுகளை குறிக்கின்றது. இவ்வாய்வானது நுவரெலியா பிரதேச செயலக பிரிவின் 2002-2022 ஆண்டுகளில் குறித்தப் பகுதியில் நிலப்பயன்பாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆராய்வதை நோக்காக கொண்டது. ஆய்விற்கு முழுமையாக இரண்டாம்நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நிலப்பயன்பாட்டில் ஏற்பட்டு வந்துள்ள மாற்றங்களை ஆதாரப்படுத்துவதற்காக (2002–2022வரையான ஆண்டுகளுக்கிடையில்) Arc GIS 10.4 மென்பொருளினை அடிப்படையாகக்கொண்டு படமாக்கல் செய்யப்பட்டு அப்படங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. செய்மதி விம்பங்கள் (2002,2022), Earth Explorer இலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு நிலப்பயன்பாட்டு படங்கள் (2002,2022) உருவாக்கப்பட்டுள்ளன. மேற்படி பெறப்பட்ட செய்மதி விம்பங்கள் மற்றும் நிலப்பயன்பாட்டுப்படம் புவியியல் தகவல் முறைமை ஊடாக பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு தேசிய நிலப்பயன்பாட்டு வகுப்புக்களுக்கு அமைவாக கட்டிட நிலங்கள், தேயிலை நிலங்கள், காடுகள், வீட்டுத்தோட்டம், நீர்நிலைகள் என ஐந்து வகையான நிலப்பயன்பாட்டு வகைகள் அடையாளப்படுத்தப்பட்டு Google Earth தொழில்நுட்ப அவதானத்தின் அடிப்படையில் நிலப்பயன்பாடுகள் கட்புல, எண்ணியல் ரீதியாக விளக்கமளிக்கப்பட்டு படமாக்கப்பட்டுள்ளது. நிலப்பயன்பாட்டு படங்கள் supervised classification method அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் செய்மதி விம்பங்களிலிருந்து நிலப்பயன்பாடு நிலப்போர்வை வகைகளை படமாக்குவதற்கு pixel-based image classification methods, hybrid objective- based Method போன்ற உயர் தெளிவுத்திறன் வாய்ந்த துல்லியமான நுட்ப முறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகளையும் உருவாக்கப்பட்ட GIS படங்களையும் ஒப்பிடுதல், புள்ளிவிபரவியல் அடிப்படையில் கணிப்பிடல், இடம்சார் தரவுகளையும் அட்டவணைகளையும் இணைத்தல், தனித்த நிலப்பயன்பாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை கணித்தல் என வரையறை செய்துள்ளது. பகுப்பாய்வுகளின் அடிப்படையில் 2002களில் 17833.23ha ஆக காணப்பட்ட வனப்போர்வை 1430.29ha களாகவும் தேயிலை நிலமமனது 2002 இல் 20908.26ha ஆகவும் 2022களில் 13051.98ha ஆகவும் குறைவடைந்துள்ளது. 2002 இல் 3756.09ha ஆக காணப்பட்ட வீட்டுத்தோட்டம் 2022 களில் 13217ha களாகவும் குடியிருப்பு பாங்குகள் 2002 ஆம் ஆண்டில் 5675.49ha களாகவும் 2022 ஆம் ஆண்டு 7600.37ha ஆகவும் அதிகரித்துள்ளது. சனத்தொகை பெருக்கம், மானிடசெயற்பாடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன நிலப்பயன்பாட்டு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதுடன் இவ்வாறான நிலப்பயன்பாட்டு மாற்றங்களை சரியான முறையில் திட்டமிட்டு ஏற்படுத்துவதன் மூலம் பூகோள பிராந்திய ரீதியில் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்தலாம்.

***திறவுச் சொற்கள்:*** *நிலப்பயன்பாடு, நிலப்போர்வை, மாற்றங்கள், புவியியல் தகவல் தொழில்நுட்பம், தேயிலை*

# இலங்கையின் பொருளாதார நெருக்கடியினால் மீனவ சமுதாயம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்: ஒலுவில் பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**தாஜுதீன் முஹம்மது முபாஸ்**
சமூக விஞ்ஞானங்கள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
mufasnmohamed@gmail.com

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் முக்கியமான தொழிலாக மீன்பிடித் தொழில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அம்பாறை மாவட்டத்தில் கரையோர பகுதிகளில் ஒன்றாக ஒலுவில் கிராமம் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள மக்கள் மரபு ரீதியாக விவசாயம், மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இக்கிராமத்தில் 2000 மீனவர் குடும்பங்கள் வாழ்கின்றனர் அவற்றுள் 2150 நபர்கள் மீனவர்களாக தமது வாழ்வாதாரத்தை தேடுகின்றனர். மீனவ சமுதாயமானது காலத்திற்குக் காலம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றது. குறிப்பாக கடல் அரிப்பு, துறைமுகம் வருகையினால் காணி இழப்பு, மண் அகழ்வு என பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றது. ஆயினும் தற்போது இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் தற்சமயம் இன்னும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இவற்றினை வெளிக்கொண்டுவருவதற்காக முதலாம் நிலைத் தரவுகளான நேரடி அவதானம், நேர்காணல் போன்ற முறைகளையும் இரண்டாம் நிலைத் தரவுகளாக பொருத்தமான ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளம் என்பனவற்றின் மூலம் பெறப்பட்ட தரவுகள் பயன்படுத்தப்பட்டு இங்கு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலமாக ஒலுவில் பிரதேச மீனவச் சமுதாயத்தின் முக்கிய பிரச்சினைகளாக அதிகமான வறுமை நிலை, அதிக கடன் சுமை, வெளிநாடு செல்லுதல், தங்க ஆபரணப் பொருட்கள் விற்பனையும் அடகு வைத்தலும், தொழிலை மேற்கொள்வதற்கான மூலப் பொருட்களின் விலை ஏற்றம் முதலிய காரணங்களினால் தங்களின் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாமல் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இவற்றினை வெளிக்கொண்டு வருவதுடன் இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொருத்தமான பரிந்துரைகளும் இனங்காணப்பட்டு முன்வைக்கப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *மீன்பிடித் தொழில், மீனவச் சமுதாயம், பொருளாதார நெருக்கடி*

# முதியோர்கள் எதிர்கொள்ளும் சுகாதாரப் பிரச்சினைகள்: நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பெருந்தோட்டங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு மருத்துவ சமூகவியல் ஆய்வு

**பா.திலான், ப.நிரோஷா, சி.சிவகாந்தன்**
சமூகவியல் துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
*thilansmart@gmail.com*

உலகில் அதிகரித்துச் செல்லும் முதியோர் சனத்தொகையைக் கொண்ட நாடாக இலங்கை காணப்படுகின்றது. அதிகரித்துச் செல்லும் முதியோர் சனத்தொகையானது சுகாதாரம், சமூக நலன்புரி மற்றும் குடும்ப ஆதரவு என்பனவற்றில் எதிர்மறை விளைவுகளைத் தோற்றுவிக்கின்றது. முதியோர்கள் எதிர்கொள்ளும் சுகாதாரப் பிரச்சினைகளை மதிப்பிடுதலே ஆய்வின் பிரதான நோக்கமாகும். நுவரெலியா பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பெருந்தோட்டங்களை அடிப்படையாக கொண்ட இந்த ஆய்வில் கலப்பு முறை ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டது. வினாக்கொத்து, விடய ஆய்வு, நேர்காணல் மற்றும் இலக்குக் குழுக்கலந்துரையாடல் மூலம் முதலாம் நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. அடுக்கமைக்கப்பட்ட எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 60 மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட 427 முதியோர்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டனர். ஆய்வின் அனைத்துச் செயன் முறைகளிலும் ஆய்வு நெறிமுறைகள் பின்பற்றப்பட்டன. பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்விற்கும் கணியம்சார் தரவுகள் SPSS (version23) உதவியுடன் விபரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாவிற்கும் உட்படுத்தப்பட்டதுடன் மாறிகளுக்கிடையிலான தொடர்பினை விபரிப்பதற்கு கைவர்க்கச் சோதனையும் (Chi-square test) பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வு முடிவுகளின்படி 88.1% முதியோர்கள் இன்றும் லயன் குடியிருப்புகளில் வாழ்வதுடன் 74.2% மானவர்கள் தற்போது தொழில்புரிகின்றனர். அனைத்து முதியோர்களும் உடல் ஆரோக்கியப் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். இவர்களில் 95.6% மானவர்கள் கால்வலியாலும் 13.3% மானோர் இருதய நோய்களாலும் பாதிக்கப்பபட்டுள்ளனர். இவர்களில் 87.1% மானோர் உளவியல் ரீதியான பிரச்சினைகளினை எதிர்கொண்டுள்ளனர். இவற்றில் மறதி, மன அழுத்தம், தனிமை உணர்வு, சோர்வு, கோபம், தற்கொலை தொடர்பான எண்ணங்கள் (8.4%) முக்கிய பிரச்சினைகளாகும். மேலும், உளவியல் சார்ந்த பிரச்சினைகளை எதிர்நோக்குபவர்களில் 2.6% மானவர்கள் மாத்திரமே உளவியல் ஆலோசனைகளைப் பெற்றுள்ளனர். மேலும், 97.2% முதியோர்கள் தங்கள் தோட்டப்பகுதிகளில் மருத்துவ வசதி காணப்படவில்லை எனக் குறிப்பிட்டனர். மேலும், முதியோர்களில் 89.5% மானவர்கள் போதைப்பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். ஆய்வு முடிவுகளின்படி முதியோர்கள் அதிகளவு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றனர். முதியோர்களுக்கான விசேடமான மருத்துவப் பாராமரிப்பு சேவைகளைப் பெருந்தோட்ட வைத்தியசாலைகளில் கிடைப்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள முதியோர்கள் எதிர்நோக்குகின்ற சுகாதாரப் பிரச்சினைகளைக் குறைக்க முடியும்.

***திறவுச் சொற்கள்:*** *இருதய நோய், உடல் ஆரோக்கியப்பாதிப்பு, உளவியல் பாதிப்பு, போதைப்பொருள், தொற்றாநோய்கள்*

# உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும் விளைவுகளும்: நுவரெலியா மாவட்டத்தின் லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவினை அடிப்படையாகக்கொண்ட ஒரு மருத்துவ சமூகவியல் ஆய்வு

**எலோமி ஜெனிட்டா, சி.சிவகாந்தன்**
சமூகவியல் துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
alomijenita@gmail.com

உயர்குருதி அமுக்கமானது முக்கியமான தொற்றாநோய்களுள் ஒன்றாகக் காணப்படுவதுடன் மக்களின் நல்வாழ்விலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. குறித்த ஆய்வானது உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தைகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளையும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தைக்கும் சமூகக் குடித்தொகைக் காரணிகளுக்கும் இடையிலான தொடர்பினையும் நிர்ணயிப்பதை நோக்கமாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டது. சமுதாயத்தை அடிப்படையாகக்கொண்ட இந்த ஆய்வில் கலப்புமுறை வடிவம் பயன்படுத்தப்பட்டது. அடுக்கமைக்கப்பட்ட எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்ட 292 நோயாளிகளை மாதிரிப் பருமனாகக்கொண்டு நுவரெலியா மாவட்டத்தின் லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வினாக்கொத்து, நேர்காணல், விடய ஆய்வுகள் மூலம் முதலாம்நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. கணியம்சார் தரவுகள் SPSS உதவியுடன் விபரணப்புள்ளிவிபரவியல் பகுப்பாய்விற்கும் பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்பட்டன. ஆய்வின் முடிவுகளின்படி 68% பெண்களாகவும் 62% மானோர் 56-65 வயதிற்கிடைப்பட்டவர்களாகவும் இருந்தனர். மேலும், உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் 80.5% மானோர் தமது நோய்க்கான மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக்கொண்டனர். மேலும், 57.2% மானோர் உயர்குருதி அமுக்கம் சாதாரணமானது எனவும் 42.8% மானோர் தீவிரமானதெனவும் குறிப்பிட்டனர். ஆண்களில் 33.9% மானோர் மதுப்பழக்கம் உடையவர்களாவர். இவர்களில் 4.1% மானோர் மட்டுமே உயர்குருதியமுக்க சிகிச்சைக்குப் பின்னர் மதுப்பழக்கத்தைக் குறைத்துள்ளனர். மேலும், ஆண்களில் நோய்நிலையை அறிந்ததன் பின்னரும் புகைப்பழக்கத்தை தொடர்ந்தவர்களாக 3.7% மானோர் காணப்படுகின்றனர். மேலும், பிரதேச வைத்தியசாலையின் மருத்துவ சேவைகள் தொடர்பில் 80.1% மானோர் பூரண அதிருப்தி (41.1%) மற்றும் அதிருப்தியினையும் (39%) வெளிப்படுத்தியிருந்தனர். சமூகக் குடித்தொகைக் காரணிகளான பால்நிலை ($P=0.000<0.05$), வருமானம் ($P=0.000<0.05$), கல்விநிலை ($P=0.000<0.05$) என்பன உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் புள்ளிவிபரவியல் ரீதியாக மிகநெருங்கிய இடைத்தொடர்பைக் கொண்டிருந்தன. உயர்குருதியமுக்கத்திலிருந்து விடுபட மருந்துகள் அனைத்தும் அரசாங்க வைத்தியசாலையில் கொடுக்கப்பட வேண்டுமென்பதே நோயாளிகளின் பிரதான எதிர்ப்பார்ப்பாக இருந்தது. உயர்குருதி அமுக்கத்தினைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முறையான சிகிச்சையினைப் பெற்றுக்கொள்வதுடன் ஆரோக்கியமான வாழ்க்கைப்பாணியைப் பின்பற்றவேண்டுமெனவும் ஆய்வு பரிந்துரை செய்கிறது.

***திறவுச் சொற்கள்:*** *சுகாதாரப் பராமரிப்பு, சுகாதார வசதியின் கிடைப்பனவு, நோயின் தீவிரத்தன்மை, பால்நிலை, வாழ்க்கைப்பாணி மாற்றங்கள்*

# தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகள்: அம்பகமுவப் பிரதேச செயலகப் பிரிவை அடிப்படையாகக் கொண்ட ஒரு மருத்துவ சமூகவியல் ஆய்வு

**பா. ரோஹினி, சி. சிவகாந்தன்**
சமூகவியல்துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
rohinisharitha@gmail.com

தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகளை அதிகம் எதிர்கொள்ளும் குழுக்களாக இன்று தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளர்கள் காணப்படுகின்றனர். தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளர்களின் தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகளை மதிப்பிடுவதே குறித்த ஆய்வின் நோக்கமாகும். சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆய்வானது கலப்பு முறை ஆய்வு வடிவத்தினைப் பயன்படுத்தி அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட தேயிலைத் தோட்டங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அடுக்கமைக்கப்பட்ட எழுமாற்று மாதிரி நுட்பத்தின் அடிப்படையில் 300 தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளர்கள் இந்த ஆய்வுக்குத் தெரிவுசெய்யப்பட்டனர். ஆய்வின் அனைத்துக் கட்டங்களிலும் ஆய்வு நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. வினாக்கொத்து, விடய ஆய்வு மற்றும் நேர்காணல் மூலம் முதலாம்நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன. கணியம்சார் தரவுகள் SPSS (version 23) உதவியுடன் விபரணப்புள்ளிவிபரவியல் பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்பட்டது. ஆய்வு முடிவுகளின்படி பெரும்பாலானோர் (55.4%) 31-50 வயதுக்குட்பட்டவர்கள். பெரும்பாலான தொழிலாளர்கள் (56.4%) ஆரம்பக்கல்வியைக் கூடப் பெற்றிருக்கவில்லை. பெரும்பான்மையான (88%) தொழிலாளர்களின் மாத வருமானம் 10000-20000 ரூபாவாகும். மேலும், 48.3% ஆனோர் 16-20 வருடங்கள் பணி அனுபவம் கொண்ட தோட்டத் தொழிலாளர்களாக விளங்குகின்றனர். ஆய்வு முடிவுகளின்படி தசைக்கூட்டுக் கோளாறுகள் (78.7%) தோட்டத் துறையில் பெண் தொழிலாளர்களிடம் அதிகளவில் காணப்படுவதாகவும் அதனைத் தொடர்ந்து கழுத்து வலி (15.3%), முதுகுவலி (31.4%), தோள்பட்டை மற்றும் மூட்டு வலி (32.1%) ஆகியவை பொதுவான தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன. இவர்களில் (43.7%) ஆனோர் மருத்துவ சுகாதார சேவைகள் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளனர். சமூகக் குடித்தொகைக் காரணியான வயதுடன் ($P=0.000<0.02$), தோள்பட்டை வலியானது குறிப்பிடத்தக்க தொடர்பைக் காட்டுகின்றது. பெரும்பாலான (62.7%) தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளர்களிடையே ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தை நன்றாக இல்லை என ஆய்வு முடிவுகள் வெளிபடுத்துகின்றன. மேலும், இவர்களுக்குத் தனியாள் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டபோதிலும், அதனைப் பயன்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு (33.3%) குறைவாகவே உள்ளது. தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகளைத் தடுத்தல் தொடர்பான சுகாதாரக் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதை இந்த ஆய்வு பரிந்துரைக்கின்றது.

***திறவுச் சொற்கள்:*** *கொழுந்து பறித்தல்,தனியாள் பாதுகாப்புக் கருவிகள்,தசைக்கூட்டு நோய்கள் ,தொழிற் சூழல், நீண்ட நேர வேலை*

# Inclusive Education Policy and Practice

# தரம் 06 மாணவர்களின் எழுத்துத்திறன் விருத்தி கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்

**அஸீஸ் பாத்திமா ஹாழிறா, ராஜேந்திரன் தக்ஷாயினி**
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*halira19961116@gmail.com*

"தரம் 6 மாணவர்களின் எழுத்துத்திறன் விருத்தி கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்" என்ற தலைப்பில் அமைந்த இவ்வாய்வானது எழுத்துத்திறன் விருத்தி பின்னடைவாக உள்ள போது அது கற்றலில் ஏற்படுத்தும் தாக்கங்களைக் கண்டறிவதனை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் ஏறாவூர்க் கல்விக் கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை மையப்படுத்திய ஓர் அளவை நிலை ஆய்வாகும். ஏறாவூர் கல்விக் கோட்டமானது 1 AB பாடசாலைகள் நான்கையும் 1C பாடசாலை ஒன்றையும் வகை II பாடசாலைகள் ஐந்தையும் வகை III பாடசாலைகள் எட்டினையும் (18 பாடசாலைகள்) கொண்டு காணப்படுகின்றது. இப்பாடசாலைகளில் இருந்து தரம் 6 வகுப்பினைக் கொண்ட 10 பாடசாலைகளும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன. 10 பாடசாலைகளில் இருந்தும் 12 அதிபர்கள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் தரம் 6 இற்குக் கற்பிக்கும் 82 ஆசிரியர்கள் ஆண், பெண் என்றரீதியில் படையாக்கப்பட்டு பின் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 2:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 41 ஆசிரியர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளதுடன், தரம் 6 வகுப்பினைச் சேர்ந்த 648 மாணவர்கள் ஆண், பெண் என்றரீதியில் படையாக்கப்பட்டு பின் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 5:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 125 மாணவர்கள் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 5:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 25 பேர் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டனர். ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள், ஆசிரியர்களிடமிருந்து வினாக்கொத்து மூலமாகவும் அதிபர்கள், பெற்றோர்களிடமிருந்து நேர்காணல் மூலமாகவும் அளவு மற்றும் பண்பு ரீதியாகத் தரவுகள் பெறப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் Excel மென்பொருளினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள், வரைபுகள் மூலம் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. அதிலிருந்து பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன. எழுத்துத்திறன் பின்னடைந்த மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் பின்தங்கிய நிலையில் காணப்படுவதுடன் இந்நிலைமையானது ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாடுகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. அந்தவகையில், மாணவர்களின் எழுத்துத்திறன் விருத்தியினை மேம்படுத்துவதற்கான பொருத்தமான விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *மாணவர்கள், எழுத்துத்திறன் விருத்தி, கற்றல்,தாக்கம்*

# கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் வாசிப்புத்திறன் பின்னடைவு கற்றல் செயற்பாடுகளில் ஏற்படுத்தும் சவால்கள்

**முஹம்மட் ஜமால்தீன் பாத்திமா ஸஜீதா, ராஜேந்திரன் தக்ஷாயினி**
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*sajeethajamaldeen1997@gmail.com*

வாசிப்புத் திறன் பின்னடைவால் கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். அத்தகைய இடங்களைக் கண்டறிந்து அதற்கான சிபாரிசுகளை முன்வைத்தல் என்ற நோக்கத்தில் அமைந்த இவ்வாய்வானது, ஏறாவூர் கல்வி கோட்டப் பாடசாலைகளில் உள்ள கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களை உள்ளடக்கிய பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வாகும். கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டமையினால் ஏறாவூர் கல்விக் கோட்டத்திலுள்ள 18 பாடசாலைகளிலிருந்து கனிஸ்ட இடைநிலை வகுப்புக்களைக் கொண்ட 10 பாடசாலைகளும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன. 10 பாடசாலைகளிலும் உள்ள அதிபர் தரத்தை உடைய 12 அதிபர்கள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டதுடன் கனிஸ்ட இடைநிலை வகுப்புக் கற்பிக்கும் 108 ஆசிரியர்களிலிருந்து ஆண், பெண் என்ற ரீதியில் படையாக்கப்பட்டு பின் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 2:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 54 ஆசிரியர்களும் தெரிவுசெய்யப்பட்டதுடன் 10 பாடசாலைகளின் அறிக்கைகளில் இருந்தும் பெறப்பட்ட வாசிப்புத்திறன் பின்னடைந்த 228 மாணவர்களிலிருந்து ஆண், பெண் என்ற ரீதியில் படையாக்கப்பட்டு பின் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 2:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 105 மாணவர்களும் ஆய்வு மாதிரியாக தெரிவு செய்யப்பட்டனர். மேலும் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 105 மாணவர்களின் 5:1 விகிதத்தில் 20 பெற்றோர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளிடமிருந்து வினாக்கொத்து, நேர்காணல், அவதானம், ஆவணச்சான்றுகள் போன்ற ஆய்வுக்கருவிகள் மூலம் தரவுகள் பெறப்பட்டன. பண்புரீதியாகவும், அளவுரீதியாகவும் பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் Excel மென்பொருளினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள், வரைபுகள் மூலம் குறித்துக்காட்டப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து முடிவுகள் பெறப்பட்டன. வாசிப்புத்திறன் பின்னடைவால் கற்றல் செயற்பாட்டில் சுயமாக வாசிக்க முடியாமை, பரீட்சை வினாக்கள் மற்றும் பயிற்சிக் கொப்பிகளிலுள்ள வினாக்களை வாசித்து விளங்கி விடையளிக்க முடியாமை, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் கலந்துகொள்ள முடியாமை, தமிழ்த்தினப் போட்டி நிகழ்வின் போது போட்டிகளில் கலந்து கொள்ள முன்வராமை, போன்ற பல்வேறு சவால்கள் ஏற்படுகின்றன. எனவே, இம்மாணவர்களின் வாசிப்புத்திறனை விருத்தி செய்யும் வகையில் பாடசாலையில் பரிகார செயற்பாடுகள் மேற்கொள்ளல், ஊக்கப்படுத்தல் செயற்பாடுகள், வாசிப்பு பயிற்சியின் போது புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தல், பாடசாலையில் வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான தனியான குழு அமைத்தல், வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான விசேட பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படல் போன்ற தீர்வுகளை முன்வைக்கக் கூடிய வகையில் அதற்கான விதப்புரைகளும் முன்மொழியப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *வாசிப்புத் திறன், வாசிப்புத்திறன் பின்னடைவு, கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்கள், கற்றல்*

# சிரேஷ்ட இடைநிலை வகுப்பு (தரம் 11) மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் திறன்வகுப்பறையின் செல்வாக்கு (மண்முனை வடக்கு கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவைநிலை ஆய்வு)

**சத்தியராசா பிரியசகி, ராஜேந்திரன் தக்ஷாயினி**
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*sagipriya2028s@gmail.com*

"சிரேஷ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் திறன்வகுப்பறையின் செல்வாக்கு" எனும் தலைப்பில் மட்டக்களப்பு கல்வி வலயத்தில் உள்ள மூன்று கோட்டங்களில் ஒன்றான மண்முனை வடக்கு கல்விக் கோட்டதை அடிப்படையாகக் கொண்டு இவ்வளவைநிலை ஆய்வானது இடம்பெற்றுள்ளது. திறன் வகுப்பறைகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் கற்றல் - கற்பித்தலில் ஏற்படுத்தும் செல்வாக்கினை அறிந்து திறன் வகுப்பறையினை ஆசிரியர்கள் மாணவர்களின் கற்றல் - கற்பித்தலில் பயன்படுத்தாமைக்கான காரணங்களை ஆராய்வதூடாக கல்விச் சமூகத்திற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் விதமாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. ஆய்வினை மேற்கொள்வதற்காக மண்முனை வடக்கு கல்விக் கோட்டத்தில் உள்ள திறன் வகுப்பறைகள் கொண்ட 9 பாடசாலைகளும் 9 அதிபர்களும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும், க.பொ.த. சாதாரண தரம் கற்பிக்கும் 311 ஆசிரியர்களினை படையாக்க மாதிரியினை பயன்படுத்தி ஆண், பெண் என வகைப்படுத்தியதன் அடிப்படையில் 109 ஆசிரியர்கள் 3:1 எனும் விகிதத்திற்கமைவாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் தரம் 11 கற்கும் 1300 மாணவர்களினை வகுப்புரீதியாக ஆண், பெண்ணாக படையாக்கம் செய்து அதில் இருந்து 10 சதவீதமான 130 மாணவர்களைத் தெரிவுசெய்து வினாக்கொத்து, நேர்காணல், அவதானிப்பு மூலமாக அளவு மற்றும் பண்பு ரீதியான தரவுகள் பெறப்பட்டு ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் பண்பு, அளவு ரீதியாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் திறன் வகுப்பறையைப் பயன்படுத்தாமைக்கான காரணங்களாக முறையான பயிற்சிகள் வழங்கப்படாமை, தொழில்நுட்பத்தை மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் ஒன்றிணைக்க முடியாமை, நேரம் போதாமை போன்ற பிரதான காரணங்கள் கண்டறியப்பட்டு பெறப்பட்ட முடிவுகளுக்கு அமைய இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வுகளாக TNA, TIP போன்ற முறைகளும் விதப்புரைகளாக வழங்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *சிரேஷ்ட இடைநிலை, கற்றல், கற்பித்தல், திறன்வகுப்பறை*

# INCLUSIVE EDUCATION IN THE BATTICALOA DISTRICT: ANALYZING PRACTICES, STRENGTHS, AND CHALLENGES

**K. Ketheeswaran**
Department of Special Needs Education,
Faculty of Education,
The Open University of Sri Lanka.
Email: kketh@ou.ac.lk

**F. M. Nawastheen**
Department of Secondary & Tertiary Education,
Faculty of Education,
The Open University of Sri Lanka.
Email: fmnaw@ou.ac.lk

This study explored the strengths and challenges of implementing inclusive education (IE) in government schools in the Batticaloa district of Sri Lanka. A qualitative approach involved multiple case studies of five government schools. Participants included five Assistant Directors of Special Education/In-Service Advisors of Special Education (ADs/ISAsSE), five principals, five class teachers, ten subject teachers, and five parents of students with special educational needs (SENs). Data were collected through interviews, focus group discussions, and observations. Positive perceptions were expressed about IE practices, including information provision, student interactions, principal and teacher competencies, connections with health services and parents, teaching methods, curriculum, assessment, and student achievements. Additionally, collaborative efforts with stakeholders, peer and teacher-student interactions, principal and teacher competencies, teaching methods, curriculum adaptation, assessment, and student accomplishments strengthened IE practices. However, challenges were also identified, such as the absence of school-level IE policies, safe and accessible physical infrastructure, implementation of Individualized Educational Plans (IEPs), and resource allocation. These challenges contributed to negative perceptions of IE practices among stakeholders. The study recommends that school-level IE policies be developed to facilitate IE practices, enhance school accessibility for children with SENs, and improve resource allocation for IE practices in government schools in the Batticaloa district.

***Key Words:*** *Inclusive Education, Special Educational Needs, Regular Classroom, Individualized Educational Plans, Inclusive Education*

# Virtual Education and Equity

# நிகழ்நிலைக் கல்வி மலையக பாடசாலைகளில் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களில் ஏற்படுத்தியுள்ள ஒழுக்கவியல் ரீதியான தாக்கங்கள்: கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்டப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**ராஜா பிரியதர்ஷனி, முனியாண்டி ரவி**
தத்துவவியல் மற்றும் விழுமிய கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*priyadarsani432@gmail.com*

இன்றைய நவீன யுகத்தில் ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு உலகில் ஏற்பட்ட தொழிநுட்பப் புரட்சியும் மிக முக்கிய காரணமாகவுள்ளது. இன்று எம்மால் மேற்கொள்ளப்படுகின்ற அனேகமான செயற்பாடுகளில் தொழிநுட்ப சாதனங்களின் பங்களிப்பு இன்றியமையாததாக காணப்படுகின்றது. இதனடிப்படையில் சமீபகாலங்களில் உலகையே ஆட்டிப்படைத்த covid-19 பெருந்தொற்றினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலைக் கல்வியின் மாணவர்கள் தங்களது கற்றல் செயற்பாடுகளை தொலைத்தொடர்பு சாதனங்களின் வாயிலாக முன்னெடுத்துச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் விளைவினால் மாணவர்கள் நாகரிகம் எனும் அநாகரிக மாயைக்குள் தெரிந்தும் தெரியாமலும் விழுந்து, ஒழுக்க விழுமியங்களை புறந்தள்ளிவிடுவதனால் பல்வேறு வகையிலும் ஒழுக்க ரீதியான சவால்களை எதிர்நோக்கியுள்ளனர். அந்தவகையில் நிகழ்நிலைக் கல்வியினூடாக மாணவர்களிடத்தில் அதிகரித்த சமூக வலைத்தளப் பாவனை அவர்களை எவ்வாறான ஒழுக்க மீறுகைகளுக்கு ஆளாக்கியுள்ளது என்பதை கண்டறிவதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது ஆய்வு பிரதேசமாக கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்ட கல்வி வலயத்திற்குட்பட்ட தெஹியோவிட்ட கோட்டத்திலுள்ள 9 தமிழ் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. நோக்க மாதிரியைக் கொண்டு சிரேஷ்ட இடைநிலை பிரிவு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாய்விற்காக கவனக் குழு நேர்காணல், வினாக்கொத்து மற்றம் அவதானம் ஆகிய ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டன. அந்தவகையில் ஆய்வு முடிவுகளிலிருந்து, அதிகமான மாணவர்கள் நிகழ்நிலைக் கல்வியினூடாக அதிகரித்த சமூக வலைத்தளங்களின் பாவனையால் பல்வேறு ஒழுக்க மீறுகைகளுக்கு உள்ளாகி வருகின்றனர். இதனால் பாதிப்படையும் கற்றலையும் எதிர்காலத்தையும் வளப்படுத்த சமூக வலைத்தளங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் பிள்ளை மீது கொண்டிருக்க வேண்டிய இடைத்தொடர்புகள் போன்றவற்றுக்கான சிபாரிசுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *நிகழ்நிலைக் கல்வி, சமூக வலைத்தளங்கள், ஒழுக்க மீறுகை, கொவிட்-19*

# விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் வகிபாகம்

**ந. கோவேந்தன, ராஜேந்திரன் தக்ஷாயினி**
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
koventhannadarasa@gmail.com

இவ்வாய்வானது விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காண்பதுடன் அவர்களது கற்றலில் ஆசிரியர்களின் வகிபங்கினை ஆராய்தல் எனும் நோக்கத்தின் அடிப்படையில் மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் உள்ள விசேட கல்வி அலகுகளை அடிப்படையாகக் கொண்ட அளவை நிலை ஆய்வாக அமைந்தது. இவ்வலயங்களில் உள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விசேட அலகுகளைக் கொண்ட 09 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. 09 பாடசாலைகளிலும் இருந்து 09 அதிபர்களும், விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் 20 ஆசிரியர்களும், இவ்விரண்டு வலயங்களிலும் உள்ள விசேட கல்விக்கு பொறுப்பான 02 சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களும், விசேட தேவையுடைய 90 மாணவர்களும், இம்மாணவர்களின் பெற்றோர்கள் 90 பேரும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து, அவதானம், நேர்முகங்காணல் போன்ற ஆய்வு கருவிகள் மூலம் தரவுகள் பெறப்பட்டு அவை ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் பண்பு ரீதியானதும், அளவு ரீதியானதுமான கலப்பு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு தரவுகள் MS EXCEL மூலம் உருக்கள், அட்டவணைகளாக வகை குறித்துக்காட்டப்பட்டுள்ளன. அதன் இந்த கலப்பு முறை பகுப்பாய்வின் அடிப்படையில் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் வகிபாகம் குறைவதற்கான காரணங்களாக போதிய பயிற்சி குறைவு, வளங்கள் குறைவாக காணப்படுகின்றமை, ஆசிரியர்கள் வாண்மைத்துவத்தை விருத்தி செய்யாமை, இம் மாணவர்களின் பெற்றோர் ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தலுக்கு போதிய பங்களிப்பு வழங்காமை, ஆசிரியர்கள் தூர பிரதேசங்களில் இருந்து பணிக்கு வருகின்றமை, பெற்றோர் பிள்ளைகளை தொடர்ச்சியாக பாடசாலைக்கு அனுப்பாமை, ஆசிரியர் மாணவர் விகிதம் முறையாக பின்பற்றப்படாமை போன்ற பல காரணங்களால் இம்மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் வகிபாகம் குறைகின்றமை பிரச்சினைகளாக பெறப்பட்டுள்ளன. இதற்கான தீர்வுகளாக அதிபர்கள் ஆசிரியர்களுக்கு தகுந்த ஆலோசனைகள் வழங்குதல், ஆசிரியர்கள் விசேட கல்வி தொடர்பான கற்கை நெறிகளை தொடர்வதற்கு அதிபர் ஒத்துழைப்பு வழங்குதல், விசேட தேவைக் கல்வியுடன் தொடர்புபட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்களை அழைத்து ஆசிரியர்களுக்கு செயலமர்வுகள் நடாத்துதல், கல்வி அமைச்சு வலய மட்டத்தில் இவ் ஆசிரியர்களுக்கு பயிற்சி நெறிகளை வழங்குதல், அதிபர் இம் மாணவர்களின் கற்றல், கற்பித்தல் தொடர்பில் பெற்றோருக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கி ஆசிரியர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட வைத்தல், விசேட தேவை அலகுகளில் கல்விசாரா ஊழியர்களை நியமித்தல், இவ் ஆசிரியர்களுக்கு உதவி ஆசிரியர்களை நியமித்தல், கல்வி அமைச்சின் 37/2020 சுற்றறிக்கையின் படி விசேட அலகுகளில் ஆசிரியர் மாணவர் விகிதாசாரம் 1:5 என கணக்கிட்டு தேவையான மீதி ஆசிரியர்களை வழங்க வேண்டும். மற்றும் மாணவர்களின் வீட்டிற்கு செல்லும் ஆசிரியர்களின் பொருத்தமான எண்ணிக்கையை கணக்கிடும்போது ஆசிரியர் மாணவர் விகிதம் 1:3 ஆக இருத்தல் வேண்டும், அதிபர் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்து வளங்களை பெற்றுக்கொடுத்தல், ஆசிரிய ஆலோசகர் மேற்பார்வை செய்தல் போன்ற செயற்பாடுகள் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *விசேட தேவைக் கல்வி, கற்றல், கற்பித்தல், வகிபாகம், ஆசிரியர்*

# கற்றல்-கற்பித்தல் செயன்முறையில் இணையவழிச் சாதனங்களின் பயன்பாடு: சிரேஷ்ட இடைநிலை வகுப்புகள் பற்றிய ஓர் ஆய்வு

**இராசசிங்கம் நாகேந்திரன்**
மட்/மட்/ பாலமீன்மடு விக்னேஸ்வரா வித்தியாலயம்,
பாலமீன்மடு, மட்டக்களப்பு.
*nagendran18pa@gmail.com*

**தேவராசா முகுந்தன்**
முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை,
கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவல, நுகேகொட.
*tmuku@ou.ac.lk*

வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் செயன்முறைகளில் இணையவழிக் கற்றல் சாதனங்களின் பயன்பாட்டினைக் கண்டறிந்து அவற்றை மேலும் வலுப்படுத்துவதற்கான ஆலோசனைகளை முன்வைக்கும் நோக்குடன் இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டது. இவ்வாய்விற்காக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களில் இருந்து கல்குடா, கல்வி வலயம் நோக்க மாதிரியாக தெரிவு செய்யப்பட்டன. இவ்வலயத்திலுள்ள கோட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ள 86 பாடசாலைகளிலிருந்து பாடசாலை வகைகள் என்ற அடிப்படையில் படையாக்கம் செய்யப்பட்டு ஒவ்வொரு வகைப் பாடசாலைகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் ஐம்பது (50%) சதவீதமான பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. அந்தவகையில் 1AB பாடசாலைகள் - மூன்றும் (3) 1C பாடசாலைகள் - நான்கும் (4) வகை-II பாடசாலைகள் - பதின்னொன்றுமாக (11) மொத்தம் -18 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. இங்கு சிரேஸ்ட இடைநிலைப் பிரிவில் கற்கும் மாணவர்கள் மாத்திரம் ஆண், பெண் பத்துக்கு ஒருவர் (10:1) என்ற விகிதத்தில் குலுக்கல் அடிப்படையில் ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் இலகு எழுமாற்று மாதிரி மூலம் தெரிவு செய்யப்பட்டனர். ஆசிரியர்கள் ஒருபாடசாலையில் இரண்டுபேர் வீதம் -36 பேர் தெரிவு செய்யப்பட்டனர். ஆய்வுக்காக வினாக்கொத்து, அவதானிப்பு, ஆவணங்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஆய்வுக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. ஆய்வு நோக்கங்களுக்கேற்ப ஆய்வு வினாக்கள் தயாரிக்கப்பட்டு அளவுசார், பண்புசார் தரவுகள் இலத்திரனியல் விரிதாள் (Excel), சமூக விஞ்ஞான புள்ளி விபரவியல் பொதி (SPSS, Version-25) போன்ற மென்பொருள்களைப் பயன்படுத்தி பகுப்பாய்வு, வியாக்கியானம், கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வு முடிவுகளாக இணையவழிக் கற்பித்தல் சாதனங்களை அதன் பங்குதாரர்களான மாணவர்கள், ஆசிரியர்கள் பயன்படுத்துவதில் ஆர்வத்தினை கொண்டிருந்தாலும் பயன்பாட்டின்போது பல பிரச்சினைகளை எதிர்கொள்பவர்களாகவே காணப்பட்டனர். அந்தவகையில் இணையவழிச் சாதனங்கள் போதியளவு இல்லாமை, இணையசாதனம் பற்றிய அறிவு போதாமை, தொழிநுட்ப ரீதியான பிரச்சினைகளை கையாளும் திறன் இன்மை, பயிற்சிகள் போதாமை, தெளிவான சமிக்ஞை இன்மை போன்ற பிரச்சினைகளுடன் தொடர்புபட்டுக் காணப்பட்டது. அடுத்து கற்றல்-கற்பித்தல் பிரச்சினைகளாக மாணவர்கள், ஆசிரியர்களின் எண்ம (Digital) அறிவு போதாமை, உரியநேரத்தில் பங்குபற்ற முடியாமை, இணையவழியிலான வளங்கள் பாடசாலையில் போதாமை கற்பவர்களின் ஊக்கமின்மை ஆகியவற்றுடன் தொடர்புடையதாக காணப்பட்டது. எனவே, இவற்றை நிவர்த்தி செய்வதற்காக அரசு, கல்வி நிறுவனம் அதுதொடர்பான அதிகாரிகள் வளங்களைப் பெற்றுக்கொடுத்தல், பயிற்சிகளை வழங்குதல், அவை தொடர்பில் வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்குதல், பாடசாலை உட்கட்டமைப்பு தொழிநுட்ப வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல் போன்ற செயற்பாடுகளூடாக நிவர்த்திக்க முடியும் என்ற விதந்துரைப்புக்களும் முன்வைக்கப்படுகின்றன.

***திறவுச் சொற்கள்:*** *தொழினுட்பம், இணையவழிக்கற்றல், இணையவழிச்சாதனங்கள், வினைத்திறனான பயன்பாடு*

# FACTORS AFFECTING SRI LANKAN CHILDREN'S CONCEPTION OF CONSERVATION AND SPACE

**T. Mukunthan ,D.D.I.Deepthinee Dediwala**
Department of Early Childhood and Primary Education
The Open University of Sri Lanka, Nawala, Nugegoda
tmuku@ou.ac.lk

Conservation and Space are very important concepts for children's life. These concepts are helping the children learn mathematics and science subjects later. Jean Piaget also given more priority to these concepts in his study. The students' performance in mathematics and science are very low in Sri Lanka. Therefore, this study identified factors affected to Children conception of Conservation and Space. The researchers selected 87 children for this study as sample from three different sectors (urban, rural and estates). The ultimate sampling units of the study selected were 75 primary school children between the ages of 5-10 years. They represented the age ranges: 5-6, 6-7, 7-8, 8-9 and 9-10 years. The clinical methods used to identify their conception about Conservation and Space. Then, interview with parents and observation of children' home environment were used to identify the factors affect children's conception of conservation and space. From the data collected on child's home and school environment the following nine variables were tested against the total score children had obtained for conservation and spatial tasks. Kruskal-Wallis non-parametric Analysis of Variance test used to identify the factors. 'Child has siblings', 'Mother's education level' and 'Family type' (extended or nuclear) have an effect upon the development of conservation abilities in Sri Lankan children. 'Child has siblings' 'Mother's education level', 'Family type' (extended or nuclear) and 'Teachers' experience' have an effect upon the development of spatial abilities in Sri Lankan children.

***Key Words:*** *Space, Conservation, Children, Performance, Students*

# ENSURING EQUITY IN EDUCATION THROUGH THE 13 YEARS GUARANTEED EDUCATION PROGRAMME

**S. Sritharan**
Paddiruppu Zonal Education Office,
Kaluwanchikkudy,
ssritharanzde@gmail.com

The Ministry of Education (MoE) in Sri Lanka has introduced a key policy initiative to strengthen equity in education by guaranteeing equitable learning opportunities for all children, regardless of disparities. To achieve this goal, the MoE launched the "13 Years of Guaranteed Education" program (13YGEP) in 2017, targeting the Grade 12 and 13 curriculums for GCE O/L dropout students. The program aims to provide opportunities for students who fail the G.C.E O/L to qualify for GCE A/L and continue their school education by pursuing vocational subjects. This study is based on a sample of 40 teachers, 40 principals, 10 SLEAS officers, 2 Divisional Directors, 40 PSI coordinators, and all 40 SDEC members involved in the program. The primary objective of this study is to examine the implementation of the 13YGEP in schools within the Paddiruppu education zone. Specifically, it aims to assess the effectiveness of the 13YGEP in promoting equity and equal opportunities in education for all children. The findings of this study reveal that teachers, school principals, and educational administrators generally lack a comprehensive understanding of the 13YGEP's significance and its proper implementation within schools. In this context, this study intends to provide practical guidelines for enhancing the effectiveness of the 13YGEP in fostering equity in education across all schools. Data analysis employed graphical data analysis techniques. The findings indicate that 11.55% of the students who followed the program were enrolled, while 88.46% of the students were not enrolled in the last six years because these students dropped out from the 13YGEP program. The small sample size, limited geographical coverage, and short-term experience with the program are the key limitations of this study. Such surveys should be conducted continuously to monitor equity and equal opportunities for all in education through this program.

***Keywords:*** *Ensuring Equity, Education, 13 Years Guaranteed Education*

# Politics and Human Rights

# சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்களுக்கிடையிலான மோதல்களும் நல்லிணக்க முயற்சிகளும் - இலங்கையில் இடம்பெற்ற முக்கிய கலவரங்களை மையப்படுத்திய ஆய்வு

**பாத்திமா நவாஸ்தீன், பேரின்பம் சச்சிதானந்தம்**
ஒப்பீட்டுச் சமயமும் சமூக நல்லுறவும் துறை,
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.
Mnfathima6@gmail.com

பல்லினக் கலாசாரங்கள் பின்பற்றப்படுகிற இலங்கை நாட்டில் நல்லிணக்கம் என்பது அவசியமாகின்றது என்பதனால் மக்கள் நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கு முயற்சித்தாலும் இடையிடையே மோதல்கள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதென்றாகும். அந்தவகையில் சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்களுக்கிடையில் 1915ம் ஆண்டு துளிர்விடப்பட்ட மோதல்கள் யுத்தத்திற்குப் பின்னர் மிக வேகமாக அதிகரித்துள்ளதால் அவை பற்றி ஆராய்வது காலத்தின் தேவையாகவுள்ளது. அத்துடன், இரண்டாம் நிலைத் தரவுகளை ஆய்வு அணுகு முறைகளாகக் கொண்டு, நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள், ஆய்வுக் கட்டுரைகள், பத்திரிகைகள் என்பவற்றின் துணையுடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல்லினக் கலாரச் சூழலில் இரண்டு இனத்தவர்களிடையேயும் இடம்பெற்ற கலவரங்கள் தனி நபர்கள், தனிக் குழுக்கள் சார்ந்ததாகத் துவங்கிப் பின்னராகச் சமூங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற விதத்திலான கலவரங்களாக மாற்றமடைந்தன. பேசித் தீர்த்துக்கொள்ள முடியுமான அநேக மோதல்கள் புரிந்துணர்வின்மை, அடிப்படைவாதச் சிந்தனைகள், இனவாதம் என்பன போன்ற பல்வேறு காரணங்களினால் பாரிய கலவரங்களாக வீரியமடைந்தன. மோதல்களால் உடல், உள, சமூக, பொருளாதார, கலாசார ரீதியாகப் பல்வேறுபட்ட பாதிப்புக்கள் ஏற்பட்டன. அத்துடன், பல்சமய உரையாடல், இளைஞர்கள் மத்தியிலான நல்லிணக்க முயற்சிகள், கல்வித்துறை சார்ந்த செயற்றிட்டங்கள், கலாசார நிகழ்வுகள் போன்ற பல்வேறுபட்ட வழிமுறைகளில் நல்லிணக்க முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்களுக்கிடையில் இடையிடையே பல்வேறு மோதல்களும் அத்துடன் கலவரங்களும் ஏற்பட்ட போதும் கூட நல்லிணக்கத்திற்கான முயற்சிகளின் காரணமாக இணக்கப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. எனவே, உரிய திட்டங்களையும், வழிவகைகளையும் மேற்கொள்வதனூடாக மோதல்கள் மற்றும் பிரச்சினைகள் இல்லாத நல்லிணக்கமான சமூகத்தினையும் சூழலையும் உருவாக்கலாம்.

***திறவுச் சொற்கள்:*** *மோதல்கள், கலவரங்கள், சமூகம், நல்லிணக்கம், பன்மைத்துவம்*

# மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமையும் பிரயோகமும்: பதுளைத் தேர்தல் மாவட்டத்தில் 2015ஆம் 2020ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**செல்லதுரை புஸ்பகுமார், ஆறுமுகம் யோகராஜா**
சமூக விஞ்ஞானங்கள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*siva7pk@gmail.com*

நவீன ஜனநாயக அரசின் இறைமையானது மக்களுக்கு சொந்தமானதாகும். மக்கள் இறைமை என்ற எண்ணக்கருவானது அரசின் மீயுயர் அதிகாரத்தின் உரித்து மக்களுக்கு சொந்தமானது என்பதாகும். மக்களாட்சி தத்துவங்களில் ஒன்றாக வாக்குரிமை காணப்படுகின்றது. இவ் விலைமதிக்க முடியாத வாக்குரிமையின் பிரயோகமானது ஆக்கபூர்வமானதாக அமைய வேண்டியது அவசியமாகும். அண்மை காலங்களில் இலங்கையில் வாக்குரிமையின் பிரயோகம் தொடர்பிலான விடயங்கள் பெரிதும் பேசப்பட்ட ஒன்றாக காணப்படுகின்றது. இலங்கையில் மலையக தமிழ் வாக்களார்களில் பெரும்பாலானவர்கள் பெருந்தோட்டங்களிலேயே வாழ்கின்றனர். ஆதலால் தங்கள் வாழ்கையினை முன்னோக்கி நகர்த்திச் செல்ல தங்களது அரசியல் பிரதிநிதிகளை சார்ந்திருப்பது இன்றியமையாததாக காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் பதுளை தேர்தல் மாவட்ட மலையக தமிழ் வாக்காளர்கள் தமது வாக்குரிமையின் பிரயோகம் தொடர்பில் காட்டும் அசமந்தமான போக்கு அவர்களுடைய பிரதிநிதித்துவத்தில் தாக்கம் செலுத்துவதாகக் காணப்படுகின்றது. இம் மக்கள் தங்களுக்காக இரண்டு தமிழ் பிரதிநிதித்துவத்தை பெற்றுள்ள நிலையில் தமக்கான மேலதிகமாக ஒரு பிரதிநிதித்துவத்தை பெற வேண்டிய நிலையில் அவ்வாய்ப்பினை 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தவறவிட்டனர். இப்பிரச்சினையினை மையமாகக் கொண்டு இவ்வாய்வு இடம்பெற்றுள்ளது. இவ்வாய்வினூடாக வாக்குரிமையின் முக்கியத்துவம் தொடர்பான விளிப்புணர்வு, 2015ஆம் ஆண்டு, 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல்களில் இம்மக்களின் வாக்குரிமையின் பிரயோகம், பிரதிநிதிகளுடைய செயற்பாடுகள் என்பன நோக்கங்களாகக் கொண்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கான முதலாம் நிலைத்தரவுகள் வினாக்கொத்து மூலமாகப் பெறப்பட்டுள்ளதோடு, இரண்டாம் நிலைத்தரவுகள் ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள், அறிக்கைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றில் இருந்து பெறப்பட்டுள்ளது. சேகரிக்கப்பட்ட தரவுகள் Excel மென்பொருள் ஊடாக பண்புசார் மற்றும் அளவுசார் முறைமைகளில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பண்புசார் தரவுகள் விபரண ரீதியிலான முறையிலும் அளவுசார் தரவுகள் எளிய புள்ளிவிபர முறையிலும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்***: *தேர்தல், பிரதிநிதித்துவம், வாக்களார்கள், வாக்குரிமை, ஜனநாயகம்.*

# உள்நாட்டு யுத்தத்திற்குப் பின்னரான மனித உரிமை மீறல்கள் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் ஏற்படுத்திய தாக்கங்கள்

**வ. ஜெயலோஜினி**
சமூக விஞ்ஞானங்கள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
jeyvanniyasingam@gmail.com

அரசுகள் தமது தேசிய நலன்களைச் சர்வதேச மட்டத்தில் சாத்தியமாக்கிக் கொள்வதற்கு வெளியுறவுக் கொள்கையை பயன்படுத்துகின்றன. எந்தவொரு நாடும் உலக அரங்கில் தனித்து வாழாது, மற்றைய நாடுகளுடன் தொடர்புகொள்ள வேண்டியது தவிர்க்க முடியாததாயினும் அந்நாட்டின் உள்விவகாரங்களில் ஏனைய நாடுகளின் தலையீடானது மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்பட வேண்டும். இல்லையாயின் ஒரு நாட்டின் சுயாதிபத்தியம், இறைமை என்பன பாதிக்கப்படும். மனித உரிமைகள் என்பது எப்போதும் வெளியுறவுக் கொள்கை விவகாரங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றது. ஒரு நாட்டின் அதிகாரமானது இறைமை வழி இயங்குவதற்கான நெறிமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும். அரசுகள் மனித உரிமைகளில் நம்பிக்கை கொள்ள வேண்டும். இல்லையாயின், ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் ஏனைய நாடுகளின் தலையீடுகள் தவிர்க்க முடியாததாகிவிடும். ஓர் நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுகையில் அந்நாடு அது பற்றிய பொறுப்புக்கூறலை செய்யவைப்பதற்கும் சர்வதேசத்தின் பங்கு இன்றியமையாது. இலங்கையானது நீண்டகால யுத்தத்தின் பின்னரான மனித உரிமை மீறல்களின் விளைவால் சர்வதேசத்தின் அழுத்தத்திற்கு உள்ளாகித் தனது அபிவிருத்திற்கும், பாதுகாப்பிற்கும் சர்வதேச நாடுகளில் தங்கியிருக்கும் ஓர் நிலை உருவாகியது. இது ஆரோக்கியமற்ற ஓர் நிலைப்பாடாகும். இந்நிலை இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் பாரிய தாக்கத்தைச் செலுத்துவதோடு அதனை வெற்றிகொள்ளும் வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இவ்வகையில், யுத்தத்தின் பின்னரான இலங்கையின் மனித உரிமை நிலையானது இலங்கையின் வெளியுறவுக்கொள்கையில் எவ்வாறான நேர்க்கணிய மற்றும் எதிர்க்கணிய விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பது பற்றி இங்கு ஆராயப்படுகின்றது. யுத்தத்திற்கு பின்னர் இலங்கையில் நிகழும் மனித உரிமை மீறல்கள் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் பல நாடுகள் தலையிடுவதற்கு ஏதுவாகின்றன. இதன் மூலம் சர்வதேச ரீதியில் இலங்கை அழுத்தங்களுக்கு உள்ளாவதுடன் வெளியுறவுக் கொள்கையிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. இதன்விளைவாக இலங்கையின் சுதந்திரம், இறைமை, சுயாதிபத்தியம், தன்னாதிக்கம் பாதிக்கப்படுகின்றன. சர்வதேச அழுத்தங்களினால் இலங்கை அரசானது தன்னைப் பாதுகாத்துக்கொள்ளக் கூடிய நாடுகளின் பக்கமாகத் தனது வெளியுறவுக் கொள்கையை வகுக்கின்றது. இதன் காரணமாக சுய பாதுகாப்பிற்காக ஏனைய நாடுகளிடம் தங்கியிருக்க வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாய்வானது பண்பு ரீதியான ஆய்வு முறையினைப் பயன்படுத்தி செய்யப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *தேசிய பாதுகாப்பு, தேசிய நலன், சர்வதேச சமூகம், சர்வதேச விசாரணை, பொறுப்புக்கூறுதல்*

# PANEL OF REVIEWERS

| | |
|---|---|
| 1. Prof. V. Gunaretnam | Eastern University, Sri Lanka |
| 2. Prof. T. Krishnamohan | Eastern University, Sri Lanka |
| 3. Prof. V. Inpamohan | Eastern University, Sri Lanka |
| 4. Prof. S. Santhirasegaram | Eastern University, Sri Lanka |
| 5. Prof. K Rajendram | Eastern University, Sri Lanka |
| 6. Prof. S. Jeyasankar | Eastern University, Sri Lanka |
| 7. Prof. Suresh Kanesh | Eastern University, Sri Lanka |
| 8. Prof. K.T. Ganeshalingam | University of Jaffna |
| 9. Prof.Vigneswary Pavanesan | University of Jaffna |
| 10. Prof.T. Thanaraj | Sri Lanka Institute of Information Technology (SLIIT) |
| 11. Prof.T.Mukunthan | Open University of Sri Lanka |
| 12. Prof. ALM. Riyal | South Eastern University of Sri Lanka |
| 13. Prof. SM. Ayoob | South Eastern University of Sri Lanka |
| 14. Prof. MAM. Fowsar | South Eastern University of Sri Lanka |
| 15. Dr.S.Yogarajah (Retired Prof) | Eastern University, Sri Lanka |
| 16. Dr.C.Arulmoly (Retired Prof) | Eastern University, Sri Lanka |
| 17. Dr. S. Kesavan | Eastern University, Sri Lanka |
| 18. Dr. M. Nadira | Eastern University, Sri Lanka |
| 19. Dr. S.Umashankar | Eastern University, Sri Lanka |
| 20. Dr. Jeyaranjini Gnanathas | Eastern University, Sri Lanka |
| 21. Dr.R. Premkumar | Eastern University, Sri Lanka |
| 22. Dr.S. Karunakaran | National Institute of Education |
| 23. Dr.M. B. Fowzul | Eastern University, Sri Lanka |
| 24. Dr.A.Vimalraj | Eastern University, Sri Lanka |
| 25. Dr. S. Baskaran | University of Peradeniya |
| 26. Dr. P Sarawanakumar | University of Peradeniya |
| 27. Dr. S.Jeevasuthan | University of Jaffna |
| 28. Dr. A.Nithlavarnan | University of Jaffna |
| 29. Dr. B. Sathiyamoorthy | Madurai Kamaraj University |
| 30. Dr.V.Muthulakshmi | GTN Arts College, Dindigul |
| 31. Dr. M. Riswan | South Eastern University of Sri Lanka |
| 32. Mr. C. Sivanayagam | Eastern University, Sri Lanka |
| 33. Mrs. R. V. Francis | Eastern University, Sri Lanka |
| 34. Mr. M. Ravi | Eastern University, Sri Lanka |
| 35. Mr. P. Sachithanantham | Eastern University, Sri Lanka |
| 36. Mrs. P. Moses | Eastern University, Sri Lanka |
| 37. Mr. S. Jeganathan | Eastern University, Sri Lanka |
| 38. Mr. R. Sahayaseelan | Eastern University, Sri Lanka |
| 39. Mr. K. Mathiseelan | Eastern University, Sri Lanka |
| 40. Mr. R. Kiruparajah | Eastern University, Sri Lanka |

| | |
|---|---|
| 41. Mr. G. Vigneswaran | Eastern University, Sri Lanka |
| 42. Mr. A. Yogarajah | Eastern University, Sri Lanka |
| 43. Mr. S. K. Shivahaneshan | Eastern University, Sri Lanka |
| 44. Mr. A. L. M. Mujahid | Eastern University, Sri Lanka |
| 45. Mr. V. Alagaratnam | Eastern University, Sri Lanka |
| 46. Rev. Fr. A. A. Navaretnam | Eastern University, Sri Lanka |
| 47. Mr. A. Kanneraj | Eastern University, Sri Lanka |
| 48. Mrs. T Sachithanantham | Eastern University, Sri Lanka |
| 49. Mr. C. Sasitharan | Eastern University, Sri Lanka |
| 50. Mr. K. Ravichandran | Eastern University, Sri Lanka |
| 51. Mrs. V. Selvanayagam | Eastern University, Sri Lanka |
| 52. Mrs. R. Thakshaayini | Eastern University, Sri Lanka |
| 53. Mr. N. Vaman | Eastern University, Sri Lanka |
| 54. Mrs. Vijitha Thivakaran | Eastern University, Sri Lanka |
| 55. Mr. K. Thiruchenthuran | Eastern University, Sri Lanka |
| 56. Ms. Soba Balasundaram | Eastern University, Sri Lanka |
| 57. Mr.Shandru Mariyadas | Eastern University, Sri Lanka |
| 58. Mr.K.Gnanaretnam | Open University of Sri Lanka |
| 59. Mr.K.Ketheeswaran | Open University of Sri Lanka |
| 60. Mr.R.Rajeshkannan | University of Jaffna |
| 61. Mr.S.Sivakanthan | University of Jaffna |
| 62. Mr.T.Vigneswaran | University of Jaffna |
| 63. Mr.S.Thiruchchenthuran | University of Jaffna |
| 64. Mr. S. Ramanarajah | University of Jaffna |
| 65. Mr. V. Vijayabaskar | University of Jaffna |
| 66. Mr.R.Sarveswara | University of Jaffna |
| 67. Mr.S.Nirosan | University of Jaffna |
| 68. Mr.T.Thileepan | University of Jaffna |
| 69. Mr. N. Subaraj | South Eastern University of Sri Lanka |
| 70. Fr. Ronson CMF | Claretian Congregation |